ISSN : 2455-0531

இனம்

(இனம் இனத்தைச் சேரும்)

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 2 இதழ் : 6, ஆகஸ்ட் 2016 Vol. II Issue 6, August 2016



அடையாளம் க.வெள்ளைவாரணனார் நா.செல்வராசு க.பாலாஜி

அ.சாஜிதாபேகம் இ.ஜெனிபா மேரி ந.இராஜேந்திரன்

inam:International Research E_Journal Tamil Studies

Inam ISSN : 2455 - 0531

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

ஆசிரியர்குழு

முனைவர் சிலம்பு நா. செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ஆ. மணி (புதுச்சேரி)
முனைவர் க. பாலாஜி (கோவை)
முனைவர் ந. இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி. இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப. சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச. முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா. விஜய ராஜேஸ்வரி (கேரளா)

இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

ஆகஸ்ட் 2016 மலர் : 2 இதழ் : 6
August 2016 Volume II Issue 6

உள்ளே ...

அடையாளம் : சிதம்பர அடிகள் நூலகம்
முனைவர் அருவி. தேன்மொழி | 3

தொல்காப்பியனார் காலம்
க. வெள்ளைவாரணனார் | 14

நற்றிணைப் பாடவேறுபாடுகளினூடாக வரலாற்று மீட்டெடுப்பும் வரலாற்றெழுதுதலும்
முனைவர் க. பாலாஜி | 19

கண்ணகி மரபு: தமிழ் இன அடையாள உருவாக்கமும் அடையாள அழிப்பின் அரசியலும்
முனைவர் சிலம்பு நா. செல்வராசு | 28

சங்க இலக்கியத்தில் தாய்வழிச் சமூகக்கூறுகள்
முனைவர் ஆ. சாஜிதாபேகம் | 57

மகளிர் வர்ணனைவழி மிதவை மகளிரின் சமூகநிலை
இ. ஜெனிபா மேரி | 71

பழந்தமிழ் இலக்கிய முகப்புப் படங்கள்
முனைவர் ந. இராஜேந்திரன் | 78

...

சிதம்பர அடிகள் நூலகம்

(தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர்)

முனைவர் **அருவி.தேன்மொழி,**

தமிழ் – உதவிப் பேராசிரியர், இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி,
கோயமுத்தூர்.

கொங்கு மணம் கமழும் கோவையில், இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலைச்சாலையில், நொய்யல் ஆற்றின் தென்கரையில் எம்பெருமான் பட்டீசுவரர் - பச்சைநாயகி குடிகொண்டு அருள் வழங்கும் அற்புதத் தலமாக விளங்குவது பேரூர். 'பிறவா நெறி' என்றும் 'மேலைச் சிதம்பரம்' என்றும் போற்றப்படும் இவ்வூரில் சிவநெறியும், பக்திநெறியும் நிறைந்து விளங்குகிறது. இத்தகைய சிறப்புப்பெற்ற பேரூர் கோவையிலிருந்து சிறுவாணி, பூண்டி செல்லும் சாலையில் சுமார் 20கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் செந்தமிழ்க் கல்லூரியாகத் தொடங்கப்பெற்று கலை அறிவியல் கல்லூரியாக வளர்ந்துள்ள தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியில் நூலகமாகச் செயல்பட்டுவரும் 'சிதம்பர அடிகள்' நூலகத்தின் உயர்தனிச் சிறப்பினை அடையாளப்படுத்துவதாய் இக்கட்டுரை அமைகிறது.

செந்தமிழ்க்கல்லூரி - உருவாக்கம்

தமிழ்மொழி மீது மாறாப் பற்றுக் கொண்ட தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் கொங்கு நகரமாம் பேரூர்த் தலத்தில் செம்மொழித் தமிழின் வளம் பெருக்கவும், சமயநிலை உயரவும் செந்தமிழுக்கென தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியைப் பேரூராதீனத்தில் 24.05.1953இல் மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் தலைமையில் குன்றக்குடி அடிகளாரால் தொடங்கப்பெற்றது என்றும், அறியாமை இருளை அகற்றும் கல்வி என்னும் பெருஞ்செல்வத்தை ஏழை எளிய மாணவர்களும் பெற்று வளர உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் பெருமகனார் இக்கல்லூரியைத் தொடங்கினார்.

சிதம்பர அடிகள் நூலக உருவாக்கம்

பேரூராதினத்தில் தவத்திரு சாந்தலிங்கர் சைவத் திருமடத்தைத் தொடங்கிய காலம் (1914 – 1915) முதற்கொண்டே சிதம்பர அடிகள் நூலகம் செயல்பட்டு வந்துள்ளது. அதன் பின்பு கல்லூரியில் பயிலும் மாணவர்கள் தமது அறிவுத் தேடலுக்கு வேண்டிய நூல்களை விலை கொடுத்து வாங்காமல் இலவசமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் 'சிதம்பர அடிகள்' நூலகத்தைக் கல்லூரியுடன் இணைக்க எண்ணினர். அதன் விழைவாக 1958ஆம் ஆண்டு அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம் அவர்கள் தொடங்கி வைக்க, அன்றைய தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் 'கர்மவீரர் காமராசர்' அவர்களை அழைத்து திறந்து வைத்துள்ளனர். இதனைக் கல்லூரியின் நுழைவு வாயிலில் பதிக்கப்பெற்றுள்ள அடையாளக் கல்வெட்டுவழி அறிமுடிகிறது.



நூலகத்தில் படிக்கின்ற சூழல்

பசுமை சூழ்ந்த தென்னை மரங்களும், வாழை மரங்களும் நிறைந்திருக்கும் தோப்பும், சாந்தலிங்கப் பெருமான் ஜீவசமாதிமீது எம்பெருமான் லிங்கத் திருமேனி பதிக்கப்பெற்றிருக்கும் திருக்கோயிலுடன் இனிய அமைதியான சூழ்நிலையில் நல்ல காற்றோட்டமான இடத்தில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிக்குள் சிதம்பர அடிகள் நூலகம் சுமார் 2700 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ளது.

நூற்சேர்க்கையும் அன்பளிப்பும்

எழுமாத்தூர் வேலம்பாளையம் புலவர் இரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் என்னும் சான்றோர் தமிழ்கூறும் நல்லுலக மக்களாம் தமிழறிஞர் பெருமக்களுக்கு என்றென்றும் பயன்படவேண்டும் என்ற நல்நோக்கத்தோடு 1960ஆம் ஆண்டு தமிழ்க் கல்லூரி

நூலகத்திற்கு 1700-க்கும் மேற்பட்ட பழமையான தமிழ் நூல்களையும், தான் தொகுத்த 350-க்கும் மேலான பழைய ஓலைச்சுவடிகளையும் அன்பளிப்பாக வழங்கினார். இவற்றைக் கொண்டு விரிவுபடுத்தப்பட்ட இந்நூலகம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி நீடு நிலைத்து விளங்கி இன்றளவும் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பயன்பட்டு வருகின்றது.



நூற் பொருண்மை

தற்போது இந்நூலகத்தில் தமிழ் இலக்கிய நூல்கள், ஆங்கிலம், கணிதம், வணிகவியல், பொருளாதாரம், கணக்குப்பதிவியல், கணினி அறிவியல், பொதுஅறிவு எனப் பல்துறை சார்ந்த 26,700க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இவற்றுள் உள்ள தமிழ் நூல்களை இலக்கியம், இலக்கணம், நாடகம், நாவல், கவிதை, சிறுகதை, உரைநடை, சான்றோர் வரலாறு, மொழியியல், திறனாய்வு நூல்கள், தலவரலாறு, புராணங்கள், கோயிற்கலை, இசைநூல்கள், மருத்துவ நூல்கள், சமயம், தத்துவம், பயண இலக்கியம், ஆய்வுக்கோவைகள், அகராதிகள், நிகண்டுகள் எனப் பல்வேறு பொருண்மையில் DDC (Dewy Decimal Classification) என்ற வகைமையில் வரிசைப் படுத்தியுள்ளனர்.

அரிய நூல்கள்

தமிழ்மொழியின் பெருமையைப் பறைசாற்றும் அரிய, பழமையான நூல்களை இந்நூலகத்தில் ஏராளமாகக் காணமுடிகிறது. அவற்றுள் சில வருமாறு:

- நெல்லையப்ப பிள்ளையவர்கள் அருளிச்செய்த திருநெல்வேலித் தலபுராணம் *(1869)*
- மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய காசி ரகசியம் மூலமும், கா.திருச்சிற்றம்பல ஞானியவர்கள் இயற்றிய உரையுடன் *(1881)*
- சரஸ்வதி மகால் வெளியிட்ட தனிப்பாடற்றிரட்டு பொழிப்புரையுடன்*(1888)*
- பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்கினியருரையும் *(1889)*
- தாண்டவராய முதலியார் பதிப்பில் சேந்தன் திவாகரம் மூலபாடம் *(1891)*

- சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணம் சுப்பராயநாயகரவர்கள் பொழிப்புரையுடன் *(1893)*
- ஈக்காடு இரத்தினவேலு முதலியார் இயற்றிய சிறப்புப் பெயரகராதி *(1908)*
- அருணந்தி சிவாசாரியார் அருளிச்செய்த சிவஞான சித்தியார் சுபக்கம் மூலமும், *மாதவச் சிவஞானயோகிகள் உரையுடன் (1914)*
- பிங்கல முனிவர் இயற்றிய பிங்கலத்தை என்னும் பிங்கல நிகண்டு மூலமும் உரையும் *(1917)*
- மெய்கண்ட தேவநாயனார் அருளிச்செய்த சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் பொ.முத்தையாபிள்ளை எழுதிய விளக்கத்துடன் *(1918)*



- சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் *(1920)*
- ஸ்ரீகாசிவாசி செந்திநாதையர் இயற்றிய சைவவேதாந்தம் (1920)
- ஸ்ரீமதி சம்பந்த சரணாலய சுவாமிகள் அருளிச் செய்த மூலமும், மகாவித்வான் சபாபதி முதலியார் இயற்றிய பொழிப்புரையுடன் கந்தபுராணச் சுருக்கம் (இரண்டாம் பதிப்பு *1925)*
- மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான் மு.ரா. அருணாசலக் கவிராயரால் இயற்றப்பெற்ற பரங்கிரிப் பிரபந்தத் திரட்டும் குறிப்புரையும் *(1927)*
- ஸ்ரீகுலசேகராழ்வார் அருளிச்செய்த பெருமாள் திருமொழி (1930)
- கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணி மூலமும் உரையும், உ.வே.சா. எழுதிய குறிப்புகளுடன் *(1930)*
- பரஞ்சோதி முனிவர் அருளிய மதுரை யறுபத்து நான்கு திருவிளையாடற் புராணம் *(1931)*
- நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழி (1933)
- வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய மகாபாரதம் ஆதிபருவம் மூலமும், ஆறுமுக நாவலரவர்கள் உரையும் *(1934)*
- காசிவாசி சிவானந்த யதீத்திர சுவாமிகளால் மொழிபெயர்க்கப்பட்ட சாமவேத சங்கிதை சாயண பாடியம் இரண்டாம் பாகம் *(1935)*
- ஸ்ரீசிவாக்கிய யோகிகள் அருளிச்செய்த சிவநெறிப்பிரகாசம் ஸ்ரீநந்தி சிவாக்கிரயோகிகள் இயற்றிய உரையோடு *(1936)*
- டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி எழுதிய குறிப்புரையுடன் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் *(1937)*
- பாரி காதை, பாஷா கவிசேகர் ரா.இராகவையங்கார் இயற்றியது *(1937)*

- சிரவணபுரம் கௌமார மடாலயம் ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள் அருளிய வெள்ளிங்கிரி - தோத்திரப் பிரபந்தம் *(1938)*
- மேலகரம் திரிகூடராஜப்பக் கவிஜராயர் இயற்றிய திருக்குற்றால யமக வந்தாதி, திருக்குற்றால உலா, திருக்குற்றால சிலேடை வெண்பா *(1939)* மெய்கண்டார் இயற்றிய மெய்கண்ட சாத்திரம் (சித்தாந்த சாத்திரம்) (1942)
- குலசேகரப்பட்டினம் போடிபட்டி ஸ்ரீ அருணாசல சுவாமிகளின் சீடர் திருத்தேவர் பழநியப்ப கவுண்டர் இயற்றிய பரமாத்துவித சித்தாந்தம் கட்டளையும் அனன்ய ஸ்தார்ய வாதமும் (1947)
- பன்னிருபாட்டியல் - மேற்கோள் சூத்திரங்களுடன் (1949)
- ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனார் அருளிச்செய்த சைவச்சிறு நூல்கள் முதற்பகுதி (1954)
- திருக்குறள் விரிவுரை அறத்துப்பால் – இல்வாழ்க்கை இயல் - உரையாசிரியர் திருவாளர் திரு.வி.கலியாண சுந்தரனார் *(*1959)
- கவிராசஷஸ ஸ்ரீகச்சியப்பமுனிவர் இயற்றிய பேரூர்ப்புராணம் பொழிப்புரையும் - குறிப்புரைகளுடன் *(1969)*
- காக்கைபாடினியம் மூலமும் புலவர் இரா.இளங்குமரன் அவர்கள் இயற்றிய விளக்கச் சிற்றுரையும் (1974)
- திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் (1976)
- கவிராசஷஸ ஸ்ரீகச்சியப்பமுனிவர் இயற்றிய பேரூர்ப்புராணம் *(1969)*தே.கருணாகரக் கவிராயர் இயற்றிய திருவோத்தூர்ப் புராணம் *(1990)*
- மாதவச் சிவஞானயோகிகள் அருளிச்செய்த சிவஞான மாபாடியம் (பதிப்பு ஆண்டு இல்லை)
- இளங்கோவடிகள் இயற்றியருளிய சிலப்பதிகார மூலமும் நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் இயற்றிய உரையுடன் (பதிப்பு ஆண்டு இல்லை)

இத்தகைய அரிய நூல்களோடு உலகப் பொதுமறையாம் திருக்குறளும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக நூலகத்தில் தனிநிலைப்பேழையில் (Rack) வைத்துள்ளனர். இவைகளன்றி இன்னும் ஏராளமான பழமையான நூல்கள் (குறிப்பாக தலபுராணங்கள் – 385 எண்ணிக்கைக்கு மேலும்) இடம்பெற்று நூலகத்திற்குப் பெருமை சேர்ப்பனவாக உள்ளன.

கையெழுத்துப் பிரதிகள்

கோவைக்கிழார், தெய்வசிகாமணிக் கவுண்டர் ஆகிய சான்றோர்களின் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில எழுதிய வாழ்க்கைக் குறிப்புகள் கையெழுத்துப் பிரதிகளாக இந்நூலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவை கண்களுக்கும் அறிவுக்கும் விருந்தளிப்பதாக அமைகின்றன.

ஓலைச்சுவடிகள்

பெரும்பங்கு ஓலைச் சுவடிகளைக் கொங்குநாட்டு உ.வே.சா. என்று அழைக்கக் கூடிய புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களும், மற்ற அன்பர்களும் வழங்கியுள்ளனர். அவைகளாவன: இலக்கியம், இலக்கணம், சங்க இலக்கியம், புராணங்கள் (பெரியபுராணம்), சிற்றிலக்கியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், இசைநூல்கள், மருத்துவம், நிகண்டு, சோதிடம், மாந்திரிகம், சித்தாந்த சாத்திரங்கள், மகாபாரதம் கன்னடச் சுவடியும் பெயர் தெரியாத வேறொரு கன்னடச் சுவடியும், சாலங்கராம பரீஷக்ரந்தமு (170, 171), சாலிங்கிராம பரீசைஷ நூல் (169) என்று எழுதப்பெற்ற தெலுங்குச் சுவடியும் என்பன போன்ற பொருண்மைகளில் 407 ஓலைச் சுவடிகளை இந்நூலகம் தன்னகத்தே கொண்டுள்ளது. இத்தைகைய தனிச்சிறப்புப்பெற்ற ஓலைச்சுவடிகளைத் தனி அறையில் தனிப்பட்ட மரப்பேழைகளில் வைத்துக் கூடுதல் கவனத்துடன் பராமரித்து வருகின்றனர்.

தமிழறிஞர் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் தொகுத்து வைத்திருந்த சுவடித்தொகுப்பினின்றும்தான் பஞ்ச மரபு என்னும் நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் நூலாக வெளிவராத ஓலைச்சுவடிகளும் காணக்கிடக்கின்றன.

இசைநூல்கள்

யாழ்நூல், உத்திரகாமிக ஆகமம், கோபாலகிருஷ்ண பாரதியார்இயற்றிய தமிழிசைப் பாடல்கள் (1955), நந்திகேசுவரார் இயற்றிய அபிநய தர்ப்பணம் (1957), எம்.ஜி.குப்புசாமி இயற்றிய சங்கீத தாளராகமாலை (1965) என்பன போன்ற இசைநூல்களும் இந்நூலகத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அகராதிகள்

லெக்சிகன், பவுண்டர், எதுகை அகராதி, சதுரகராதி, சங்கஇலக்கியச் சொல்லடைவு, விண்வெளி அகராதி, கல்வெட்டு கலைச்சொல் அகரமுதலி, ஆட்சிச்சொல் அகராதி, ஆசிரிய நிகண்டு, தமிழ் அகரமுதலி, அறிவியல் களஞ்சியம், சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், செந்தமிழ் சொற்பிறப்பியல், பேரகரமுதலி, அருங்கலைச்சொல் அகரமுதலி, சைவ சமயக் கலைக் களஞ்சியம், தமிழிசைக் களஞ்சியம் எனப்பல அகராதிகள் மாணவர்களின் தேடல்களுக்கு உதவியாக இருக்கின்றன.

நூலகத்தில் பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டுள்ள இதழ்கள்



இந்நூலகத்தில் நூல்கள் தவிர பல்வேறு நாளிதழ்களும், அன்புநெறி, அன்பொளி, அறிவியல் ஒளி, ஆய்வுக் களஞ்சியம், அமைதியும் ஆரோக்கியமும், ஆத்மஜோதி, கலைக்கதிர், காலச்சுவடு, மெய்கண்டார், நட்பு, நமது நம்பிக்கை, சிவசாந்தலிங்கர், சுற்றுச்சூழல் புதியகல்வி, திருச்சிற்றம்பலம், தன்னம்பிக்கை, தமிழ்ப்பணி, தமிழர் பெருமை, தமிழர் திருநெறி, உழவாரம், விஞ்ஞானச்சுடர், வளரும் தமிழகம் என 50-க்கும் மேற்பட்ட மாத இதழ்களும், சுதேசி, தெய்வ முரசு ஞானதீபம், திலகவதியார் திருவருள் ஆதினச் செய்திமடல்,

சிவனருள், Hinduism Today போன்ற இதழ்களும், புதிய தலைமுறை, கலைமகள் ஆகிய வார இதழ்களும் இந்நூலகத்திற்கு வருகை தருகின்றன.

ஆய்வேடுகள்

ஆய்வேட்டிற்கென்றே தனியாக ஒரு பகுதி உள்ளது. இதில் இளநிலை, முதுநிலை ஆய்வை நிறைவு செய்தவர்களின் ஆய்வேடுகள் தனிநிலைப் பேழையில் வைத்துப் பாதுகாத்து வருவதோடு ஆய்வாளர்கள் பார்வையிடவும், பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி அளிக்கின்றனர்.

நூலகத்தின் விதிகள்

தமிழகத்தின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் இளநிலை, முதுநிலை ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்களும், பல்வேறு கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களும் துறைத்தலைவரிடம் அனுமதிக்கடிதம் பெற்று வந்து இந்நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தவிரவும், பிற கல்லூரிகளில் தமிழ் பயிலும் மாணவர்கள் அரிய தமிழ் நூல்களைப் பார்க்க/படிக்க வேண்டும், குறிப்பெடுக்க வேண்டும் என்ற நோக்கில் வருகின்றவர்களுக்கும் அனுமதி வழங்குகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் பல பகுதிகளிலிருந்து 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்நூலகத்திற்கு வந்து பயனடைந்து செல்கின்றனர்.

பிறர் - பயன்பாடுகள்

கல்லூரியில் பயில்கின்ற மாணவர்கள் தவிர ஊர்ப்பொதுமக்களும் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களின் அறிமுகத்தோடு நூல்களை வார இறுதி நாட்களில் வீட்டிற்கு எடுத்துச் சென்று படித்துவர அனுமதி அளிக்கின்றனர். இந்நூல்களைக் கணினியில் பதிவுசெய்தும், நூலகப் பதிவேட்டில் பதிவு செய்து கொண்டும் வழங்குகின்றனர்.

நூலகத்தின் சிறப்பியல்புகளும் செயல்பாடுகளும்

- நூலகத்தின் சிறப்புகள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் குறித்துப் பல்வேறு செய்தித்தாள்களில் இடம்பெற்றுள்ள செய்திகளையும், புகைப்படங்களையும் கோப்பில் சேகரித்து வைத்தல்.

- அரிய நூல்களை வருடி *(Scan)* செய்து கணினியில் பதிவுசெய்து பாதுகாத்து வருதல்
- பாண்டிச்சேரி – பிரெஞ்சு பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் கல்வெட்டியல் / தொல்லியல்துறை சார்ந்த திரு.பாபு என்பவரின் துணையுடன் ஓலைச்சுவடிகளை வருடி *(Scan)* செய்து *அவற்றை* மென்தகட்டில் *(CD)* பதிவேற்றம் செய்து நூலகத்தில் வைத்துப் பராமரித்து வருதல்
- சென்னையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.நசன் அவர்களின் துணையோடு *thamilan.com* என்னும் இணைய இதழின் மூலம் இந்நூலத்திற்கு வரக்கூடிய புதிய நூல்களை இணையத்தில் அறிமுகப்படுத்துதல்.
- *NET, SET, TNPSC, VAO* போன்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை இத்தேர்வில் வெற்றிபெற்றுப் பணியில் இருப்பவர்களை அழைத்து வந்து பயிற்சி வகுப்புகளை நடத்தச் செய்தல்.
- மேலும் இக்கல்லூரியில் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்குரிய அடிப்படை பயிற்சி வகுப்புகளை நடத்த *AV* காணொளிக்காட்சிக்கென்று நூலகத்தில் ஓர்அறையை ஒதுக்கியுள்ளமை.
- மாணவர்களின் தனித்திறமையை வெளிக்கொணரும் விதமாகக் கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம் போன்ற படைப்பிலக்கியங்களைப் பெற்று, அவற்றுள் சிறப்பானவற்றைத் தேர்ந்தெடுத்து நூலகத்தின் அறிக்கைப் பலகையில் *students corner* என்ற பகுதியில் வெளியிடுதல்.
- கண் பார்வை இல்லாத ஒரு மாணவருக்கு நூலகர் திருமதி சா.அபிராமி பாடங்களைக் கற்றுக் கொடுக்கவும், தேர்வு எழுதவும் உதவி செய்து வருதல்.

என்பன போன்ற செயல்பாடுகளுடன் இந்நூலகம் திகழ்கின்றது.

கண்காட்சி

கல்லூரி நிர்வாகத்தின் உறுதுணையோடு நூலகத்தில் தேசிய அளவிலான தொல்லியல் கண்காட்சியை 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20, 21, 22 ஆகிய மூன்று நாட்கள் நடத்தினர். இக்கண்காட்சியைக் கோவை, ஈரோடு, சேலம், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த மாணவர்களும், தொல்லியல் நிபுணர்களும், மொரிசியா, மலேசியா ஆகிய வெளிநாட்டு மக்களும் கண்டு பயனடைந்தனர்.

திருமடத்துடன் இணைந்து நூலகத்தின் பணிகள்

மலேசியா, சிங்கப்பூர், லண்டன், அமெரிக்கா, மொரிசியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து ஆன்மீகப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தமிழகம் வரக்கூடிய

வெளிநாடு வாழ் மக்கள் இங்குள்ள சாந்தலிங்கப் பெருமான் திருமடத்தின் சிறப்புக்களைக் கேள்வியுற்று இங்கு வருகின்றனர். அவ்வாறு வருவோர்யாவரும் 'சிதம்பர அடிகள்' நூலகத்தில் உள்ள ஓலைச் சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும், பழமையான நூல்களையும் கண்டு மகிழ்கின்றனர்.

நூல் வெளியீடு

பேரூராதீனம் தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் சார்பாக 'குமார தேவர்' என்னும் பதிப்பகம் கல்லூரிக்குள் செயல்பட்டு வருகின்றது. இப்பதிப்பகத்தின்வழி கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார் என்பன போன்று சுமார் 200-க்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

தடம்பதித்த சான்றோர்கள்

பேரூராதீனத்தில் உள்ள சிதம்பர அடிகள் நூலகத்திற்குச் சான்றோர் பெருமக்கள் பலர் சொற்பொழிகள் நிகழ்த்துவதற்காகவும், வேள்விகளில் பங்கேற்பதற்காகவும் வருகை தந்துள்ளனர். இவர்களின் வரவால் திருமடமும், நூலகமும் புகழ்பெற்று நிற்கின்றது. அச்சான்றோர்களில் சிலரின் பெயர்கள் வருமாறு: பாரதக் குடியரசுத் துணைத்தலைவர் திரு.பி.டி.ஜாட்டி, முன்னாள் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம், விஞ்ஞானி சந்திராயன், குன்றக்குடி அடிகளார், மறைமலையடிகளார், தவத்திரு சுந்தரசுவாமிகள், மாணிக்க சுவாமிகள், தவத்திரு ஊரன் அடிகள், தவத்திரு பொன்னம்பல அடிகள், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், சிவக்கவிமணி வி.கே. சுப்பிரமணிய முதலியார்,

சோமசுந்தர பாரதியார், சுந்தானந்த பாரதியார், வ.உ.சிதம்பரனார், சொல்லின் செல்வர் சுகிசிவம், கவிஞர் காந்திதாசன் என இவர்களைப்போல் இன்னும் ஏராளமான சான்றோர்கள் இத்தமிழ் தலத்தில் தடம் பதித்துள்ளனர்.

பணியாளர்கள் விவரம்

இந்நூலகத்தில் திருமதி சா.அபிராமி அவர்கள் நூலகராகவும், திருமதி எஸ்.கலைவாணி, திரு.ஆர்.காளியப்பன் ஆகியோர் உதவியாளர்களாகவும் பணியாற்றி வருகின்றனர்.

வேலைநேரம்

அரசு விடுமுறை நாட்கள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் இரண்டாவது சனிக்கிழமை தவிர அனைத்துக் கல்லூரி வேலை நாட்களிலும் காலை 9.15 மணி முதல் மாலை 05.30 மணி வரை இந்நூலகம் செயல்படுகிறது.

பேருந்து வசதிகள்

கோவை காந்திபுரத்திலிருந்து 59, 59A, 14, S14, S17ஆகிய எண்களையும், டவுன்ஹாலிருந்து 02, S3, S4, 54, 39B, 34 ஆகிய எண்களையும் கொண்ட பேருந்துகள் தமிழ்க்கல்லூரி வழியாகச் (பேருந்து நிறுத்தம் – தமிழ்க்கல்லூரி) செல்கின்றன.

கூடுதல் தகவல்களுக்கு ...

செல்பேசி எண் : 8015012316

மின்னஞ்சல் முகவரி : tsanoolagam@gmail.com

வலைதள முகவரி : www.tamiledu.co.in, http://www.tamiledu.co.on

நன்றிக்குரியோர்

தவத்திரு **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்** அவர்கள் **(**பேரூர் ஆதீனம்**).**

தவத்திரு **மருதாசல அடிகளார்** அவர்கள் **(**முதல்வர்**).**

முனைவர் **செல்லத்தாள்** அவர்கள் **(**பேராசிரியர்**).**

முனைவர் **திருநாவுக்கரசு** அவர்கள் (உதவிப்பேராசிரியர்).

திருமதி **சா.அபிராமி** அவர்கள் (நூலகர்**).**

பின்னிணைப்பு : அரிய சில நூல்களின் படங்கள்

















(பிற படங்கள் இணைய முகப்பில் இடம்பெற்றுள்ளன)

தொல்காப்பியனார் காலம்

க. வெள்ளைவாரணனார்

தொடர்ச்சி...

தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்

தொல்காப்பிய விதிக்கு மாறான சொல்வழக்குகள் சில திருக்குறளிலும் சங்கத் தொகை நுல்களிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியனார் காலத்தில் **கள்** என்னும் பன்மை விகுதி அஃறிணையில் மட்டுமே வழங்கியது. **கள்ளொடு சிவணு மவ்வியற் பெயரே, கொள்வழி யுடைய பலவறி சொற்கே**, என வரும் சூத்திரத்தால் இவ்வுண்மை புலனாம். **பூரியர்கள்** (919), **மற்றையவர்கள்** (263) எனத் திருக்குறளிலும், **தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோல** (கலி-26) எனக் கலித்தொகையிலும் உயர்திணைப் பெயரையடுத்துக் கள் விகுதி பயின்று வழங்குவதற்குத் தொல்காப்பியத்தில் விதி கூறப்படவில்லை. அன் விகுதி ஆண்பாற் படர்க்கைக்கே யுரியதெனத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். இவ்விதிக்கு மாறாக **இரப்பன் இரப்பாரை யெல்லாம்** என வருந் திருக்குறளில் அன் விகுதி தன்மை யொருமையில் வழங்குகின்றது. இவ்வாறே **கைவிடுக லேனே** (அகம்-193), **உதவியோ வுடையன்** (அகம்-186), **நினைக்கியான் கிளைஞ னல்லனே** (அகம்-343), **யான் வாழலனே** (அகம்-362), **உள்ளா ராயினு முளனே** (அகம்-378), **மிகுதிகண் டன்றோ விலனே** (அகம்-379), **நனியறிந்தன்றோ விலனே** (அகம்-384), **அமளி தைவந் தனனே, அளியன் யானே** (குறுந்-30), **நீயலன் யானென** (குறுந்-36), **யான் இழந் தனனே** (குறுந்-43), **விடல்சூ ழிலன்யான்** (குறுந்-300), **யான்கண் டனனோ விலனே** (குறுந்-311), **உளனே** (குறுந்-316), **உரைத்தனன் யானாக** (புறம்-136), **அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே** (புறம்-201), **கூறுவன் வாழி தோழி** (நற்-233), **உள்ளின னல்லனோ யானே** (நற்-326), **யான்தொடங் கினனாற் புரந்தரவே** (ஐங்-428) என இவ்வாறு எட்டுத்தொகை நூல்களிலும் அன் விகுதி தன்மை யொருமையில் வழங்கப் பெற்றுளது.[1]

இவ்வாறே தொல்காப்பியத்திற் காணப்படாத புது வழக்குகள் சில சங்க நூல்களிலும் திருக்குறளிலும் காணப்படுகின்றன. **அல்லால்** (குறள்-377), **சூழாமல்** (1024), **செய்யாமல்** (101, 343), **அல்லனேல்** (386), **இன்றேல்** (556), **செய்வானேல்** (655), **வேபாக்**

[1] எதிர்காலம் பற்றி வரும் அல் விகுதியினையே பிற்காலத்தார் அன் ஈறாக வழங்குவர் என நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். எனவே தொல்காப்பியனார் காலத்தில் அன் விகுதி தன்மைக்கண் வழங்கப்பெறவில்லை யென்பதும் மிகவும் பிற்பட்ட காலத்திலேயே அன்னீறு தன்மையொருமையில் வழங்கப்பெற்றிருத்தல் வேண்டுமென்பதும் தெளிவாதல் காண்க.

கறிந்து (1128) எனத் திருக்குறளிலும், **பொருளல்லாற் பொருளு முண்டோ** (14), **கூறாமற் குறித்ததன் மேற்செல்லும்** (1), **முற்றாமல்** (19), **தீராமல், தெருளாமல்** (38) **காணாமல்** (39), **கேளாமை** (108), **காணாமையுண்ட கடுங்கள்ளை** (115), **நில்லாமை நனிவெளவி** (138) எனக் கலித்தொகையிலும் **ஆல், ஏல், மல், மை, பாக்கு** என்னும் இறுதியையுடைய வினையெச்சங்கள் பயில வழங்கப்பெற்றுள்ளன. இவை தொல்காப்பியத்திற் கூறப்படவில்லை. **மாரைக்கிளவியும் பல்லோர் படர்க்கை, காலக் கிளவியொடு முடியுமென்ப** என்ற சூத்திரத்தால் பலர்பாற் படர்க்கையில் வழங்கும் மாரீற்று முற்றுச்சொல் பெயர் கொள்ளாது வினைகொண்டு முடியுமெனத் தொல்காப்பியர் விதித்துள்ளார். இவ்விதிக்கு மாறாக **உடம்பொடுஞ் சென்மார் உயர்ந்தோர் நாட்டே** (புறம்-362) என மாரீறு பெயர் கொண்டு முடிந்துள்ளது. **நிலவன் மாரே புலவர், பாடன்மார் எமர்** (புறம்-375) **காணன்மார் எமர்** (நற்-64) என எதிர்மறையாய் நின்று பெயர்கொண்டு முடிந்தமையும் இவண் கருதற்குரியதாம். அன்றியும் மார் என்னும் இவ்விகுதி தொல்காப்பியர் காலத்தில் வினை விகுதியாகவே வழங்கப்பெற்றுள்ளது. இவ்விகுதி **தோழிமார்** (அகம்-15) எனப் பெயர் மேல் விகுதியாக அகநானூற்றில் ஆளப்பெற்றுள்ளது. இவ்வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இல்லை.

வியங்கோள் வினை, முன்னிலை தன்மையாகிய இரண்டிடங்களிலும் நிலைபெறாதென்பது தொல்காப்பிய விதி. இவ்விதிக்கு மாறான சொன்முடிபுகள் சில சங்கத்தொகை நூல்களில் வழங்கப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் முன்னிலை யசையாகக் குறிக்கப்பட்ட மதியென்பது திருமுருகாற்றுப்படையில் **நல்குமதி** எனப் படர்க்கையில் வழங்கப்பெற்றுள்ளது. முன்னிலைக்குரியதெனச் சொல்லப்பட்ட **மோ** என்னும் அசை, புறநானூற்றில் **சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென** (புறம் – 381) எனத் தன்மைக்கண் ஆளப்பெற்றது.

வருக மாள வென்னுயிர் (அகன்-16), **யாழநின்** (அகம்- 39, 86), **பாடித்தை** (கலி.131), **பலரே தெய்ய வெம்மறை யாதீமே** (ஐங்-64), **நும்மூர்ச் செல்கம் எழுமோ தெய்யோ** (ஐங் -236), **நிலீஇயரத்தை நீ நிலமிசை யானே** (புறம் -166), **அஞ்சுவதோரும் அறனே** (குறள்-366), **காதல் நன்மரநீ மற்றிசினே** (புறம் -272), **பணியுமா மென்றும் பெருமை** (குறள்-978), **ஈங்காயினவால் என்றிசின் யானே** (நச்சினார்க்கினியர் உரை

மேற்கோள்), **குன்றுதொ றாடலும் நின்றதன் பண்பே** (திருமுருகு-217) என இத்தொடர்களில் வழங்கியுள்ள மாள, யாழ, இத்தை, தெய்ய (தெய்யோ) அத்தை, ஓரும், இசின், ஆம், ஆல், தொறு என்பன தொல்காப்பியத்திற் சொல்லப்படாத அசை நிலைகளாம். இவை தொல்காப்பியனார்க்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றி வழக்கில் இடம்பெற்றனவாகும். இவற்றை மேற்கொண்டு வழங்கிய சங்கச் செய்யுட்கள் தொல்காப்பியத்திற்கு நெடுங்காலத்திற்குப் பின் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஒருவன், ஒருத்தி என்னுஞ் சொற்கள் தொல்காப்பியத்தில் வழங்குகின்றன. இவை முறையே ஒத்தன், ஒத்தி எனப் பிற்காலத்தில் திரிந்து வழங்கியுள்ளன. **இஃதொத்தன்** (கலி-103), **இஃதொத்தி** (கலி-143) என வழங்குதல் காண்க.

சகரமெய் அ, ஐ, ஒள என்னும் மூன்றுயிரோடும் கூடி மொழிக்கு முதலில் வாராது என்பது தொல்காப்பிய விதி. **சகடம்** (புறம்-102, அகம்-136), **சடை** (புறம்-1), **சதுக்கம்** (முருகு-25), **சந்து** (மலைபடு -392), **சமம்** (புறம்-14, குறள்-99), **சமன்** (குறள்-118), **சலம்** (மதுரைக்காஞ்சி -112, குறள்-660), **சவட்டி** (பெரும்பாண்-217), **சவட்டும்** (பதிற்-84) எனச் சகர மெய் அகரத்துடன் முதலாகும் சொற்கள் சங்கச் செய்யுட்களில் பயின்று வழங்கியுள்ளன.

யகரமெய் ஆகார வுயிரோடல்லது ஏனைப் பதினோருயிர்களோடும் மொழிக்கு முதலாகாதெனத் தொல்காப்பியங் கூறும். இவ்வரையறைக்கு மாறாக **யவனர்** என்னும் சொல் சங்கச் செய்யுட்களிற் பெருக வழங்கியுளது.

ஞகர மெய் ஆ, ஏ, ஓ என்னும் மூன்றுயிரோடு மட்டுமே மொழிக்கு முதலாம் என்பது விதி. இதற்கு மாறாக **ஞமலி** (புறம்-74, அகம்-140, 388, பட்டினப்-140), **ஞரல** (திருமுருகா-120, பதிற்-30), **ஞமன்** (புறம்-6) என ஞகரமெய் அகரத்தொடு முதலாகும் சொற்களும் **ஞிமிறு** (புறமட-93, அகம்-59) என இகரத்தோடு முதலாகிய சொல்லும் சங்க நூல்களில் வழங்கப் பெற்றுள்ளன.

ஐகாரத்தின் பின் இயல்பாய் வரும் நகரத்துடன் ஞகரம் போலியாய் நிற்கும் மரபு **பைஞ்ஞிலம்** (31) என பதிற்றுப்பத்திலும் **பைஞ்ஞிணம்** என 177 –ஆம் புறப்பாடலிலும்

காணப்படுகின்றது. பிற்காலத்திற் பெருகி வழங்கும் இவ்வெழுத்துப் போலியைப் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை. நான்கு என்னும் சொல் 104-ஆம் அகப்பாடலில் நால்கு எனத் திரிந்து வழங்கியுள்ளது [**நன்னால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்** (அகம்-104)]. நான்கு, நால்கு எனவருந் திரிபு தொல்காப்பியத்திற் சொல்லப்படவில்லை.

ஒன்று முதல் பத்து, நூறு , ஆயிரம் , நூறாயிரம் வரையுள்ள எண்களுக்குத் தொல்காப்பியர் புணர்ச்சி விதி கூறியுள்ளார். நூறுநூறாயிரமாகிய கோடியென்னும் எண்ணினைக் குறித்த புணர்ச்சி விதியைப்பற்றி இகரவீற்றுப் புணர்ச்சியில் குறிப்பிடுதல் முறையாகும். அங்ஙனமாகவும் தொல்காப்பியனார் இவ்வெண்ணினைப்பற்றி யாண்டும் குறிப்பிடாது போயினார். எனவே கோடியென்னும் எண் அவர் காலத்தில் தோன்றி வழங்கவில்லையெனத் தெரிகிறது. **ஒன்றுபத் தடுக்கிய கோடி கடையிரீஇய, பெருமைத் தாகநின் ஆயுள்தானே** (புறம்-18) எனவும், **கோடியாத்து நாடு பெரிது நந்தும்** (புறம்-184) எனவும், **கோடி தொகுத்தார்க்கும்** (குறள்-377) எனவும், **கருதுப கோடியுமல்ல பல** (குறள்-337) எனவும் கோடி என்னும் எண் கடைச்சங்க காலத்திற் பயின்று வழங்கக் காண்கின்றோம். ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தில் கோடி என்னும் இகரவீற்று எண்ணுப்பெயர் வழங்கியிருக்குமானால் ஏனைய எண்ணுப் பெயர்களுக்குப் புணர்ச்சி விதி கூறியது போன்று இதற்கும் விதி கூறியிருப்பர். தொல்காப்பியனார் இவ்வெண்ணுப் பெயரினைக் குறிப்பிடாமையால் அவர் காலத்துக்குப் பின்வந்த தமிழறிஞர்களாலேயே இவ்வெண்ணுப் பெயர் படைத்து வழங்கப்பெற்றதென்பது உய்த்துணரப்படும்.

சங்கச் செய்யுட்களில் அருகிக் காணப்படும் சமய விகற்பங்களைப் பற்றிய குறிப்புக்கள், தொல்காப்பியத்தில் அறவே காணப்படவில்லை. மாயோன், சேயோன், வருணன், வேந்தன் என்னும் நானிலத் தெய்வங்களுடன் வெற்றி விளைக்குங் கொற்றவையும், நிலப்பாகுபாடின்றி எல்லா நிலத்திற்கும் உரியதாகிய கடவுளும் தமிழர்களால் வழிபடப்பெற்ற தெய்வங்களாகத் தொல்காப்பியனார் குறிப்பிடுகின்றார். கடைச்சங்க நாளில் **காரியுண்டிக் கடவுள்** எனவும், **மாற்றருங் கணிச்சி மணிமிடற்றோன்** எனவும், **முக்கண்ணான்** எனவும், எல்லாம்வல்ல இறைவனை உருவநிலையில் வைத்துப் போற்றும் வழிபாடு பெருகிக் காணப்படுகின்றது. திருமால் வழிபாட்டில் **செங்கட்காரி** (வாசுதேவன்), **கருங்கண் வெள்ளை** (சங்கருடணன்) **பொன்கட் பச்சை** (பிரத்தியும்நன்), **பைங்கண்மால்** (அநிருத்தன்) எனவரும் நால்வகை வியூகமும் பரிபாடலிற் சொல்லப்பட்டுள்ளன.

சிவன், பலதேவன், திருமால், முருகன் ஆகிய நால்வரையும் **ஞாலங் காக்கும் காலமுன்பின் தோலாநல்லிசை நால்வர்** எனக் கடைச் சங்ககாலத் தமிழர் பரவிப் போற்றினர். இந்நாற்பெருந் தெய்வங்களுக்குரிய கோயில்கள் தமிழ்நாட்டுப் பேரூர்களில் அமைக்கப் பெற்றிருந்த இயல்பினை இளங்கோவடிகளும் சாத்தனாரும் தம் நூல்களில் விளக்கியுள்ளார்கள். பலதேவன், ஞாயிறு, காமன், சேயோன், சிவன் ஆகிய தெய்வங்களைத் **தீதுதீர் சிறப்பின் ஐவர்கள்** எனப் பெருங்கடுங்கோ பாராட்டுகின்றார். காமன் வழிபாடு கடைச்சங்க காலத்திற் சிறப்புற்று விளங்குகிறது. காமன் தொல்காப்பியத்திற் சொல்லப்படாத புதுத் தெய்வமாவான். சமண புத்த சமயங்களைப் பற்றிய குறிப்புக்கள் கடைச்சங்க நூல்களில் இடம்பெற்றுள்ளன. 2500 ஆண்டுகளுக்கு முன் சமணர்களும் புத்தர்களும் தமிழ்நாட்டில் இடம்பெறவில்லை. எரிவலஞ் செய்தல் முதலிய ஆரிய நாகரிகத்தினை ஒரு சிலர் மேற்கொண்டொழுகினமை சங்கத்தொகை நூலில் விரித்துரைக்கப் பெறுகின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தில் வடவர் நாகரிகம் தமிழ் மக்களால் அறிந்து மதிக்கப்பட்டதேயன்றித் தமிழ் மக்களால் அது மேற்கொள்ளப்படவில்லை. எழுத்துஞ் சொல்லும் பொருளும் எனத் தொல்காப்பியர் வகுத்துக் கூறும் இலக்கணமெல்லாம் தமிழிலக்கணமே என நச்சினார்க்கினியர் கூறுதல் இவண் கருதத்தகுவதாகும்.

தொல்காப்பியத்திற் குறிக்கப்பட்டுப் பிற்றைநாளில் வழக்கொழிந்தனவும் சிலவுள. **சுட்டு முதலாகிய இகர விறுதியும்** எனத் தொடங்கும் சூத்திரத்திற் குறிக்கப்பட்ட அதோளி முதலிய சொற்கள், சங்கச் செய்யுட்களில் வழங்கப்பெறவில்லை. இரு திணைக்கும் பொதுவாய் வழங்கிய செய்ம்மன என்னும் வாய்பாட்டு வினைச்சொல் இப்பொழுது வழக்கரிது என இளம்பூரணர் கூறியுள்ளார். கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுதியாகக் கூறப்பட்ட அகப்பொருள், நாடக வழக்கும் உலகியல் வழக்கும் விரவப் புலனெறி வழக்கஞ் செய்யுங்கால் கலியும், பரிபாடலும் ஆகிய இருவகைப பாவினாலும் பாடுதற்குச் சிறப்புரிமையுடையதெனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சங்கத் தொகை நூல்களில் அகப்பொருள் பற்றிய செய்யுட்கள் பெரும்பாலும் அகவல் நடையிலமைந்தனவாகவே காணப்படுகின்றன. தொல்காப்பியனார் காலத்துக்குப்பின் அகப்பொருட் பாடல்களுக்கு அகவல் நடையும் சிறப்புரிமையுடையதாகக் கருதப்பட்டமை இதனாற் புலனாம்.

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால், ஆசிரியர் தொல்காப்பியனார் இயற்றிய இயற்றமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியம் சங்கச் செய்யுட்களுக்கும் திருக்குறளுக்கும் நெடுங்காலத்துக்கு முன்னரே இயற்றப்பெற்ற தொன்மையுடையதென்பது இனிது புலனாதல் காணலாம்.

நற்றிணைப் பாடவேறுபாடுகளினூடாக வரலாற்று மீட்டெடுப்பும் வரலாற்றெழுதுதலும்

முனைவர் க. பாலாஜி,
தமிழ்-உதவிப்பேராசிரியர் , மொழிப்புலம்,
கிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோவைப்புதூர், கோயம்புத்தூர்-641 042.

நமக்குக் கிடைக்கப்பெறும் அகப்புறச் சான்றுகளின் வழியாகப் பண்டுதொட்டு நம் தமிழ்ச்சமூக வரலாறு மீட்டெடுக்கப்பெற்றுக் கொண்டு வருகின்றது என்பதானது சிற்றிதழ்களிலும் சிறுபத்திரிக்கைகளிலும் மட்டுமே சுருங்கிப் போனதொரு பேருண்மை. வரலாறு என்பதும் வரலாறெழுதுதல் என்பதும் **கீழிருந்து மேலெழுதல்** என்ற தருக்கவடிவினதாக அமைந்திருத்தல் வேண்டும் என்பதே இன்றைய வரலாற்று மறுவாசிப்பாளர்களின் எதிர்பார்ப்பு. அகழ அகழக் கிடைத்துக் கொண்டிருக்கும் வரலாற்றுப் பேழைகளை, தொல்லெழுத்துச் சான்றுகளை வெளிக்கொணர விடாமல் அருங்காட்சியகங்களின் தனியறைகளில் பூட்டிவைத்து நுண்அரசியல் செய்யும் இக்கட்டான சூழலில் பரந்துவிரிந்து கிடக்கும் தமிழிலக்கியச் சான்றுகளை இன்னும் சரிவரத் தூசு தட்டாமல் இருப்பது இந்த நிமிடம் வரை நாம் செய்யும் வரலாற்றுத் துரோகம். பண்டுதொட்டு இங்கிருந்த வரலாற்றுத் தொல்லெச்சங்களை மறைத்து எல்லாவற்றையும் தங்களுக்கானதாக அடையாளப்படுத்திப் புராண இதிகாசக் கருத்தாக்கங்களை இந்நிலத்திற்கான ஆதி வரலாறென நம்பவைத்த வரலாற்று மோசடியாளர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியையும் விட்டுவைக்கவில்லை. அவ்வகையில் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பெற்ற செவ்விலக்கியப் பிரதிகளை மையமிட்டுப் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் எழுந்த உரைகளினூடாக அமைந்த பாட, உரை வேறுபாடுகளின் நுண்ணரசியலை அடையாளப்படுத்தி வரலாற்றுக் குறிப்புகளை மீட்டெடுப்புச் செய்வது இவ்வாய்வுரையின் நோக்கம். இவ்வாய்வுரைக்கு நற்றிணையின் முதற்பதிப்பான பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் உரையும் 1966, 1968களில் எழுந்த ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரையும் முதன்மையாகக் கொள்ளப் பெறுகின்றன.

நற்றிணையின் 75, 77 ஆகிய இரு பாடல்கள் மட்டும் இங்கு ஆய்வெல்லையாக அமைகின்றன.

கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி (நற்.75 : 6-7)

என்ற பாடத்தை ஏற்றுக்கொண்ட பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் 'வளைந்த வில்லையுடைய வேட்டுவன் கோட்டினையுடைய பன்றியை எய்து கொன்று அதன் பசிய தசையிற் பாய்ச்சியதனாலே சிவந்த அம்பினைப்போல' என உரை கொள்கின்றார். இப்பாடத்திற்கும் உரைக்கும் மாற்றாக,

கோடைப் பொருநன் கோட்டுமா தொலைச்சிய
பண்ணி எய்த பகழி (நற்.75 : 6-7)

என்ற பாடத்தை ஏற்றுக்கொண்ட ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 'கோடைமலைப் பொருநனாகிய கடியன் நெடுவேட்டுவனது உயர்ந்த கொம்புகளையுடைய யானையைக் கொல்லுதற்குப் பண்ணி என்பவன் எய்த அம்பு போல' என உரை கொள்கின்றார்.

இவ்விரு பாடவேறுபாடுகளினாலும் அதனாலெழுந்த உரை வேறுபாடுகளினாலும் வரலாற்றுக் குறிப்பொன்று அறியப் பெறுகின்றது. தமிழ்ச்செவ்விலக்கியப் பனுவல்களில் அமைந்த உவமைகளில் வரலாற்றுக் குறிப்புகளை அளித்தல் என்பது தமிழ்ச்செவ்விலக்கியப் பண்பென்று கொண்டாலும் பிழையில்லை. அவ்வளவிற்கு மிகுதியான வரலாற்றுக் குறிப்புகளைப் பெற்றுள்ளவை தமிழ்ச்செவ்வியல் பனுவல்கள். ஆனால் பல வரலாற்றுக் குறிப்புகளைத் தொல்லியல் சான்றுகளோடும் பிற இலக்கியச் சான்றுகளோடும் முறையாகத் தொடர்புபடுத்திக் காணும் திறமின்மையினால் அவற்றை வேறு சிலர் தங்களுக்குச் சாதகமான முறையில் திரித்துக் கொள்கின்றனர். நற்றிணையின் முதற்பதிப்பாசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் மேற்குறித்த இவ்வரலாற்றுக் குறிப்பமைந்த பாடத்தை ஏற்காமைக்கு என்ன காரணம் எனப் புலனாகவில்லை. ஆனால் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை இவ்வரலாற்றினைத் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளமையோடு தமிழரல்லாத பிறர் இவ்வரலாற்றை எவ்வாறெல்லாம் திரித்து எழுதியுள்ளனர் என்பதை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார். வரலாற்று மீட்டுருவாக்கம் செய்யப்பெற்றுக் கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் இவ்வுரைக்குறிப்பு மிக முக்கியமானதாக அமைகிறது. அவ்வுரைக்கருத்து பதிப்பிலுள்ளவாறே இங்கு எடுத்தளிக்கப் பெறுகின்றது.

கோடை, மதுரை மாவட்டத்திலுள்ள கோடைமலை, கோடைப் பொருநன், மதுரை மாவட்டத்தில் கோடைக்கானல் என வழங்கும் பேரூர் உள்ள பகுதியில் சங்ககாலத்தில் வாழ்ந்த பெருஞ்செல்வத் தலைவன். கடியன் நெடுவேட்டுவன் என்பது அவன் பெயர். பொருநனுக்குரிய மாமலை இப்போது பெருமாமலை, பெருமாள்மலை என மருவி வழங்குகிறது. இப்பொருநன் சங்ககாலப் புலவர் பாடும் புகழ்பெற்றவன்; பெருந்தலைச் சாத்தனார் என்ற சான்றோர், "விறற்சினம் தணிந்த விரைப்பரிப்புரவி உறுவர் செல்சார்வாகிச் செறுவர் தாளுளம் தபுத்த வாள்மிகு தானை வெள்வீ வேலிக் கோடைப் பொருந" என்றும், "மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கதநாய் நோன்சிலை வேட்டுவ" என்றும் பாடியுள்ளார். பண்ணி என்பான் இந்நாளில் கோடைமலைக்குச் செல்லும் பெருவழியில் உள்ள பண்ணைக்காடு என்ற மூதூர்க்குரியனாய்ச் சங்க காலத்தே வாழ்ந்து சிறந்த வள்ளியோன். கோடைமலையிலிருந்து திண்டுக்கல் வரையில் தொடர்ந்து நிற்கும் மலைத்தொடர் பண்ணிக்குரியது என்பது பற்றி அது பண்ணிமலை என வழங்கிற்று; பண்ணிமலை கோடைமலையின் தொடர்ச்சியாதல் கண்ட சான்றோர் 'கோடைப்பொருநன் பண்ணி' என்றும், அவன் பாண்டியர்க்குப் படைத்துணைவன் என்றும், மிக்க வள்ளன்மையும் வேள்வி பல செய்த மேன்மையும் உடையன் என்றும் பெருஞ்சித்திரனார் கூறுகின்றார். இங்கே காட்டிய சான்றோர் இருவரும் இக்கோடை மலையை அடுத்துள்ள முதிரமலைக்குரியனாய்ச் சிறந்து விளங்கிய குமணன் என்னும் வள்ளலைப் பாடி அவன் அன்பை நேரில் பெற்றவர்களாதலால் அவர் சொற்கள் இன்றைய நாம் தடையின்றி ஏற்கத்தக்க சிறப்புடையனவாம். பண்ணி என்ற சொல்லிற்கு ஒப்பனை செய்யப் பட்டவன் என்பது பொருள். நமது தமிழகத்திற்குப் போந்த வேற்று நாட்டவர் அனைவரும் இங்குள்ள இடப்பெயர், பொருட்பெயர், தெய்வப்பெயர் ஆகிய பலவற்றைத் தமது மொழியில் எழுதும் போது அவற்றின் தமிழ்ப்பெயர்களை அப்படியே தங்கள் மொழியொலிக்கேற்ப எழுதிக்கொள்ளும் இயல்புடையர்; அதனால் அவர்கள் நூல்களைக்காணும் போது நமக்கும் அவர்கட்கும் இருந்த தொடர்பை நாம் அறிவது எளிதாகிறது. ஆனால் வடமொழியாளர்பால் இந்த நற்பண்பு காணப்படுகிறதில்லை; தமிழ்ப்பெயர்களை உருத்தெரியாதபடி மொழிபெயர்த்துக் கொள்வர். முதுகுன்றத்தை விருத்தாசலம்

என மாற்றுவதும், தமிழ் முத்தினை முக்தம் எனத் திரிப்பதும், கயற்கண்ணியை மீனாட்சி எனப் பெயர்ப்பதும் அவர்களின் இயல்பு; இதனோடு நில்லாமல் சிலகாலம் கழித்ததும், கயற்கண்ணி என்ற பெயர் மீனாட்சி யென்ற வடசொல்லின் மொழிபெயர்ப்பென்றும், முதுகுன்று என்பது விருத்தாசலம் என்னும் வடசொல்லின் தமிழ்ப்பெயர்ப்பு என்றும் நாகூசாது பொய் கூறி, மக்களை மயக்கும் செயலும் அவர்கள்பாலுண்டு; இச்செயலால் வடமொழி நூல்களில் உள்ள வேற்றுமொழிக் கருத்துக்களைப் பகுத்துக் காண்பது அருமையாய்ப் போகவே, பழந்தமிழ் நூற்கருத்துக்கள் பலவும் வடமொழியிலிருந்து கொள்ளப்பட்டன என வேற்றவர்க்கு விளம்பி வடமொழியே தமிழ் முதலிய மொழிகட்குத் தாய்மொழி எனப் பொய்ப்பறை சாற்றலாயினர்; உண்மை தெரியாத மக்கள் அவர் கூறுவனவற்றை மெய்யெனெவே கருதுவாராயினர். இவ்வியல்பால் பண்ணியினது மலையாகிய பண்ணிமலையை "வராகமலை" என மொழிபெயர்த்துரைத்தனர்; இன்று பலரும் அதனை வராகமலை யெனவே கூறுகின்றார்கள். கோடைப்பொருநனது கோட்டுமாவைப் பண்ணியென்பான் தொலைத்த வரலாறு பற்றிய குறிப்பு ஒன்றும் கிடைத்திலது. கோட்டுமா, யானை "கோட்டுமா வழங்கும் காட்டக நெறியே" எனப் பிறரும் கூறுதல் காண்க (ஔவை சு.பக்.294-295).

இவ்வுரைக்கருத்து பாடலில் அமைந்த தொல்வரலாற்றைத் தெளிவு படுத்துவதாக அமைகின்றது எனக் கூறுவதைக் காட்டிலும் வரலாறு பொதிந்த பாடத்தை ஔவை சு.துரைசாமிப்பிள்ளை தெரிவு செய்து நற்றிணையைப் பதிப்பித்துள்ளார் எனக் கருதுதலே பொருத்தமானதாகும். பாடலில் அமைந்த வரலாற்றை ஆய்வுக் கண்ணோட்டத்தோடு அணுகுதல் என்பதும் அதனைப் பிற சான்றுகளோடு ஒப்பிட்டு வரலாற்றுத் தொடர்ச்சியினை நிறுவுதல் என்பதும் ஓர் ஆய்வுப்பண்பாடு. அதனை மிகுந்த கவனத்துடன் செய்துள்ளார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. அதேநேரத்தில் தான் சார்ந்திருந்த தனித்தமிழியக்கப் பின்புல வெளிப்பாடான சமற்கிருத எதிர்ப்பினையும் காணமுடிகின்றது. ஆக, **பாடத்தேர்வு** என்பது சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியனவற்றை **ஒப்பிடுதல்** என்பதளவிலும் குறிப்பிட்ட பாடம் சங்க இலக்கியங்களின் பிறவிடங்களில் **பெரும்பான்மை** பயின்று வருகின்றது என்ற வரையரையோடும் நில்லாமல் **வரலாற்றுப் பின்புலத்தைத் தக்க சான்றுகளோடு தொடர்புபடுத்திக் காணுதல்**

என்பதிலும் முன்னிற்கின்றது. இதன் மூலமாக வரலாறு மாற்றுக்கண்ணோட்டத்தோடும் மறுவாசிப்போடும் நுணுகி ஆராயப்பெறுதல் வேண்டும் என்பது உணரப்பெறுகின்றது. பண்டுதொட்டு இங்கு வழங்கப்பெறும் ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும் வரலாற்று அடிப்படையிலானவை என்பதை உணருவதோடு சங்க இலக்கியப் பிரதிகளில் அமைந்த பாடங்களும் பாடவேறுபாடுகளும் கவனத்தில் கொள்ளப்பெறுதல் வேண்டும் என்பதும் அறியப்பெறுகின்றது. ஒவ்வொரு சங்க இலக்கியப் பிரதிகளுக்குள்ளும் மிகுதியான பாடவேறுபாடுகள் உரைவேறுபாடுகள் அமைந்துள்ளமையால் அவையனைத்தும் வரலாற்றுப் பின்புலத்தோடும் காரணகாரியத் தொடர்புகளோடும் உற்று நோக்கப்பெறுதல் வேண்டுமென்பதோடு பிரதிக்கு வெளியே அமைந்த சான்றுகளையும் நுணுகியாராய்தல் வேண்டும் என்ற கருத்தும் மேலெழுகின்றது. இவ்வகையிலான வரலாற்றெழுதுதலில் பாட, உரைவேறுபாடுகள் முன்னிற்கின்றன. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை குறிக்கும் **பண்ணி** என்ற மன்னனின் வரலாற்றினைக் கொங்குச் சேரர்கள் ஆண்ட பகுதிகளான ஈரோடு, கோயமுத்தூர் பகுதிகளில் அமைந்த ஊர்ப்பெயர்களோடு ஒப்பிட்டு நோக்க முடியும். இன்றும் கொங்குப்பகுதிகளில் **பண்ணிமடை, பண்ணியூர்** முதலான ஊர்ப்பெயர்கள் வழங்கப்பெற்று வருகின்றன. கோடைப் பொருநன் ஆண்ட கோடைமலையும் பண்ணி என்பவன் ஆண்ட பண்ணி மலையும் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் அமைந்துள்ளன. கோயமுத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்ணியூர், பண்ணி மடை முதலியனவும் மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரங்களில் அமைந்த ஊர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. **பண்ணி** என்பதைப் பேச்சு வழக்கில் **பன்னி** (பன்றி) என்றாக்கி, பிறகு நாகரிகப்படுத்தம் என்ற பெயரில் **வராகமலை** எனச் **சமற்கிருதமயமாக்கம்** செய்யப் பெற்ற வரலாற்று மோசடியை இப்பாடவேறுபாட்டின்வழி நாம் அடையாளம் காணவில்லையெனில் தவறான வரலாறே வழங்கப்பெற்று வந்திருக்கும். **பொருநனுக்குரிய** மலை **பெருமாள்மலை** எனத் திரிக்கப்பெற்றதும் அவ்வாறானதேயாகும். இவ்வாறாக ஊர்ப்பெயர்களில் அமைந்த சமற்கிருதமயமாக்கலை ஆய்வுசெய்யத் தொடங்குவோமேயானால் அதுவொரு மிகப்பெரிய ஆய்வுக்களம் என்பது பெறப்படும்.

மலையமா ஊர்ந்துபோகி புலையன் (நற்.77)

என்ற பாடத்தைக் கொண்ட பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் 'மலை போன்ற யானை மீதேறி' என உரை கொண்டுள்ளார். இப்பாடத்தை ஏற்றுக்கொண்ட புலியூர்க்கேசிகன்

'மலையமான் தன் குதிரை மீது அமர்ந்தானாகச் சென்று' என உரை கொண்டுள்ளார். பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் கொண்ட பாடத்திற்கும் உரைக்கும் மாற்றாக ஒளவை சு.துரைசாமிப்பிள்ளை பின்வரும் பாடத்தையும் உரையினையும் ஏற்கின்றார்.

மலையன் மாவூர்ந்து போகி புலையன் (நற்.77) - 'தேர்வண் மலையன் என்பான் தன் களிற்றின் மேல் இவர்ந்து போய்'.

பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் தன் பதிப்பிலமைந்த பாடப்பட்டோர் வரலாற்றுப் பகுதியிலும் நற்றிணையின் பிறிவிடங்களிலும் மலையமான் திருமுடிக்காரியின் வரலாற்றினைத் தெளிவான சான்றுகளுடன் தொடர்புபடுத்தி விளக்குகின்றார். அக்கருத்து வருமாறு:

> **'இவன் அரசாளும் நாளில் ஆரியர் பெரும் படையோடு வடக்கிலிருந்து தமிழ்நாடு புகுந்து திருக்கோவலூரை முற்றினார். அது கண்ட காரி அஞ்சாது எதிர்த்துப் போர் செய்ய அவர் ஆற்றாராய்ப் பின்வாங்கி ஓடலாயினர். ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப் பலருடன் கழித்த வொள்வாண் மலையன் தொருவேற் கோடியாங்கு'*(நற்.170)***
>
> **இவ்வாறு இவன் வெற்றி மேன்மேலெய்தக் கண்ட தகடூர் அதிகமானெடுமானஞ்சி படையொடு வந்து கோவலூரை முற்றிக் காரியைத் தோற்கச் செய்து ஓட்டிவிட்டு இவனது நாட்டினைக் கைப்பற்றிக்கொண்டான். தோற்றோடிய காரி பெருஞ்சேரலிரும்பொறையை யடைந்து அவன் கருத்துப்படிக் கொல்லிமலையை யாண்ட வல்வில்லோரியைப் போரிலே கொன்று அவ்வோரியினது நாட்டைச் சேரலாதனுக்குக் கொடுத்துவிட்டு அவனை அஞ்சிமேற் அஞ்சியைக் கொன்று போக்கி அவன் கைப்பற்றியிருந்த கோவலூர் நாட்டைக் காரியிடம் கொடுத்தான். அவன் அதனைப் பெற்று முன்பு போல் ஆண்டிருந்தான்.**

மேற்கூறிய வரலாற்றின் மீதிப்பகுதியைப் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் **அஞ்சி** என்ற மன்னனுடைய வரலாற்றைக் குறிப்பிடும் பொழுது விரிவாகக் கூறுகின்றார் (காண்க.பக்.83-84 பாடப்பட்டோர் வரலாறு). இவ்வளவு வரலாற்றையும் தெளிவாக விளக்கும் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் மலையமான் திருமுடிக்காரியைப் பற்றிய பாடத்தைத் தெரிவு செய்யாமை வியப்பை ஏற்படுத்துவதாக அமைகிறது. ஒளவை சு.துரைசாமிப்பிள்ளையும் புலியூர்க்கேசிகனும் மலையமானின் வரலாற்றினைத் தெளிவாக்கியிருந்தாலும் அவர்கள் ஏற்றுக்கொண்ட பாடத்திலும் உரைக்கருத்திலும்

கருத்துவேறுபாடு அமைந்துள்ளது. ஔவை சு.துரைசாமிப்பிள்ளையின் சிறப்பு விளக்கப்பகுதி வருமாறு:

> **சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருத காலத்தில், போரைக் கடைபோகச் செய்யமாட்டாது சோழன் தளர்ச்சியுற்றானாக, தேர்வண் மலையன் சோழற்குத் துணையாய்க் களிறூர்ந்து சென்று இரும்பொறையின் அருங்குறும்பை அழித்துச் சோழற்கு வெற்றி தந்த செய்தி ஈண்டுக் குறிக்கப்படுகின்றது. தேர்வண் மலையன் தென்பெண்ணைக் கரையிலுள்ள திருக்கோவலூரில் இருந்து அதனைச் சூழவிருந்த நாட்டைக் காவல் புரிந்த குறுநில மன்னன்; அவனது நாட்டை மலாடு என்றும் , அவனை மலாடர் கோமான் என்றும் கூறுவர். மலையன் நாடு மலாடு என மருவிற்றென்பர். அவன் வழிவந்தோர் மலையமான்கள் எனப்பட்டு இடைக்காலச் சோழர் பாண்டியர் காலத்தும் இருந்து மறைந்தனர்; அவர்களிற் பிற்காலத்தோர் கிளியூர் மலையமான்கள் எனப்பட்டமை அத்திருக்கோவலூர்ப் பகுதியில் காணப்படும் கல்வெட்டுகளால் தெரிகிறது. மேலே குறித்த போரின்கண் மலையமான் கொற்றத்தை வியந்த சான்றோர், அவனைச் சோழமன்னன் 'வெலீ இயோன் இவன்' எனவும், தோல்வி எய்திய சேரமான், 'விரைந்து வந்து சமரம் தாங்கிய வல்வேல் மலைய னல்லனாயினான், நல்லமர் கடத்தல் எளிதுமன் *(நமக்கெனத் தோற்றோன் தானும் நிற்கூறும்மே)* எனவும் புகழ்ந்துள்ளனர்.**
>
> **மலையன் களிறு ஊர்ந்து இரும்பொறையின் களிறுகளைக் கொன்று குவித்தமையின் மலையன் மாவூர்ந்து போகி என்றார். மா குதிரையுமாம். ஆயினும் 'குன்றத்தன்ன களிறு பெயரக் கடந்தட்டு வென்றோன்' என்று மேற்காட்டிய புறப்பாட்டே கூறுதல் காண்க *(பக்.302-303)*.**

என விரிவான வரலாற்றுப் பின்புலத்தோடும் தொல்லியல் சான்றுகளோடும் எடுத்துக் காட்டி நிறுவியுள்ளார். புலியூர்க்கேசிகன் 'மலையமான் தன்குதிரை மேல் அமர்ந்து சென்று' என உரை கொண்டுள்ளார். மலையமானின் குதிரை பற்றிய குறிப்புகள் சங்கஇலக்கியங்களில் உண்டு.

> **காரிக்குதிரை காரியொடு (சிறுபாண்.95,110)**

என இலக்கியச் சான்றிலும் மலையமானின் முத்திரை **'குதிரை'** என்பது தொல்லியல் சான்றிலும் கிடைத்துள்ளது. நாணயவியல் அறிஞர் இரா.கிருஷ்ணமூர்த்தி மலையமானின் நாணயங்கள் சிலவற்றைக் கண்டறிந்துள்ளார். அந்நாணயத்தின் ஒருபுறம் குதிரை முத்திரையும் மறுபுறம் மலையமானின் மார்புருவத் தோற்றமும் பொறிக்கப் பெற்றுள்ளது. கூடுதல் தரவாகக் குதிரையின் முகத்திற்கு மேலே **'மலையமான்'** எனத் **தமிழி** (தமிழ்ப்பிராமி) எழுத்துகளில் எழுதப் பெற்றுள்ளது. சில நாணயங்களில் குதிரை உருவமும் மறுபுறத்தில் இரண்டு மலைகளின் நடுவே ஆறு ஒன்று இறங்கிவரும் தோற்றமும் காணப்பெறுகின்றன. நாணயங்களில் காணப்பெறும் இரு மலைகளின் தோற்றத்தை இரா.கிருஷ்ணமூர்த்தி **மலையமான்** எனக் கொள்கின்றார். மலையமான் தனது யானைப்படை கொண்டு சோழர்க்கு உதவியிருந்தாலும் அவனது ஊர்தியும் முத்திரையும் குதிரை என்பது சான்றுகளின்வழித் தெளிவாக அறியப்பெறுகின்றது. இங்கு ஔவை சு.துரைசாமிப்பிள்ளையின் பாடமும் உரையும் பொருத்தமானதாக அமைந்திருந்தாலும் புலியூர்க்கேசிகனின் உரை மேற்கூறிய சான்றுகளுக்குப் பொருத்தமானதாக அமைகிறது. புலியூர்க்கேசிகன் தனது நூலாக்கத்திற்குப் பயன்கொள்ளப்பெற்ற பதிப்புகள் குறித்து முகவுரையில் குறித்திருப்பினும் இவ்வுரைத் தேர்விற்கு எப்பதிப்பின் பாடத்தையும் உரையினையும் சான்றாதாரமாகக் கொள்கின்றார் என அறிய இயலவில்லை.

ஆக, ஒரு சமூகத்தின் வரலாற்றெழுதுதலில் சங்க இலக்கியப் பிரதிகள், பாட உரைவேறுபாடுகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் என்னவென்பதும் பாட உரைவேறுபாடுகளை முன்வைத்து நாம் செய்யவேண்டிய ஆய்வுக்களங்கள் இன்னும் எவ்வளவு உள்ளன என்பதும் இவ்வாய்வுரையின் வழிப் பெறப்படுகின்றது. மேலும் நற்றிணையின் பதிப்பாசிரியர்கள் தங்கள் பதிப்பிற்கு முதன்மையாகக் கொண்ட சுவடிகள், ஏனைய சுவடிகளைப் புறந்தள்ளியமைக்கான காரணங்கள், அதிலமைந்த பாடங்களின் தெரிவுமுறைமை ஆகியன விரிவான விவாதத்திற்கும் ஆய்விற்கும் உரியன. இவ்வாய்வுத்தேடல் பாடத்தெரிவு முறைமையில் இயற்கையாகவே சில கேள்விகளை முன்னெழுப்புகின்றன. மலையமான் திருமுடிக்காரியின் வரலாற்றுப் பின்புலத்தை விரித்தும் தேவையான இடங்களில் இணைத்தும் விரிவாகத் தன் பதிப்பில் பேசும் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் நற்றிணையின் 75ஆம் பாடலில் அமைந்த மலையமான் திருமுடிக்காரியின் வரலாற்றைப் பேசாமைக்கு என்ன காரணம்? மலையமானின் வரலாற்றுக் குறிப்பமைந்த பாடத்தையும் சுவடியையும் ஏற்காமைக்குக்

காரணம் என்ன? ஒருவேளை நாராயணசாமி ஐயருக்கு வரலாற்றுக் குறிப்பமைந்த அச்சுவடி கிடைக்கவில்லையா? பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயருக்குக் கிடைக்காத சுவடி ஔவை சு.துரைசாமிப் பிள்ளைக்குக் கிடைத்ததன் பின்னணி யாது? ஔவை சு.துரைசாமிப்பிள்ளை தனக்குப் புதியதாகக் கிடைத்தது எனக் குறிக்கும் டொம்மிச்சேரி கருப்பையா தேவர் ஏடு, புதுப்பட்டி சிவ.முத்தையா செட்டியார் ஏடு ஆகியனவற்றில் மலையமானின் வரலாறு குறித்த பாடம் அமைந்திருப்பின் நற்றிணையின் தொலைந்துபோன 234ஆம் பாடலும் 385ஆம் பாடலின் பிற்பகுதியும் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரின் முதற்பதிப்பிலுள்ளவாறே விடுபட்டும் குறைப்பாடலாகவும் அமைந்திருப்பது மிகுந்த ஐயத்தை ஏற்படுத்துவனவாக அமைகின்றது. அப்படியென்றால் ஔவை சு.துரைசாமிப்பிள்ளைக்குக் கிடைத்த ஏடு பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் தம் பதிப்பிற்குப் பயன்கொண்ட மூல ஏட்டின் வழி ஏடா? வழி ஏடாக அமைந்திருப்பின் மலையமான் திருமுடிக்காரியின் வரலாற்றைப் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் குறிக்காமல் விட்டுச் செல்வதற்கு என்ன காரணம்? இப்படியான பல கேள்விகள் நற்றிணைப் பாடவேறுபாடுகளினூடாக நம் முன்னே விரிகின்றன.

துணை நின்றவை

*கிருஷ்ணமூர்த்தி இரா., 2005 (ம.ப.), சங்ககாலச் சேரநாணயங்கள் கண்டுபிடிப்பு சில வரலாற்றுச் செய்திகள், கார்னெட் பப்ளிகேஷன், சென்னை.

*கிருஷ்ணமூர்த்தி இரா., 2010 (ம.ப.), சங்ககால மலையமான் நாணயங்கள், கார்னெட் பப்ளிகேஷன், சென்னை.

*துரைசாமிப்பிள்ளை சு., 1966 (மு.ப.), நற்றிணை மூலமும் விளக்கவுரையும், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை.

*நாராயணசாமி ஐயர் அ., 1915 (மு.ப.), எட்டுத்தொகையுளொன்றாகிய நற்றிணை, சைவவித்யாநுபாலனயந்திரசாலை, சென்னை.

*புலியூர்க்கேசிகன், 1967 (மு.ப.), நற்றிணை, பாரிநிலையம், சென்னை.

*விநாயகமூர்த்தி அ., 1995 (மு.ப.), மூலபாட ஆய்வியல், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

கண்ணகி மரபு: தமிழ் இன அடையாள உருவாக்கமும் அடையாள அழிப்பின் அரசியலும்

முனைவர் சிலம்பு **நா.செல்வராசு**
தமிழ்த்துறை, புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி, இந்தியா.

பகுதி ஒன்று

சிலப்பதிகாரம் எனும் பிரதி ஒற்றைப் பொருண்மை கொண்டதன்று. அது கண்ணகி தொன்மம் - இளங்கோவடிகளின் அரசியல் நிலைப்பாடு - காப்பியநிலை - எனப் பன்முகப்பட்டது. இம்மூன்றையும் ஒற்றைப் பொருண்மை உடையனவாகக் கருதும்போது பல முட்டுப்பாடுகள் தோன்றக் கூடும். புராதன தாய்ச்சமூக மரபிலிருந்து தோன்றி வழங்கி வந்த கண்ணகி தொன்மத்தை அரசியல் துறவியாகிய இளங்கோவடிகள் (கவனித்தல் வேண்டும் அவர் சமயத் துறவி அல்லர்) பேரரசு உருவாக்கம் என்னும் கருத்தியலின் அடிப்படையில் சிலப்பதிகாரம் எனும் காப்பியமாக உருவாக்குகின்றார். பேரரசு உருவாக்கத்தின் இலக்கிய ஆக்கமாகவும் சிலப்பதிகாரத்தைக் கருதுதல் வேண்டும். எனவேதான் கண்ணகி தெய்வமாகிய பின்னரும் சிலப்பதிகாரத்தின் கதை நீட்சி பெறுகின்றது. (விரிவிற்குப் பார்க்க: சிலம்பு நா. செல்வராசு.2006) பன்முகமாக நிலைகொண்ட இனக்குழு அரச மரபுகளை ஒற்றை நிலையிலான பேரரசு அமைப்பிற்குள் கொண்டுவரும் சமூக வளர்நிலையில் சிலப்பதிகாரம் அவ்வளர்நிலையை நியாயப்படுத்துவதாக அமைகின்றது. இளங்கோவின் அரசியல் துறவறமும் இந்த நியாயப்படுத்துவதன் கூறாகக் காணுதல் வேண்டும். இவ்வளர்நிலை தமிழ்ச் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் ஊடுபாவாக இழையோடுவதை உணர முடியும். குடும்பம், அரசு, சமயம் எனும் இச்சமூக நிறுவனங்களும் பன்மை நிலையிலிருந்து ஒற்றைப்பொருண்மை நிலை நோக்கி நகரத் தொடங்கின. ஒருகணவ மணமுறைக் குடும்பம் அல்லது பெருங்குடும்பம், பேரரசு, பெருஞ்சமயம் என்னும் சொல்லாடல்களாக அவை வடிவெடுத்தன. இவற்றை உள்கட்டுமானமாகக் கொண்டு சிலப்பதிகாரம் தம் அரசியலை நிகழ்த்தத் தொடங்கியது. இந்த அரசியல் எனும் நாணயத்தின் இன்னொரு பக்கம் தமிழ்த் தேசியம் எனும் கருத்தியலாக வடிவெடுத்தது. இதுபற்றிச் சிறிது விளக்கமாக அறியமுடியும்.

கண்ணகி தொன்மம் எப்பொழுது தோன்றியது என்பதை அறுதியிட்டு உரைத்தல் இயலாது. ஆயின் அது சிலப்பதிகாரமாக ஆக்கம் பெற்றபோது இளங்கோவடிகள், சாத்தனார், செங்குட்டுவன் எனும் வரலாற்றுப் பாத்திரங்களின் சமகாலத்துத் தன்மையை அடைந்தது. சாத்தனார், கண்ணகி கதை நடந்த காலத்தில் அதாவது மதுரை பற்றி எரிந்தபோது அவ்விடத்தில் இருந்தமையையும் கண்ணகி வரலாற்றையும் இளங்கோ வடிகளிடம் கூற அவர் சிலப்பதிகாரத்தை எழுதினார் எனப் பதிகம் உரைக்கின்றது.

இன்னுமொரு கருத்துச் சங்க காலத்திலேயே கண்ணகி தொன்மம் அறியப்பட்டிருந்தது என்பதாகும். நற்றிணை கூறும் திருமாவுண்ணி கதையும் பேகன் கண்ணகி கதையும் இதற்குச் சான்றுகளாகும். திருமாவுண்ணி, கண்ணகி அல்லள் என்பதும் ஒருமுலை அறுத்த செயல் ஒன்றே ஒற்றுமையுடன் காணப்படுகின்றது என்பதும் இருவரும் வேறுவேறானவர் என்பதும் அறிஞர்களால் விளக்கப்பட்டுள்ளன. அதேபோல் பேகன் கோவலன் அல்லன் என்பதும் கண்ணகி எனும் பெயர் மட்டுமே பேகன் மனைவிக்கும் சிலப்பதிகார நாயகிக்கும் ஒன்றாக உள்ளது என்பதும் இருவரும் வேறுவேறானவர் என்பதும் அறிஞர்களால் விளக்கப்பட்டுள்ளன (கூடுதல் விவரங்களுக்கு: சிலம்பு நா. செல்வராசு.2013). முன்பே சொன்னது போலக் கண்ணகி தொன்மம் தமிழ்நாட்டின் புராதன தாய்ச் சமூக அமைப்பில் உருவான ஒன்றாகும். இதனைப் பின்வருமாறு உணரமுடியும்.

புராதன தாய்ச் சமூக மரபுகள் பற்றி அறிவதற்குத் தமிழில் சான்றுகள் நிரம்ப இல்லை. ஒன்றிரண்டு கூறுகளை அடிப்படையாக வைத்து மீட்டுருவாக்கம் செய்யும் நிலையே தொடர்கின்றது. புராதன தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் ஆற்றல் நிலையை மூன்றாகப் பிரிக்க முடியும். அவை, கன்னி ஆற்றல், அன்னை ஆற்றல், அவ்வை ஆற்றல் அல்லது முதுபெண்டிர் ஆற்றல் என்று அது வகையினைப் பெறும். இவற்றின் ஒட்டுமொத்தக் குறியீடாக விளங்குவது 'கொற்றவை மரபு' ஆகும். கொற்றவை மரபு அல்லது வழிபாடு சங்க காலத்தில் முற்றும் அழிந்து விட்ட நிலையை அறிய முடிகின்றது. பெயர் அளவில் ஓரிரண்டு சான்றுகள் உண்டு. சிலப்பதிகார வேட்டுவவரியில் கொற்றவை வழிபாடு புராதன வழிபாடாகவும் மேனிலையாக்கம் பெற்ற வழிபாடாகவும் வெளிப்படக் காணலாம். பொதுநிலையில் தாய்த்தெய்வ ஆற்றல்களாகப் பின்வருவனவற்றைச் சுட்ட முடியும்.

1. இயற்கையை ஏவல் கொள்ளுதல்: நெருப்பு, மழை, நீர், காற்று முதலியவற்றை ஏவல் கொள்ளும் ஆற்றல். மழையைப் பெய்வித்தல், நிறுத்துதல், தீயை ஏவி அழித்தல்.
2. அணங்காற்றல்: அணங்கு எனும் சக்தி உடைய தெய்வமாக இருத்தல். அணங்கு உறையும் உடலைக் கொண்டு இயங்குதல். இந்த அணங்கு மீவியல் சக்தி உடையதாக நம்பப்பெறுதல்.
3. காத்தல், அழித்தல்: இனத்தைக் காத்தல், பகைவர், இயற்கை ஆகியவற்றிலிருந்து தம் குடியினரைக் காத்தல், பகைவரை அழித்தல்.
4. வருவது உரைத்தல்: எதிர்காலத்தைக் கணித்துக் கூறும் சக்தி உடையவராகத் திகழ்தல்.
5. குருதி பலி, மனிதப் பலி, பிணம் தின்னுதல் மூலம் தம் ஆற்றலை உயிர்ப்புப் பெறச் செய்தல், மிகுதிப்படுத்திக்கொள்ளுதல்.
6. வளமை, செழுமை: தம் இனத்தின் வற்றாத வளமைக்கும் செழுமைக்கும், இளமைக்கும் குறியீடாகத் திகழ்தல், வறட்சியைப் போக்குதல்.

இவ்வாறான தாய்த்தெய்வ மரபிலிருந்தே கண்ணகி தொன்மம் உருப் பெற்றிருக்க வேண்டும். இயற்கையை ஏவல் கொள்ளுதல், முதலிய பண்புகள் யாவும் கண்ணகியிடம் அமைந்து கிடந்தன. இவற்றுள் மழையாற்றல் என்பது சமூக மாற்றத்திற்கு ஏற்பக் கணவனோடு இணைக்கப் பெற்றது. அணங்கு உறைந்த முலை எதிரியை அழித்துள்ளது. முலையாற்றல் எதிரியை அழிக்கும் என்பது தாய்ச் சமூக மரபுசார் நம்பிக்கை ஆகும். குஜராத்தில் உள்ள பாட், சாரன் பழங்குடிப்பெண்கள் இவ்வாறு எதிரியை அழிக்க முலையை அறுத்துப் பின்னர்ப் 'பகுச்சாரா' எனும் பெண் தெய்வமாகி உள்ளனர் (விரிவிற்குப் பார்க்க: பக்தவத்சல பாரதி. 2013 & சிலம்பு நா. செல்வராசு. 2013). இவ்வாறு புராதன தமிழ்ச்சமூகத்தின் பெண் தெய்வமாகக் கண்ணகி தொன்மம் வழக்குப் பெற்றிருத்தல் வேண்டும். இத்தொன்மத்தையே இளங்கோவடிகள் சிலப்பதிகாரமாகப் படைத்தளித்துள்ளார். இளங்கோவடிகள் கண்ணகி தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டு காப்பியத்தைப் படைத்தமைக்குரிய காரணங்களும் ஆராயத்தக்கவை.

பெருங்குடும்பம், பெருஞ்சமயம், பேரரசு உருவாக்கத்தின் அடிப்படையைக் கொண்டு சிலப்பதிகாரம் இயற்றப்பட்டதாக முன்னர்க் கோடிட்டுக் காட்டப்பட்டது. பேரரசு உருவாக்கம் என்பது வெறும் அரசுகளின் குடிகளின் குலங்களின் இணைப்பாக

மட்டுமே நிகழ்ந்து விடாது. ஒட்டுமொத்த பண்பாட்டு, சமய, பொருளாதார ஒன்றிணைப்பாகவும் அது நிகழ்தல் வேண்டும், அவ்வாறே அது நிகழ்ந்தது. பேரரசு அமைப்பில் அனைவருக்குமான அரசன் அல்லது பேரரசன், அனைவருக்குமான கடவுள் அல்லது ஏக கடவுள், அனைவருக்குமான பொதுப் பண்பாடு, பொது மொழி, பொது எல்லைக் கட்டமைந்த நில அமைப்பு ஆகியனவும் உடன் நிகழ்வாக நடந்தேறின. இவற்றின் ஒட்டுமொத்த இலக்கிய வடிவமாகச் சிலப்பதிகாரமும் உருவாக்கப்பட்டது.

மூவேந்தருள் தலைசான்றவனாக இமயம் வென்றவனாகச் சேரன் முன்னிறுத்தப்பட்டான். இவன் தமிழ் மன்னர்களையும் வடமன்னர்களையும் வென்று பேரரசனாகக் காட்சி தருகின்றான். இம்மன்னன் முன்னிறுத்தும் சமயமாகக் கண்ணகி சமயம் காட்சி தருகின்றது. கண்ணகி வழிபாடு உச்சம் பெற்ற காலத்தில் பல்வேறு தெய்வங்கள் பெருஞ்சமய/ஏகசமய நிலையை நோக்கித் தமிழகத்தில் நகரத் தொடங்கி விட்டன. சிவன், மாயோன் வழிபாடு வலுப்பெறத் தொடங்கியது. கொற்றவை மரபு மேனிலையாக்கம் பெற்று நகர்ச்சியைப் பெற்றது. முருக வழிபாடும் ஸ்கந்த, சுப்பிரமணிய, காலீத்;திகேய மரபுகளை உள்வாங்கிப் பெருஞ்சமய நிலையை நோக்கி நகரத் தொடங்கியது. இவற்றோடு கண்ணகி வழிபாடும் பத்தினி வழிபாடாக அல்லது தாய்த்தெய்வ வழிபாடாக நகரத் தொடங்கியது. தமிழகம் முழுவதும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் இவ்வழிபாடு பரவத் தொடங்கியது.

கண்ணகி தொன்மம் சிலப்பதிகாரமாக மலர்ச்சியுற்றபோது வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட நிலப் பகுதியைத் தமிழ்நாடாக மொழி வழியாகக் கட்டமைத்தது. (இதற்குப் பின்னரே தொல்காப்பியப் பாயிரம் உருவாயிருக்க வேண்டும் என்பதும் பாயிரம் பதிகம் இவற்றின் தோற்றம் பல்லவர் கால இறுதிப் பகுதிக்கு உரியது என்றும் கூறப்பெற்ற கருத்தியலை இங்கே நினைவு கூர்க- விரிவிற்குப் பார்க்கவும்: க.ப. அறவாணன். 1972; சிதம்பர ரகுநாதன் 1984). சிலப்பதிகாரம் கட்டமைத்த மொழிவழித் தேசியக் கூறுகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. நான்கு எல்லைக் கட்டமைப்பு.
2. மொழி வழி மாநிலம்.
3. பன்முக இனங்களை ஒன்றிணைத்தது.
4. பன்முகப் பண்பாட்டு மரபுகளை, கலைகள் முதலியவற்றைத் தமிழ்த் தேசிய மரபுகளாகக் கட்டமைத்தது.

1. பன்முகச் சமய மரபுகள் கண்ணகி வழிபாட்டை ஏற்றது.
2. தமிழ்த் தேசிய மரபின் தொன்மங்களைப் பதிவு செய்தது. குறிப்பாகத் தமிழ் மன்னர் குடிக்குரிய தொன்மங்களைப் பதிவு செய்தமை.

ஆகத் தமிழ்த் தேசியத்திற்குரிய மொழி, அரசு, சமயம், பண்பாடு, கலைகள், வணிகம், வரலாறு முதலியவற்றைக் கட்டமைக்கும் காப்பியமாகச் சிலப்பதிகாரம் உருவானது. இந்த வகையில் தமிழினத்தின் தலைசிறந்த அடையாளங்களுள் ஒன்றாகவும் அது திகழ்ந்தது. தமிழ்த்தேசியத்தின் முதல் இலக்கிய வடிவமாகச் சிலப்பதிகாரத்தைக் கொள்ளுதல் வேண்டும்.

தமிழினத்தைத் தமிழகம் எனும் பெயரில் தமிழ் மரபுசார் கூறுகள் விளங்கச் சிலப்பதிகாரம் உருவானபிறகு அது தமிழரின் அடையாளமாக மாறத் தொடங்கியது. அல்லது தமிழ்த் தேசியத்தின் அடையாளமாக மாறத் தொடங்கியது.

இந்நிலையில் இந்த அடையாளத்தை வீழ்த்தும் அழிக்கும் நுண் அரசியல்சார் நிகழ்வுகளும் தமிழகத்தில் நிகழ்ந்தேறின. சிலப்பதிகாரக் காலத்திலேயே பல்வேறு சமயங்கள் பெருஞ்சமய நிலையை நோக்கி நகரத் தொடங்கின என்பது முன்னரே கோடிட்டுக் காட்டப்பட்டது. சிவன், மாயோன், கொற்றவை, முருகன் எனும் வழிபாட்டு நிலைகளோடு அன்று வலுவூன்றி நின்ற சமண பௌத்தமும் கணக்கில் கொள்ளப்பெறுதல் வேண்டும். பெருஞ்சமய நகர்தல் உச்சநிலையை அடைந்த போது அனைத்துச் சமயங்களையும் வீழ்த்திச் சைவமும் வைணவமும் பெருஞ்சமயங்களாக மாறின. இது பல்லவர் காலத்து நிகழ்வாகும். இவ்வாறான பெருஞ்சமய உருவாக்கத்தில் கொற்றவை மரபும் முருக மரபும் சைவத்தில் இணைந்தன. கண்ணகி வழிபாடு மறையத் தொடங்கியது. பத்தினி வழிபாடு எனும் நிலையைத் திரௌபதியம்மன் வழிபாடு உச்சம் பெற்று வீழ்த்தியது. திரௌபதியம்மன் வழிபாடு கால்கொண்ட பின்பு தமிழகத்தில் கண்ணகி வழிபாடு வழக்கு ஒழிந்தது அல்லது மாரி வழிபாடாக மாற்றமுறத் தொடங்கியது. இதனால் கண்ணகி வழிபாடு உருவமற்றுப் போனது. இந்நிலைக்குக் கண்ணகி ஒரு மானுடப் பெண்ணாக விளங்கியமையும் ஒரு காரணம் ஆகும்.

கண்ணகி தொன்மத்தை அடிப்படையாகக் கொண்ட சிலப்பதிகாரம் எனும் பிரதியும் இந்நிலைக்கு ஆளானது. சிலப்பதிகாரம் காப்பிய மரபிற்கு உட்பட்டு ஆக்கம் பெறவில்லை எனவும் அது காப்பியம் ஆகாது எனவும் எடுத்துரைக்கப்பட்டது. தண்டியலங்காரம் கூறும் வடமொழி காவிய மரபிற்கு மாறுபட்டுச் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டுள்ளது என எடுத்துக் கூறப்பட்டது. மாறாகச் சிலப்பதிகாரத்திலிருந்து

தமிழ்க் கவிதை மரபை எடுத்து மொழியும் நிலை இல்லாமல் போனது. இது வடமொழியானது பெரும்மொழியாக வழக்குப் பெற்ற சோழர் காலத்தில் உச்சம் பெற்றது. ஏனைய இலக்கண இலக்கியங்கள் போல அல்லாமல் அடியார்க்கு நல்லார், பழைய உரைக்காரர் என இரு உரைகளே சிலப்பதிகாரத்திற்கு எழுதப்பெற்றதையும் இத்தகு ஒதுக்கத்தின் பின்புலத்தில் பார்த்தல் வேண்டும்.

சிலப்பதிகாரத்தின் இன்னுமொரு வீழ்ச்சி சமயப் பார்வையில் ஏற்பட்டது. சமணபௌத்த சமயங்களுக்கும் வைதீக சமயங்களுக்குமான போட்டியும் மோதல்களும் கலவரங்களும் காலங் காலமாகத் தமிழ் மண்ணில் நிகழ்ந்துள்ளன. சைவ, வைணவ சமயங்கள் சமணத்தையும் பௌத்தத்தையும் வீழ்த்துவதில் வெற்றிகண்டன. சமயக் காழ்ப்பும் சமய அழிப்பும் அது சார்ந்த அனைத்தையும் அழித்தன. சமணர்களும் பௌத்தர்களும் தமிழுக்குச் செய்த கொடைகள் பலவாகும். ஏராளமான சமண பௌத்த இலக்கியங்கள் அழிக்கப் பெற்றதற்கு இத்தகு சமயக் காழ்ப்பு பெரும் காரணமாகும். இந்தச் சமயக் காழ்ப்பு சிலப்பதிகாரத்தையும் விட்டுவைக்க வில்லை. சமண முனிவர் ஒருவர் இயற்றிய காப்பியத்தை வைதீக சமயத்தார் படித்தல் ஆகாது என்ற கருத்து 16 - ஆம் நூற்றாண்டு முதல் 19- ஆம் நூற்றாண்டு வரை உரத்துப் பேசப்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில் திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார் முதலான நூல்கள் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தன. தேவாரம் முதலான பக்திப்பனுவல்கள் உச்சம் தொட்டன. இருபதாம் நூற்றாண்டிலும் இந்நிலையே நீடித்தது. இருபதாம் நூற்றாண்டு ஆய்வாளர் சிலரும் சிலப்பதிகாரத்தை வைதீக நூலாக மாற்றம் செய்த பிறகே ஏற்றம் தர முற்பட்டனர். இது பற்றிப் பேராசிரியர் ஏ. சக்கரவர்த்தி குறிப்பிடும் கருத்து வருமாறு:

> ***செல்வாக்கு நிறைந்த சிலர் தமிழ்பண்பாட்டைப் புதுப்பிக்கின்றோம் என்ற பெயரில் சமணர்கள் இயற்றிய நூலைச் சமணர் அல்லாதார் இயற்றியதாகக் காட்டுகின்றனர்; பழந்தமிழ்ப் பண்பாட்டை இவர்கள் புதுப்பிக்க நினைத்தால் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பண்பாட்டு வளர்ச்சி என்பது ஆராய்ச்சியில் நேர்மை இல்லாத போது வெறுங்கதையாகப் போய்விடும்.***

என்று எச்சரித்துள்ளார். இதன் மூலம் இருபதாம் நூற்றாண்டு வரையும் சமயக் காழ்ப்பின் காரணமாகச் சிலப்பதிகாரம் ஒதுக்கப் பெறுவதற்கான சூழல் நிலவி உள்ளதை உணர முடிகின்றது.

இக்கட்டுரை முதற்பகுதியின் நிறைவில் பெறப்படும் கருத்தைப் பின்வருமாறு சுட்டமுடியும். கண்ணகி வழிபாடு தமிழ் மண்ணிற்குரியது; மற்றுப் புராதன தாய்த் தெய்வ

மரபிலிருந்து அது தோற்றம் பெற்றது. அவ்வழிபாட்டை மையமிட்டுச் சிலப்பதிகாரக் காப்பியத்தை இளங்கோவடிகள் புனைந்தார். பேரரசு, பெருங்குடும்பம், பெருஞ்சமய உருவாக்கக் காலத்தில் அவற்றை நியாயப்படுத்தி உருவான சிலப்பதிகாரம் தமிழ்த் தேசியக் கருத்தியலை வெளிப்படுத்துவதாக அமைந்தது. இதன் வழித் தமிழின அடையாளங்களுள் ஒன்றாகவும் மாறியது. இதற்குப் பின்னர்த் தோன்றிய சமூக மாற்றங்கள் அடையாளத்தை வீழ்த்துவனவாகவே அமைந்தன. சைவ வைணவ எழுச்சி கண்ணகி வழிபாட்டை வீழ்த்தியது. சமணக் காழ்ப்பும் வடமொழிசார் கவிதை அரசியலும் சிலப்பதிகாரக் காப்பியத்தை வீழ்த்தியது இந்த வீழ்ச்சியிலிருந்து சிலப்பதிகாரம் இருபதாம் நூற்றாண்டில் விடுபட்டு எழுச்சி பெற்றது. இது பற்றிய விவரங்கள் இக்கட்டுரையின் இரண்டாம் பகுதியில் இடம் பெறும்.

பகுதி இரண்டு

சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழின அடையாள உருவாக்கத்தின் இரண்டாம் நிலை இருபதாம் நூற்றாண்டில் தோற்றம் பெறுகின்றது. சமயக் காழ்ப்பால் ஒதுக்கம் பெற்று ஒடுங்கிக்கிடந்த சிலப்பதிகாரம் 1872இல் தி.ஈ.சீனிவாசராகவாச்சாரியாரால் பதிப்புரு பெறுகின்றது. இவரது பதிப்பில் ஒரு சில காதைகளே இடம் பெற்றன. சிலப்பதிகாரம் முழுவதும் அடங்கிய பதிப்பை உ.வே.சாமிநாதையர் 1892இல் வெளியிட்டார். இப்பதிப்பு வெளிவந்த பின்னரே சிலப்பதிகாரம் பற்றிய முழுச்செய்திகளும் தமிழுலகத்தைச் சென்றடைந்தன. இது பற்றிக் கைலாசபதி (1996).

> ***இருளில் முழ்கிக்கிடந்த முதல் தமிழ்க் காப்பியத்தைச் சாமிநாதையர் வெளியிட்டவுடனே அது அக்காலத்துத் தமிழ் ஆராய்ச்சியாளரைப் பெரிதும் கவர்ந்தது. குறிப்பாக வி.கனகசபைப் பிள்ளை (1855-1906) பெ.சுந்தரம் பிள்ளை ஆகியோர் தம் ஆய்வுகளுக்குச் சிலப்பதிகாரத்தையே பெருமளவிற்குப் பயன்படுத்தினர்.***

என்று கருத்துரைத்தனர். சிலப்பதிகாரம் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கக் கால ஆராய்ச்சியாளர்களைக் கவர்ந்ததற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. இது பற்றிச் சிறிது விளக்கலாம். ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரும் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் கல்வி பரவலாக்கம் பெற்ற பின்னரும் தமிழ் ஆராய்ச்சி உலகில் பெரும் மறுமலர்ச்சியும் எழுச்சியும் தோன்றின. கூடவே ஆங்கிலேயர்க்கு எதிரான விடுதலைப் போராட்டமும் சூடு பிடித்தது. இந்தியத் தேசிய விடுதலை என்பது சுதேசியம்

சார்ந்த கருத்தியலை முன் வைத்தது. இனம் சார்ந்த வரலாறு, பண்பாடு, சமயம் முதலான பல்வேறு கூறுகள் வெளிவரத் தொடங்கின. இவ்விதமாகவே 1850 களுக்குப் பிறகு தமிழ்மொழி, இனம், வரலாறு, பண்பாடு சார்ந்த ஆய்வுகள் உருவாக்கப்பெற்றன. ஆனால் இந்த ஆய்வுகள் யாவும் ஏதோ ஒருவகையில் வடமொழிக்குக் கடன் பட்டவையாக விளங்கின. தனித்த தமிழ் அடையாளங்களோடு கூடிய ஆய்வுகளை நிகழ்த்த முடியாமல் போயிற்று. தொல்காப்பியம் தொடங்கி எல்லா நிலைகளிலும் இது வெளிப்பட்டது. தொல்காபியமே ஆரிய மரபினரான அகத்தியரின் மாணவரால் உருவாக்கப்பட்டது என்றும் அவரும் திரணதூமாக்கினி எனும் ஆரியர் எனவும் தொன்மங்கள் பலவாக நிலைபெற்று இருந்தன. தமிழர் வரலாற்றைக் கட்டுவதிலும் இவ்வாறான நிலையே இருந்தது. இவ்வாறான சூழலில்தான் சிலப்பதிகாரம் பதிப்பிக்கப்பெற்றுப் பரவலான அறிமுகத்தைப் பெறும் சூழல் உருவானது. சிலப்பதிகாரம் தமிழின தமிழர் வரலாற்றைக் கட்டமைக்கப் பெரிதும் துணைநின்றது. தமிழர் வரலாற்றை உருவாக்கியதில் வி. கனகசபைப்பிள்ளைக்குப் பெரும் பங்குண்டு. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில்; கனகசபைப்பிள்ளை 'மெட்ராஸ் ரிவியூ' என்ற ஆங்கிலப் பத்திரிக்கையில் தொடர்ந்து தமிழரின் வரலாறு பற்றியும் பண்பாடு பற்றியும் கட்டுரைகள் எழுதி வந்தார். 'இந்தியப் பழமை ஆராய்ச்சி' (India Antiquary) எனும் ஏட்டிலும் இது தொடர்ந்தது. எனினும் சிலப்பதிகாரம் முழுவதும் உரையுடன் வெளிவந்த பிறகே "ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்" எனும் புகழ் பெற்ற நூலை அவர் எழுதினார். 'கனகசபைப் பிள்ளையின் நூல் தமிழியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனை என்றும் பழந்தமிழ் நூல்கள் வெளிவரத் தொடங்கிய காலத்தை ஒட்டி எழுந்த ஆராய்ச்சிக் காலப் பகுதியில் அவருடைய நூல்தான் முதன்மையானது என்பது யாவரும் ஏற்றுக் கொண்ட உண்மை' என்றும் கைலாசபதி (1996) எழுதினார். 'கனகசபைப்பிள்ளை சிலப்பதிகாரத்தை அடியாகக் கொண்டு கட்டிய முடிவுகளில் பல இன்று ஏற்றுக் கொள்ளத் தக்கதாய் இல்லை' என்று எண்ணும் ஏ.வி. சுப்பிரமணிய அய்யர் (1959) பின்வருமாறு அதன் முதன்மையை விதந்து கூறுவர்.

> ***தமிழ் ஆராய்ச்சியைப் பற்றிய விஷயங்களைக் கீழ் நாட்டுக் கலைப் பயிற்சி பெற்ற மேனாட்டு அறிஞர்க்கும் இந்தியாவின் பிற பாகங்களில் உள்ள புலவர்க்கும் தெரிவிக்க வேண்டிய அவசியம் இருந்தது. இந்தத் தேவைக்கொப்பக் கனகசபைப் பிள்ளை தமது நூலை ஆங்கிலத்தில் எழுதினார். பண்டைய தமிழர் இலக்கியத்திலும் வெளிநாட்டார் நூல்களிலும் இந்திய இலக்கியங்களிலும் உள்ள***

பண்டைத்தமிழர் பற்றிய குறிப்புகளைத் தொகுத்து அவைகளை நேர்மையுடனும் நுட்பத்துடனும் சரித்திரப் பாங்குடனும் பரிசீலனை செய்திருப்பது கனகசபைப்பிள்ளை செய்திருக்கும் ஆராய்ச்சியின் முக்கிய அம்சமாகும் (ஏ.வி.சுப்பிரமணிய அய்யர். 1959).

கனகசபைப்பிள்ளை தம் வரலாற்று நூலில் தமிழ் நாட்டின் புவியியல்' தமிழ் நாட்டுக் குடிகள், தமிழரின் அயல்நாட்டு வாணிகம், தமிழரின் வாழ்க்கைநிலை, பண்பாடு, தமிழரின் சமயம், தமிழர் மெய்யியல், மன்னர்களின் வரலாறு, புலவர்களின் வரலாறு முதலியவற்றை விரிவுபட விளக்கி இருந்தார். 'இவை யாவற்றுக்கும் கனகசபைப்பிள்ளை சிலப்பதிகாரத்தையே அடிப்படையாகக் கொண்டார்' என்று கைலாசபதி (1996) கூறுவர். கனகசபைப் பிள்ளையும் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையும் சிலப்பதிகாரத்தைப் பலபடப் பாராட்டி ஆய்வுத் தளமாகக் கொண்டதும் பின்வந்த ஆய்வாளர் பலரும் சிலப்பதிகாரத்திற்கு மிகு முதன்மை தரலாயினர்.

சங்க கால நிர்ணயத்திற்கு இது சிறந்த சான்று என்றும் அக்காலத்து நாகரிக நிலைமையை நன்கு விளக்குகின்றது எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருதி வந்தனர். தமிழாராய்ச்சி செய்ய வேண்டும் என்ற நினைப்புக் கொண்டவர்கள் அனைவரும் சிலப்பதிகாரத்தை நன்கு கற்றுவரலாயினர்.

என்று சிலப்பதிகாரத்தை நன்கு விமர்சனம் செய்த வையாபுரிப்பிள்ளை (1954) கருத்துரைத்தனர்.

தமிழ் நாட்டில் தமிழிசை இயக்கம் இருபதாம் நூற்றாண்டின் நடுவண் காலத்தில் தோன்றியது. 1931ஆம் ஆண்டில் விபுலாநந்த அடிகளின் யாழ் நூல் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது அரங்கேற்று காதையின் (அடியார்க்கு நல்லார்) உரை ஆகும். 1942 ஆம் ஆண்டில் தமிழகத்தில் தமிழிசை இயக்கம் தோன்றப் பாடுபட்டவர்களுக்கு உற்ற துணையாக அமைந்தவை சிலப்பதிகாரமும் அதன் உரைகளும் ஆகும். இது தமிழ்ப்; பண்பாட்டு மரபில் புதிய ஏற்றங்களைத் தந்தது என்று நாமக்கல் கவிஞர் முதலியோர் பாராட்டி உரைத்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கி அதன் பிற்பகுதி காலம் வரையில் எழுந்த சிலப்பதிகார ஆய்வு நூல்கள் பலவும் சிலப்பதிகாரத்தைத் தமிழ்த்தேசிய நூலாகவே உயர்த்திப் பிடித்தன. மகாகவி பாரதியார் ஒருபடி மேலே போய்ச் 'சிலப்பதிகாரம் பாரதம் முழுவதற்குமான பொதுச் சொத்து' என்று முழங்கினார். பேராசிரியர் ப. அருணாச்சலம் சிலப்பதிகாரம் இந்தியப் பண்பாட்டின் பின்புலத்தில்

தோற்றம் கொண்டது என்றனர் (ப.அருணாச்சலம்.1971). 'இந்தியத் தேசியக் காப்பியம்' எனும் சிந்தனைக்கு மாறாகத் தந்தை பெரியார் சிலப்பதிகாரத்தை ஆரிய கற்பனைக் கதை என்றும் பெண்ணடிமைக் கதை என்றும் கருத்துரைத்தனர். திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து சென்று 1949-இல் திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த அறிஞர் அண்ணா "தனித்தமிழ்ப் பண்பாட்டைப் படம் பிடிக்கும் வரலாற்று நூல் சிலப்பதிகாரம்" என்று மதிப்பிட்டார். தனித்தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் தமிழ்த் தேசியக் காப்பியம் எனும் அண்ணாவின் கருத்தை அன்றைய பெரும் பேராசிரியர்கள் பலரும் கையேற்றுச் சிலப்பதிகாரம் உச்சம் பெற்றிட வழி வகுத்தனர். பேராசிரியர்கள் கா.அப்பாதுரையார், ரா.பி.சேதுப்பிள்ளை, மு.வரதராசனார், சோமசுந்தரனார், சு.மகாதேவன், வ.சுப.மாணிக்கனார், ஆ.சிவலிங்கனார் முதலியோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். சிலப்பதிகாரத்தைப் பட்டி தொட்டி எங்கும் பரப்பிப் பொது மக்களிடையே கொண்டு செல்லும் பணி ஓர் இயக்கப் பணியாக மேற்கொள்ளப்பட்டது.

> ***சென்னையில் 21.03.1951இல் கண்ணகி பந்தலில் சிலப்பதிகார மாநாடு ஒன்று கூடியது. சிலப்பதிகாரம் பல படியாகப் புகழப்பெற்றது. தமிழ்ப் பண்பாடு, சரித்திரப் பண்பாடு, காவியப் பண்பாடு என்ற இன்னோரன்ன பண்பாடுகளும் சிலப்பதிகாரத்தில் அமைந்து கிடந்தமையை புலவர்கள் சாதித்தனர்***

என்று சிலப்பதிகாரப் பெரும் மாநாடுகள் குறித்துச் செய்திகள் தெரிய வந்துள்ளன (வீ.அரசு.2009).

1946இல் தமிழரசுக் கட்சியைத் தொடங்கிய ம.பொ.சிவஞானம் சிலப்பதிகாரத்தைத் தனது கட்சிக்கான அரசியல் நூலாகக் கொண்டார். தமிழர்களின் இன உணர்வை வளர்ப்பதற்கான கருவியாகவே இந்நூலைக் கருதினார்.

> ***சிலப்பதிகாரப் பிரச்சாரத்தைப் பொழுது போக்கிற்காக நான் தொடங்கவில்லை. வடக்கு எல்லையை வேங்கடமாகவும் தெற்கு எல்லையைக் குமரி முனையாகவும் சென்னையம்பதியைத் தலை நகரமாகவும் கொண்ட தமிழ் மாநிலம் படைக்கவும் அதிலே தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறவும் சாதி சமய வேறுபாடுகளை மறந்து தமிழர் எல்லாம் இனவழி ஒருமைப்பாடு அடையவும் பாடுபடுவதற்கு என்று சிலப்பதிகாரத்தைப் பிரச்சாரம் செய்கிறேன்.***

என்று ம.பொ.சி. தமது சிலப்பதிகார இயக்கப் பின்னணி குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார் (ம.பொ.சி.1978). இவர்தம் கருத்துரையில் தமிழ்நாட்டில் எல்லைக் கட்டமைப்பும் மொழிக் கட்டமைப்பும் பண்பாட்டுக் கட்டமைப்பும் எழுச்சிபெறக்

காணமுடிகின்றது. சிலப்பதிகாரம் எனும் இலக்கியப்பிரதி தோன்றிய காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் தேவைகள் எவையாக இருந்தனவோ அதே தேவைகள் ம.பொ.சி யின் கருத்துரையிலும் வெளிப்படக் காணமுடிகின்றது.

> ***இன உணர்வை வளர்த்துத் தமிழ் வழங்கும் நிலப்பகுதியை உண்மையான தமிழ்நாடு ஆக மாற்றுவதற்குச் சிலப்பதிகாரம் ஒன்றே சிறந்த கருவி என்று கால் நூற்றாண்டிற்கு முன்பே அறிந்தேன்.***

என்று ம.பொ.சி. (1979) பிறிதொரு இடத்திலும் தம் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். ம.பொ.சி. பெரும் பேராசிரியர்களைக் கொண்டு பல்வேறு சிலப்பதிகார மாநாடுகளை நடத்தினார். தமிழ்நாடு முழுவதும் இளங்கோ மன்றம் தொடங்கப்பட்டன. சித்திரைத் திங்கள் முழுமதிநாளைச் சிலப்பதிகார விழாவாகத் தமிழர்கள் கொண்டாடப் பரப்புரை செய்யப் பெற்றது. சிலப்பதிகாரப் பிரதி நாடகங்களாகவும் தெருக்கூத்துகளாகவும் திரைப்படங்களாகவும் வெளிவந்து பெரும் பாராட்டுகளைப் பெற்றது. இவற்றின் உச்சமாக 1970 களின் தொடக்கத்தில் பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக் கூடம் ஒன்றும் அன்றைய முதல்வர் மு. கருணாநிதியின் முயற்சியால் அமைக்கப்பட்டது. பாவை மன்றம், நெடுங்கல் மன்றம் முதலியனவும் கலை நுட்பங்களுடன் உருவாக்கப்பட்டன. சித்திரைத் திங்கள் முழுநிலா நாளில் அவ்விடத்தில் சிலப்பதிகார விழா நடத்தப்பட்டது. இலட்சக்கணக்கான தமிழர்கள் பங்கேற்ற விழாப் பேரணியும் நிகழ்ந்தது. சிலப்பதிகாரத்தை நினைவூட்டும் நுழைவு வாயில் தோரணங்கள் பலவும் அமைக்கப்பட்டன. இதே காலக்கட்டத்தில் தமிழகத்தில் பிறந்த குழந்தைகள் இளங்கோ என்றும் செங்குட்டுவன் என்றும் பெயரைப் பெற்றனர்.

இவ்விதமாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கிய சிலப்பதிகாரத்தின் ஆட்சி 1960-களின் முடிவில் உச்சம் பெற்றுத் தமிழினத்தின் தலையாய அடையாளமாகவும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட புனித அடையாளமாகவும் நிலைபேறு கொண்டது.

பகுதி மூன்று

உலக இனங்கள் பலவும் அவற்றின் அடையாளங்களாகச் சிலவற்றைப் பெற்றிருக்கும். அந்த அடையாளங்கள் யாவும் அந்தந்த இன மக்களால் புனிதமானவையாகவும் போற்றப்பெறும். விமர்சனங்களுக்கு அப்பாற் பட்டவையாகவும் கொண்டாட்டங்களுக்கு உரியவையாகவும் அவை திகழும். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட அடையாளங்கள் என்றால் அவற்றை மீட்டுருவாக்கம் செய்வதில் அந்த இனமே

முனைப்போடு நிற்கும். இதற்குத்தக்க சான்றாக இப்பொழுது வட இந்தியாவில் நடந்துவரும் சரஸ்வதி ஆற்றின் மீள் கண்டுபிடிப்புப் பணியைக் கூறமுடியும். வேத காலத்தில் ஒடியதாகக் கூறப்பட்ட சரஸ்வதி நதியைக் கண்டு பிடிக்கப் பல ஆயிரம் கோடி உரூபாய்கள் செலவு செய்யப் பெறுவதும் இப்பணியின் நீளம் ஐந்நூறு கிலோ மீட்டருக்கும் மேலானது என்பதும் தெரிய வரும்போது வட இந்தியரின் ஆர்வமும் தம் இன அடையாளங்கள் மீது அவர்கள் கொண்டிருக்கும் பற்றும் உறுதியும் தெரிய வருகின்றன. என்றாலும் அவ்வாறான ஒரு மீளெடுப்புப் பணியை நிறைவேற்றவே முடியாது என்ற ஒரு கட்டுரை அண்மையில் தமிழ் இந்து நாளேட்டில் (21-04-2015) இடம் பெற்றிருந்தது. நிறைவேற்ற முடியாது என்றாலும் எப்படியாவது தமது அடையாளத்தை மீட்டெடுக்க வேண்டும் எனும் வட இந்தியரின் உறுதி பாராட்டிற்குரியது. இதே போன்று இராமர் பாலத்தை இடித்தல் கூடாது என்போரின் மன உறுதியையும் அவர்தம் அரசியலையும் கூறுதல் வேண்டும்.

இவ்வாறான மன உறுதிகள் எவையும் தமிழர்க்கு இருப்பதாகத் தெரியவில்லை. இருந்திருந்தால் பூம்புகார் கடலாய்வும் லெமூரியக்கண்டக் கடலாய்வும் எப்போதோ மேற்கொள்ளப் பட்டிருக்கும். தமிழர் வரலாற்றைக் கட்டமைக்கும் எழுபதாயிரம் கல்வெட்டுப்படிகள் அச்சுரு பெற்றிருக்கும். இப்பட்டியல் நீளக்கூடியது. இங்கே சுட்டத்தக்க செய்தியாவது: தமிழர்கள் தம் அடையாளங்களை இழந்தவர்கள்; அடையாளங்களைக் கொண்டாடத் தெரியாதவர்கள் என்பதாகும். மொழி இழக்கப்பட்டது: நிறம், உணவு, சமயம், உடை, பண்பாடு என அனைத்து நிலையிலும் தமிழன் தன் அடையாளங்களை இழந்து நிற்பது அவலத்திற்குரியது, மாறாக அந்த அடையாளங்களைத் தாழ்வானவையாகவும் இழிவானவையாகவும் நம்ப வைக்கப்பட்டிருப்பது அதனைவிடவும் அவலத்திற்குரியது. இவ்வாறான ஒரு அவலநிலை உலகத்தில் வேறு எந்த இனத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்த்தேசியத்தின் அடையாளமாக முன்னிறுத்தப்பட்ட சிலப்பதிகாரத்தின் வீழ்ச்சியையும் இப்பின்னணியில் புரிந்து கொள்ள முடியும். தமிழினப் பண்பாட்டு வரலாற்றில் தமிழர்க்கு அடையாளத்தை அல்லது முதன்மையைத் தரும் எந்த ஒரு கூறும் வடமொழியிலிருந்து கடன் வாங்கப் பெற்றது எனக் கூறுவது காலங்காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் மரபாகும். தமிழ் மண்ணில் தமிழ் மரபிலிருந்து உருவான தொல்காப்பியத்தை உருவாக்கியவர் திரணதூமாக்கினி எனும் ஆரிய முனிவர் ஆவார் என்பது தொன்மம். அதே போல் தமிழ் எழுத்துகள் எல்லாமே அசோகரது பிராமியிலிருந்து

உருவானது என்பதும் தமிழர் மகிழ்ச்சியோடு நம்பிக் கொண்டிருக்கும் நம்பிக்கை ஆகும். இதற்குச் சிலப்பதிகாரமும் விதிவிலக்கன்று.

> ***தமிழில் எழுதப்பெற்ற முதற் காப்பியம் சிலப்பதிகாரம். காப்பிய வடிவம் சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்கப்பெற்றது.***

என்று பி.டி. சீனிவாச அய்யங்கார் (1989) கருத்துரைப்பார். தமிழ் இலக்கியம் பாணர் மரபிலிருந்து புலவர் மரபிற்கு மாறித் தனிநிலைக் கவிதை மரபிலிருந்து தொடர் நிலைக் கவிதை மரபிற்கு மாறிய பரிணாம வளர்ச்சியை ஆராயும் நிலை தமிழர்க்கு இல்லாமல் போனது. சிலப்பதிகாரத்தின் தன்மைகளை விரிவாக ஆராய்ச்சி செய்த பி.டி.சீனிவாச ஐயங்கார் (1989) பின் வருமாறு தமது முடிந்த கருத்துகளை முன்வைத்தனர்.

> ***சிலப்பதிகாரம் முதல் இரு காண்டங்கள் நனிமிகச் சிறந்த வீர காவிய நூலாகவும் மூன்றாவது காண்டம் தானே கற்பித்துக் கொண்ட ஒரு வீரனின் வெற்றிப் பெருஞ்செயல்கள் பற்றிய கற்பனைக் கதையாகவும் இருவேறு ஆசிரியர்களால் இயற்றப் பெற்ற இரு தனி நூல்களைக் கொண்டதாம் என்ற என் முடிவினைத் திரும்பவும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். சிலப்பதிகாரத்தை வரலாற்று நூலாகக் கொள்வது பொசிமியா நாட்டு நிலவியல் நூலுக்கு சேக்ஷ்பியரின் நூல்களை ஆதாரமாகவும் மிட் சம்மர் நைட்ஸ் ட்ரீம் என்ற நூலை வரலாற்றுக்கு ஆதாரமாகவும் கொள்வது போலாகும். இன்றைய இலக்கியத் திறனாய்வு, வரலாற்றுத் திறனாய்வு விதி முறைகளை நன்கு உணர்ந்த தமிழ்ப் பேராசிரியர்கள் இது பற்றி மேலும் ஆய்வு செய்துஇதனை உறுதி செய்யுங்கள் அல்லது ஏலாது என்று மறுத்து ஒதுக்குங்கள் என வேண்டிக் கொள்கிறேன்.***

பி.டி.சீனிவாச அய்யங்காரின் (1989) கூற்று, சிலப்பதிகாரத்தை வரலாற்று நூலாகப் பார்க்கக் கூடாது என்பதை வற்புறுத்துவதோடு அதிலுள்ள வரலாற்றுச் செய்திகள் யாவும் கற்பனைப் புனைவுகள் என்பதையும் விவரித்துள்ளன.

புலமையும் ஆய்வு நெறியும் கைவரப் பெற்ற வையாபுரிப் பிள்ளை (1954) 'மரபுவழி வந்த சில கருத்துகளையும் இசைப்பாடல் வடிவங்களையும் வடமொழி முலம் வந்த சில கதைகளையும் ஆதாரமாகக் கொண்டும் சிற்சில சரித உண்மைகளை அடிப்படையாகக் கொண்டும் இளங்கோவடிகள் தமது காப்பியத்தை இயற்றினார்' என்று கருத்துரைத்தனா.; மேலும் செங்குட்டுவனுக்கு இளவல் இளங்கோ என்று கூறுவது கற்பனைப் புனைவு என்றும் சேர வரலாற்றுக்கு அடிப்படை இல்லை என்றும் கூறினர்.

சிலப்பதிகாரம் தொடர்பாக நீண்டதொரு ஆய்வுக் கட்டுரையை வழங்கிய கைலாசபதி (1996) சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள செய்திகள் வரலாற்றுச் செய்திகள் இல்லை என்றும் அவற்றைப் பற்றி எடுத்துரைக்க விரும்பவில்லை என்றும் விவரிப்பர். இவரே, வாய்மொழியாக வழங்கிய சேர மன்னர் பற்றிய செய்திகளைப் பயன்படுத்திக் கொண்டு தன்னையும் கதையுடன் தொடர்பு படுத்தி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் புனைந்துள்ளார் என்று கூறுவர். பலவாறாகச் சிலப்பதிகாரத்தை ஆராய்ந்த கைலாசபதி (1996)

> ***இனம், மொழி, சமயம், பண்பாடு முதலியவற்றின் அடிப்படையில் நின்று கொண்டு சிலப்பதிகாரத்திற்குத் தற்காலத்தில் கூறப்பட்டுள்ள விளக்கங்கள் தகுதியில் குறைபாடு உடையனவாக இருப்பதைக் கண்டோம். ஆகவே மென்மேலும் அவற்றைக் கட்டி மாரடிக்காமல் வர்க்கக் கண்ணோட்டத்தில் கால ஆராய்ச்சியையும் சரித்திர உணர்வைக் கொண்டும் இலக்கிய ஆய்வு நிகழ்த்துவது இன்றியமையாதது'***

என்று முடிவுரைப்பர். இவ்வாறு பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு அறிஞர்கள் ஆய்வு நிகழ்த்தி இருப்பதை அறியமுடிகின்றது. இவ்வாறான கருத்துரைகளில் பி.டி.சீனிவாச அய்யங்கார், வையாபுரிப்பிள்ளை, கைலாசபதி ஆகியோரின் கருத்துரைகளை எளிதாக ஒதுக்கிவிடுதற்கு இல்லை. தலைசிறந்த ஆராய்ச்சியாளர்களாகிய அவர்களின் ஆய்வை மறுத்துரைப்பதும் எளிய செயலன்று. என்றாலும் பி.டி. சீனிவாச அய்யங்கார் கூறிய, 'சமஸ்கிருதத்திலிருந்து காப்பிய வடிவம் கடன் பெறப்பட்டுள்ளது' என்ற கருத்து ஓர் அழுத்தத்தைத் தருவதாக உள்ளது. இதேபோல் 'உறுதி செய்யுங்கள்' அல்லது 'ஏலாது என மறுத்து ஒதுக்குங்கள்' என்று கூறுவதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். கைலாசபத்ஜீ கூறும் 'மேன்மேலும் இவற்றைக் கட்டி மாரடிக்காதீர்கள்' என்ற கருத்தும் கோடிடத்தக்கது. இவ்வாறான சொல்லாட்சிகள் யாவும் அன்றைய காலக் கட்டத்தின் கருத்து மோதல்களின் எதிரொலி என்றுதான் கூறுதல் வேண்டும்.

மொழிவழித் தமிழ்த்தேசியம் என்பதும் அதற்குச் சங்க இலக்கியங்கள் முதலாகச் சிலப்பதிகாரம் உட்பட அதன் பெருமைகள் பறைசாற்றப்பட்டுப் பட்டிதொட்டி எங்கும் தமிழ் உணர்வை வீறுபெறச் செய்த இயக்கப் பின்னணியும் குறிப்பிடத்தக்கவை. இவ்வாறான இயக்கங்கள் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் உச்சம் பெற்ற காலத்தில்தாம் இயக்க நோக்கத்தைச் சிதைக்கும் ஆய்வுகளும் வெளிவரத் தொடங்கின. கல்தோன்றி

மண்தோன்றாத காலத்தே தமிழினம் தோன்றியது எனும் கருத்துரு வலுப் பெற்ற போது வெளிவந்த கைலாசபதியின் 'அடியும் முடியும்' எனும் கட்டுரை அத்தொன்மத்தை அடியோடு சிதைத்து எறிந்தது. இவ்வாறான ஆய்வுகளைக் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது அவதூறு கூறுவதோ இக்கட்டுரையின் நோக்கம் அன்று. ஆனால் காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு இனத்தை மொழிவழியாவும் இலக்கியங்கள் வழியாகவும் மீட்டெடுக்கும் முயற்சி நடைபெறும் போது இவ்வாறான ஆய்வுகள் அம்முயற்சிகளை முறியடித்தன. அதாவது வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைக்கப் பட்ட கதையைப் பழமொழியை இங்குக் குறிப்பிடலாம். இவ்வாறான நிகழ்வுகள் வேறு இனங்களில் நடைபெறுவதை அவ்வின மக்கள் அனுமதிப்பது இல்லை.

பகுதி நான்கு

சிலப்பதிகாரத்திற்கு அடிப்படையான கண்ணகி தொன்மம் அல்லது வழிபாடு குறித்த ஆய்வு இன்றைய தமிழ்ச் சூழலில் தேவையான ஒன்றாகத் தோன்றுகின்றது. இக்கட்டுரையின் முகப்பில் கூறப்பட்டது போலக் கண்ணகி வழிபாடு கேரளம் தொடங்கி இலங்கை வரையிலான அகண்ட தமிழகத்தின் இலக்கிய மரபாகவும், சமய மரபாகவும் விளங்கி உள்ளது. தமிழ் மண்ணிலிருந்தே கண்ணகி வழிபாடு பிறபகுதிகளுக்கும் பிற நாடுகளுக்கும் பரவியது என்பது சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை தரும் தகவல் ஆகும். ஆனால் வருந்தத் தக்க நிலையில் தமிழகத்தில் கண்ணகி வழிபாட்டிற்கான சுவடே இல்லாமற் போனது (ஒரு சில கூறுகளைச் சு.சண்முக சுந்தரம் (2011) சுட்டுவர்). 1980 களின் இறுதியில் பேராசிரியர் க.ப. அறவாணன் பேராசிரியர் தாயம்மாள் அறவாணன் ஆகியோர் பல்கலைக்கழக மான்யக் குழு நிதி உதவியோடு பூம்புகாரில் ஒரு கள ஆய்வை மேற்கொண்டனர். அந்தக் கள ஆய்விற்கு உதவியாளனாக இக்கட்டுரை ஆசிரியரும் சென்றிருந்தார் (பின்னாளில் இக்கள ஆய்வுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு 'கண்ணகி மண்ணில்' எனும் தலைப்பில் தாயம்மாள் அறவாணன் அவர்கள் ஒரு நூலை வெளியிட்டார்கள். இக்கள ஆய்வில் தாயம்மாள் அறவாணன் அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது). கள ஆய்வில் கண்ணகி வழிபாடு பற்றிய எந்தச் செய்திகளையும் அறிய முடியவில்லை. தாசில்பண்ணை இராசேந்திரன் அவர்களால் பாதுகாக்கப்படும் கண்ணகி கோட்டம் குறிப்பிடத்தக்கது. இக்கோட்டம் திரு இராசேந்திரன் அவர்களின் தந்தையாரால் உருவாக்கப்பட்டது. மற்று; கண்ணகி என்ற பெயர் வழக்கு தீய சகுனமாக மக்களிடையே படிந்த விட்ட நிலைமையை உணரமுடிந்தது. இவ்விடத்தில் 2014

பிப்ரவரித் திங்களில் வந்த இரண்டு இதழ்களின் செய்திகள் குறிப்பிடத்தக்கவை. தினமலர் ஆன்மீக மலரில் வெளியான செய்தி வருமாறு:

> ***நீதி தேவதையான கண்ணகி திருவனந்தபுரம் ஆற்றுக்காலில் பகவதியம்மனாக அருள் பாலிக்கிறாள். இங்கு மாசித்திங்கள் பூரத்தன்று நடக்கும் பொங்கல் விழா உலகப் பிரசித்தி பெற்றது. கடந்த ஆண்டில் (2013) 48 இலட்சம் பேர் பொங்கலிட்டுச் சாதனை படைத்த இவ்விழாவில் இந்த ஆண்டு மேலும் அதிகம் பேர் பொங்கலிட உள்ளனர்.***

இந்த செய்தி வெளியான அடுத்த வார ஆனந்தவிகடன் இதழில் (28.02.2014) வெளிவந்த செய்தியும் குறிப்பிடத்தக்கது. அது வருமாறு:

> ***சுமார் ஐம்பது இலட்சம் பெண்கள் கூடிப் பொங்கல் வைத்துக் கோலாகல கின்னஸ் சாதனை படைத்திருக்கிறார்கள். திருவனந்தபுரத்தில் அங்குள்ள ஆட்டுக்கல் பகவதியம்மன் கோவில் பொங்கல் திருவிழாவின் நாயகி கண்ணகி. மதுரையை எரித்து விட்டுக் கோபத்துடன் வெறியேறிய கண்ணகி கேரளா சென்று ஆட்டுக் கல்லில் சில காலம் தங்கியதாகச் சொல்கிறது தல வரலாறு. கடுங்கோபத்துடன் இருந்த கண்ணகியைச் சாந்தப் படுத்தவே இந்தப் பொங்கல் விழா.***

கேரள நாட்டில் கோடிக் கணக்கான பெண்களின் வழிபாட்டிற்குரிய தெய்வமாக விளங்குகிறாள் கண்ணகி என்பதே மேல் காட்டப்பெற்ற இதழ்கள் சுட்டும் செய்தியாகும். கேரளாவில் பரவலாகக் கண்ணகி வழிபாடு செல்வாக்கு பெற்றுள்ளது. கொடுங்கல்லூர் பகவதி அம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடாக இருந்து மாறியுள்ளது என்பதை அறிஞர் விளக்குவர் (அ.கா.பெருமாள் & செந்தீ நடராசன் 2015).

> ***கொடுங்கல்லூர் பகவதியின் வழிபாட்டுச் சடங்குகள், பழமரபுக் கதைகள், வழிபாட்டுப் பாடல்கள், விழா நிகழ்வுகள் ஆகியவற்றைத் தொகுத்துப் பார்க்கும் போது கண்ணகி வழிபாடு சங்ககாலம் தொடங்கிக் கி.பி.16-ஆம் நூற்றாண்டு வரை தொடர்வதையும் அதன் பின்னர்ப் பகவதி அம்மனாக மாற்றப்பட்டதையும் காணமுடிகிறது. மாறினாலும் பழைய மரபுகள் மறையாமல் இருப்பதையும் அறியமுடிகின்றது.***

கேரளத்தில் பரவலாக இருந்த கண்ணகி வழிபாடு பகவதி வழிபாட்டோடு இணைந்ததால் பல்வேறு மாற்றங்கள் நடந்துள்ளன. என்றாலும் கேரளாவி;ல் நாற்பதிற்கும் மேற்பட்ட கோயில்கள் கண்ணகி வழிபாட்டிற்குரியவையாகத் திகழ்வதைக் காணமுடிகின்றது.

இவ்வழிபாட்டின் போது கோடிக்கணக்கான மக்கள் கூடி வழிபாடு நடத்துவதையும் அறியமுடிகின்றது. கோவலன் கொலையுண்ட போது கண்ணகி காளியாக மாறி நீதி கேட்கச் செல்கிறாள். இந்நிகழ்ச்சி கேரளத்தில் சாமியாடி செய்யும் ஒரு சடங்காக இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. சாமியாடி ஒற்றைச் சிலம்பை அணிந்து தலைமயிரை விரித்துப் போட்டு உடம்பில் குருதி வழிய அருள் வாக்கு கூறுவது கண்ணகி தொன்மத்தின் தொடர்ச்சியே என்பர் இந்துசூடன். தொடக்க காலத்தில் கேரளத்தில் சேரன் கண்ணகிக்காக நட்ட மாசதிக்கல் வழிபாட்டின் சடங்குகள் இன்னும் மடியவில்லை என்றும் அவை ஸ்ரீகுரும்பா, பத்திரகாளி, நல்லம்மா, மணியம்மா முதலிய தெய்வங்களை வாழ்த்திப் பாடும் பாடல்களில் கண்ணகி புராணம் உள்ளது என்றும் கே.கே.என்.குரூப் விளக்கி உள்ளார். வட கேரளத்தில் உள்ள சீர்மக்காவு கோயில்கள் கண்ணகிக்கு உரியவை என்று வில்லியம் லோகன் கூறுவதை அறிஞர் விளக்கி உள்ளனர். பல்வேறு கண்ணகி கோயில்களில் பாடப்படும் தோற்றம் பாட்டு குறிப்பிடத்தக்கது. இப்பாட்டில் கண்ணகி வரலாறு இடம் பெறக் காணலாம். இதே போலத் தெறிப்பாட்டு என்பதையும் அறிஞர்கள் விளக்கி உள்ளனர்.

ஈழத்தில் கண்ணகி வழிபாடு பரவலாகவும் செழிப்பாகவும் நடைபெற்றுவருவதை அறியமுடிகின்றது. நூற்றுக்கணக்கான கண்ணகி கோயில்கள் ஈழத்தில் இருப்பதை 'ஊர் சுற்றுக் காவியம்' எடுத்துக் கூறுகின்றது. ஒவ்வொரு இடத்திலும் உள்ள கண்ணகி கோயில்களின் பெருமை முதலியவற்றை ஊர் சுற்றுக் காவியம் விவரிக்கும். கண்ணகி வழிபாட்டின் ஆதிக்கம் பௌத்த மதத்திலும் ஊடுருவி உள்ளதையும் அறிஞர்கள் விளக்கி உள்ளனர். பௌத்த மரபில்; உள்ள 'பத்தினி தெய்யோ' என்பது பத்தினி வழிபாட்டிற்குரிய தெய்வத்தைக் குறிக்கின்றது. ஈழத்தழிழர் தம் மீட்சிக்கான தெய்வமாக அண்மையில் கண்ணகி வழிபாட்டை நடத்தி வருவதை என். சண்முகலிங்கன் (2013) விவரித்துள்ளார். ஈழத்தழிழர் வறுமை, வறட்சி, நோய், துன்பம் இவற்றிலிருந்து விடுபட்டு வாழ்வின் மீட்சிக்கும் வளத்திற்கும் வேண்டப்படும் தெய்வமாக இன்று கண்ணகி காட்சி தருகின்றாள். ஏராளமான வழிபாட்டுப் பாடல்கள், காவியங்கள், கதைப்பாடல்கள், வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகள், நேர்த்திக் கடன்கள் என்று கண்ணகி வழிபாடு விரிவான தளத்தில் நிகழ்வதை அறியமுடிகின்றது. கொம்பு முறித்தல், குளுத்திப்பாட்டு தேங்காய் விளையாட்டு, தீமிதித்தல், நீர் வெட்டும் சடங்கு, வசந்தன் ஆடல், குடுக்கைக் கூறல் எனப் பலவாறான மரபுகள், ஈழக் கண்ணகி வழிபாட்டுப் மரபுகளாகக் காட்சி தருகின்றன.

இவ்வாறு கேரளத்திலும் ஈழத்திலும் கண்ணகி வழிபாடு செழிப்போடு விளங்கத் தமிழகத்தில் மட்டும் மறைந்து போனமைக்கான காரணங்கள் ஆராயத்தக்கவை. தமிழருக்கான புனித அடையாளமாகத் திகழவேண்டிய கண்ணகி வழிபாட்டை அழித்ததின் பின்புலத்தில் நிகழ்த்தப்பட்ட அரசியல் மிகவும் நுட்பம் வாய்ந்தது. இந்த அரசியல் தமிழகத்திலும் நிகழ்ந்துள்ளது; ஈழத்திலும் நிகழ்ந்துள்ளது. இதனைச் சற்று விரிவாக ஆராய முடியும்.

சைவ சமயத்தின் எழுச்சிக்காகப் பாடுபட்ட ஆறுமுகநாவலர் கண்ணகி வழிபாட்டை மறுதலித்துள்ளார். எல்லாம் சிவமயமென்னும் கொள்கை உடைய அவர் 'சமண சமயத்துச் செட்டிச்சியைத் தெய்வமாக வழிபடுவதா, என்று கேள்வி எழுப்பியுள்ளார். இதன் விளைவாக ஒரு காலத்தில் கண்ணகி கோயில்கள் எல்லாம் ராஜராஜேஸ்வரியம்மன் கோயில்களாக மாறத் தொடங்கியுள்ளன. கண்ணகியை மக்கள் வழிபட்டதற்குக் காரணம் பக்தி உணர்வு இல்லை அவள் மேல் கொண்ட அச்சமே காரணம் என்று பிரண கார்த்தி ஹர சிவன் கூறியுள்ளார். அவர் கூறுவது வருமாறு (பஞ்சாங்கம்.1993).

> ***கண்ணகி செங்குட்டுவனாலும் மற்றவர்களாலும் பூசிக்கப் பட்டதாக நமது நூலாசிரியர் கூறுகிறார். அவ்விதம் பூசித்திருந்தால் அது அவளது அருமையான கற்பிற்காக இராது. ஏனெனில் அவள் கற்பு அவ்வளவு அருமை உள்ளதன்று. அவள் தன் பொறைக்கும் இராது அவளிடத்தில் பொறையே இன்மையால். அவளை வழிபடுவதற்குக் காரணம் மதுரையைத் தீயூட்டியவாறு தம் நகரங்களையும் செய்துவிடுவாளோ என்ற பயத்தாலே இருக்க வேண்டும். மேற்கூறிய காரணங்களாலேயே இப்பொழுது திரௌபதியைப் போலவே இரத்தவெறியால் கண்ணகியும் தாழ்ந்த ஜாதியர்களால் பூசிக்கப்பட்டு வருகிறாள்.***

இத்தகவலோடு சீதை பொறுமையால் உயர் சாதியினர் பூசிக்கத்தக்கவளாக விளங்குகிறாள் என்ற கூடுதல் தகவலையும் அவர் தந்துள்ளார். இவ்வாறான கருத்துகள் கண்ணகி வழிபாட்டை மறுத்ததோடு அல்லாமல் அவ்வழிபாட்டை மேற்கொள்ளுவோர் இழிந்தோராகவும் காட்சிப்படுத்தியுள்ளன. தவிரவும் கண்ணகி மானிடப் பெண் ஆவாள் என்பதையும் மானிடப் பெண்ணை வணங்குவது மரபில்லை என்பதையும் இக்கருத்துக்கள் தெளிவுப்படுத்தின.

கண்ணகி தொன்மம் அல்லது பத்தினி வழிபாடு என்பது அயலிடத்தில் இருந்து தமிழகத்திற்கு வந்துள்ளது என்ற கருத்தும் ஆய்வுலகில் உண்டு.

கண்ணகி தொன்மம் தமிழகத்திற்குரியது அன்று என்பதை நிறுவுவதற்குப் பொது நிலையில் பத்தினி வழிபாடு என்னும் கருத்துநிலை முன்வைக்கப்பெற்றது. கண்ணகி என்னும் பெயரே தமிழ்ப் பெயர் அன்று என மு.இராகவையங்கார் (1938) தமது ஆராய்ச்சியில் நிறுவியுள்ளார். கண்ணகி என்னும் பெயர் வடமொழி மூலத்திலிருந்து உருவானது என்றும் வடமொழித் தொன்மத்தில் உள்ள பதினொரு தேவதைகளுள் ஒருத்தியின் பெயரே அது என்றும் அவர் விளக்கினார்.

கண்ணகியின் பெயர் பற்றி மிக விரிவாக விளக்கிய மு. இராகவையங்கார் (1938) ஆய்விலிருந்து பின் வரும் முடிவுகள் பெறப்படுகின்றன.

1. கர்ணக, கர்ணிகா என்னும் சொல்லில் இருந்தே கண்ணகி எனும் பெயர் தோன்றிருக்க வேண்டும்.
2. கர்ணிகை என்பவள் தேவகணத்தாருள் ஒருத்தி, மேனகை, ஊர்வசி, கர்ணிகை, கிருதாசி, வச்சாசி முதலிய அப்சரஸ் பதினொருவருள் கர்ணிகையும் ஒருத்தி.
3. வடமொழியில் கர்ணக, கர்ணிக என்னும் சொற்கள் திருமகள் தங்கும் தாமரைப் பீடத்தைக் குறிக்கும்.
4. இதேபொருளில் தான் கண்ணகியைக் குறித்து வேட்டுவரியில் சாலினி

   ஒருமாமணியாய் உலகிற்கு ஓங்கிய

   திருமாமணி (சிலம்பு. வேட்டுவ.49, 50)

   என்று குறிப்பிட்டுள்ளாள்.
5. மேல் பாடலடியில் வரும் திருமாமணி என்பது திருமகள் தங்கும் தாமரைப் பீடத்தைக் குறித்து அதுவே 'கர்ணிக' என்னும் இயற்பெயரைச் சுட்டியுள்ளது.
6. திரு = திருமகள், மாமணி = சீரியமணி > தாமரைப் பொகுட்டு - திருமகள் தங்கும் தாமரைப்பீடம் = கர்ணிக, என்பது பொருள்.
7. இவ்வாறு பெயர் பொருத்தப்பாட்டை ஆராயும் மு.இராகவையங்கார் நற்றிணைப் பாடல் ஒன்று (219) சுட்டும் திருமாவுண்ணி என்ற பெயர் திருமாமணி என்று இருந்து பின்னர்ப் பாடபேதகமாகத் திருமாவுண்ணி என மாறி இருக்க வேண்டும் என்றும் முடிவு கூறுவர்.

மு.இராகவையங்கார் சிறந்த ஆராய்ச்சியாளர் என்பதை அவர்தம் ஆய்வுகளே மெய்யுறுத்தும். என்றாலும் கண்ணகி பெயர் பற்றிய ஆராய்ச்சியில் வலிந்து வடமொழிச்

சார்பைப் புகுத்த வேண்டிய நிலை ஏன் தோன்றியது என்பது புலனாகவில்லை. தமிழ் மூலங்கள் எல்லாவற்றிற்கும் வடமொழியைத் தேடி அலைந்த இலக்கிய அரசியலின் பின்புலத்தில் இக்கருத்தைப் பொருத்திப் பார்க்கப் பொருந்தும.; கண்ணகி என்பது தமிழ்ப் பெயர் என்பதற்குச் சங்கச் சொல்லாட்சியிலும் சான்று உண்டு. நக்கண்ணையார் என்று அறியப்படும் சங்கப் பெண்பாற்புலவர் பெயருக்கும் கண்ணகி பெயருக்கும் தொடர்பு உண்டு. நக்கண்ணையார் என்ற பெயரை நகு + கண் என்று பிரித்துப் பொருள் காணுதல் வேண்டும். நகு + கண் = நக்கண் என்று இச்சொல் அமைவு பெறும். நகு + நகுதல் என்ற பொருளில் "சிரிக்கும் கண்களை உடையவள்" என்பதாக நக்கண்ணையார் என்னும் பெயர் அமைந்துள்ளது. நக்+ உ + கண், நக்கண் என்று இச்சொல் அமையும் இவ்வாறே கண்ணகி என்ற பெயரும் கண் + நகு + இ என்றவாறு அமைந்து 'கண்களின் சிரிப்பு' அல்லது 'கண்ணால் நகைப்பவள்' எனும் பொருளைப் பெற்றுள்ளது. நாட்டுப்புற வழக்காற்றில் கண்ணகியின் பெயர் 'கண்ணகை' என்று அமைந்துள்ளதையும் இணைத்து நோக்குதல் வேண்டும்.

ஈழத்துக் கண்ணகி வழிபாட்டு மரபில் கண்ணகியின் பெயர் 'கண்ணகை' என்றே குறிப்பிடப்பெறுகின்றது. ஈழத்தின் கண்ணகி வழிபாடு பெரும் எழுச்சியோடு கொண்டாடப் பெறுகின்றது. வழிபாட்டு மரபுகள், சடங்குகள், விளையாட்டுகள், பாடல்கள், காவியங்கள் என ஈழத்துக் கண்ணகி மரபு விரிவான தளத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஈழத்தமிழர்கள் கண்ணகியைக் கண்ணகை அம்மன் என்று அழைக்கின்றனர். ஈழத்தில் கண்ணகி குறித்த காவியங்கள் வழிபாட்டுப் பாடல்கள் முதலானவை பலவும் கண்ணகியைக் கண்ணகை என்றே குறிப்பிடக் காணலாம்.

கண்ணகை அம்மன் குளுத்திப்பாடல், அங்காணமைக் கடவை கண்ணகை அம்மன் காவியம், வற்றாப்பழைக் கண்ணகை அம்மன் காவியம், பட்டிமேடு, தாண்டவன்வெளி கண்ணகை அம்மன் காவியம் தம்புலுவில், பட்டிநகர், கண்ணக்குடா கண்ணகை அம்மன் மழைக்காவியம் முதலியன கண்ணகியைக் கண்ணகை என்று குறிப்பிடக் காணலாம். கண்ணகை எனும் இந்தப் பெயரும் கண் + நகை என்றவாறு கண்களின் சிரிப்பு அல்லது சிரிக்கும் கண்கள் என்னும் பொருளைத் தருகின்றது.

ஆகக்'கண்' என்ற சொல்லும் 'நகை' என்ற சொல்லும் தூய தமிழ்ச் சொல்லாய் இருந்து கண்ணகி என்னும் பெயர் உருவாகக் காரணங்களாக இருந்துள்ளன என்று முடிவு உரைப்பதே சரியானதாக இருக்கும். மாறாக வடசொல்லான 'கர்ணிகை' என்னும்

சொல்லில் இருந்து உருவானது என்று முடிவுரைப்பது தேவையற்றது. எனவே கண்ணகி என்னும் பெயர் தமிழ்ப்பெயரே என்பதை உணர்த்துதல் வேண்டும்.

பத்தினி வழிபாடு உரோம நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து பரவியது என்ற கருத்தும் உண்டு. பைனெஸ் (Fynes, R.c.c. 1993)

எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றும் குறிப்பிடத்தக்கது. இசிஸ்-பத்தினி: உரோம நாட்டிலிருந்து இந்தியாவிற்குப் பரவிய சமயக்கருத்து (Isis and pattini: The Transmission of a Religious Idea from Roman Egypt to India) என்னும் அந்தக் கட்டுரை தன் கணவனுக்காகப் போராடும் மனைவியின் தொன்மக் கதையை விவரித்து அத்தகு பத்தினியர் பற்றிய வழிபாட்டு மரபுகள் உரோமிலிருந்து இந்தியாவிற்குள் பரவின என்று பைனெஸ் (Fynes) விவரித்துள்ளார். இது பற்றிய விவரங்கள் வருமாறு.

வில்லியம் தாமஸ் என்பவர் 1786 ஆம் ஆண்டு நிகழ்த்திய ஆராய்ச்சி குறிப்பிடத்தக்கது. இதன்படி இசிஸ் (Isis) வழிபாட்டு மரபானது புராதன எகிப்தில் இருந்து இந்தியாவில் பரவிய தன்மையை அவர் விவரித்துள்ளார் எகிப்து நாட்டின் இசிஸ் தெய்வத்தையும் ஒசிரிஸ் (Osiris) தெய்வத்தையும் இந்திய மரபில் உள்ள ஈஸ்வர,ஈஸ்வரி வழிபாட்டுடன் இணைத்து நோக்கியுள்ளார். இரண்டு வழிபாட்டு மரபுமே இயற்கையின் ஆற்றலை மையமிட்டவை. இதற்குப் பின்புலமாகப் பல்வேறு வரலாற்றுத் தரவுகள் இருந்திருக்க வேண்டும். வில்லியம் தாமஸ் (1786) ஆய்வின்படி இசிஸ் வழிபாட்டு மரபுகள் இந்தியாவில் பரவி அவை பத்தினி வழிபாட்டு மரபுகளுக்கு அடிப்படையாக ஆகி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். என்றாலும் பைனெஸ் (Fynes, R.c.c) கருத்தின் படி வில்லியம் தாமஸின் கருதுகோளுக்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை என்பது தெரிய வருகின்றது. ஆயினும் இரு வழிபாட்டு மரபுகளிலும் சில ஒற்றுமைகள் உண்டு.

கி.மு மூன்றாம் நூற்றாண்டு அளவில் இசிஸ் பெண் தெய்வம் ஒசிரிஸ் தெய்வத்தின் ஆளுகைக்குள் இருந்துள்ளதற்குத் தரவுகள் கிடைத்துள்ளன. கணவன் இறந்து விட அதனால் ஏற்படும் மிகத் துயரமான சூழ்நிலை-அச்சூழ்நிலைக்குள் ஆழ்ந்திருந்த பெண் குழுவிலிருந்து இசிஸ் பெண் வழிபாட்டு மரபுகள் தோன்றி இருக்க வேண்டும். புராதன காலத்தில் இப்பெண் தெய்வம் அனைத்துக் கடவுளருக்கும் தாயாகவும் இரண்டு எகிப்தியர்களுக்குத் தலைவியாகவும் மனிதர்களுக்கும் கடவுளருக்கும் உயிர்ப்பாற்றல் வழங்குகின்ற பெண் தெய்வமாகவும் உருவாக்கப்பட்டிருந்தாள்.

புளுடார்க் (*Plutarch*) என்பவர் இசிஸ் வழிபாட்டு மரபுகளை விரிவுபட ஆராய்ந்துள்ளார். இவரது கருத்தின்படி இசிஸ் தொன்மம் கி.மு 120 களில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

இத்தொன்மம் ஒசிரிஸ் பூமி தெய்வத்தின் மகனாகவும் இசிஸ் அவனுடைய சகோதரியாகவும் சித்திரித்துள்ளது. இசிஸ் ஒசிரிஸின் சகோதரியாக இருப்பதாலேயே அவள் அவனுடைய மனைவியாகவும் இருக்கின்றாள். (இது சகோதர மணத்தை வெளிப்படுத்துவது). ஒசிரிஸ் எகிப்து மன்னனாக இருந்த போது ஆதி மக்களை விலங்கு நிலையிலிருந்து மீட்டெடுத்துள்ளான். மக்களுக்கு ஒழுக்க விதிகளைக் கற்றுத் தந்ததுடன் உணவு பயிரிடும் முறையையும் கற்றுக் கொடுத்தான். உலகம் முழுவதும் சென்று மனித இனத்தை நாகரிக நிலைக்கு உயர்த்தினான்.

ஒசிரிஸ் எகிப்தை விட்டு வெளியே சென்றிருந்த போது அவனுடைய சகோதரன் செத் (*Seth*) என்பவன் ஒசிரிஸிக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து அவனைக் கொன்றுவிடுகிறான். ஒசிரிஸைச் செத் தாக்கும் போது ஒசிரிஸின் மார்பிலிருந்து நீர்; பெருக்கெடுத்து நைல் நதியாகக் கடலைத் திறந்து விட்டது. இசிஸ் இதனை அறிந்து மிகச் சோகத்தில் ஆழ்ந்து போகிறாள், அழுது புலம்பியபடி அவள் ஒசிரிஸைத் தேடிப் போவதற்குள் அவன் மார்பைச் சூழ்ந்து எகிப்திய அத்தி மரம் வளர்ந்திருந்தது. பைப்லோஸ் (*Byblos*) மன்னன் இந்த அத்தி மரத்தை விரும்பித் தன் மாளிகைக்கான தூண்களைச் செய்யக் கொண்டு சென்றான். பல இடங்களில் தேடி அலைந்த இசிஸ் இறுதியில் பைப்லோஸ் அரண்மனையை அடைந்து மரமாக வளர்ந்திருந்த தன் கணவன் உடலைப் பிச்சையாகக் கேட்டுப் பெறுகிறாள். மரத்தையும் ஒசிரிஸின் சவப்பெட்டியையும் எடுத்து இசிஸ் பூட்டோ (*Buto*) எனும் இடத்திற்குக் கடல் வழியாகச் செல்கிறாள். அங்கே அவள் மகன் ஹோருஸைக் (*Horus*) கண்டு அங்கே தங்குகிறாள். வேட்டைக்குச் சென்ற செத் (Seth) திரும்பி வந்து சவப்பெட்டியில் ஒசிரிஸின் உடலைக் கண்டு அதனைத் துண்டு துண்டாக வெட்டி எறிகிறான். மீண்டும் இசிஸ் அத்துண்டுகளை ஒன்றிணைத்துத் தன் கணவனை உருவாக்குகிறாள் அதற்குள் அவனது ஆண் உருப்பைக் கடல் மீன்கள் தின்று விடுகின்றன. இந்நிலையில் இசிஸ் தன் மகன் ஹோருஸ் உடலில் புகுந்து நீண்ட போராட்டத்திற்குப் பின் செத்தைக் (Seth) கொள்கிறாள். அதன் பின் தன் கணவன் உடலுடன் உறவு கொண்டு மீண்டும் ஒரு மகனைப் பெற்றெடுகிறாள்.

இவ்வாறாக இத்தொன்மம் விரிவடைந்து செல்வதை விவரிக்கும் பைனெஸ் (*Fynes, R.c.c*) இந்தத் தொன்ம மூலங்களே இந்தியாவில் பத்தினி வழிபாட்டு மரபுகளை வடிவமைத்தன என்று முடிவுரைத்துள்ளார்.

தமிழில் வழங்கப்பெறும் ஒரு பண்பாட்டுக் கூறு தமிழர்க்குரியது இல்லை என்று கூறும் ஒருவகை உயர் மனப்போக்குடைய கருத்தியல், காலம் காலமாக நிகழ்வதுதான்.

அவ்வாறான கருத்தியலை உண்மையே என்று நம்பும் ஒருவகை அடிமை மனவியலும் காலம் காலமாகத் தமிழர்க்குரியதாக இருந்து வந்துள்ளதையும் வரலாறு எடுத்து மொழியும். இந்த வகையில் தமிழரின் ஆதி பண்பாட்டிற்குரியதும் தமிழ்த் தாய்த் தெய்வ வழிபாட்டிலிருந்து தோற்றம் பெற்றதுமான கண்ணகி என்பதும் தமிழர்குரியது இல்லை என்று ஆராயும் மனப்போக்கின் எடுத்துக்காட்டாகவே பைனெஸின் ஆய்வினை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பைனெஸின் பத்தினி வழிபாடு பற்றிய மீட்டுருவாக்கம் பற்றிக் கூடுதலாக விவாதித்தவராக இலங்கையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் கணநாத் ஒபய சேகர அவர்களைக் குறிப்பிட வேண்டும். அவருடைய 'பத்தினி தெய்வ வழிபாட்டு மரபு' (ஜிலீமீ நீuறீt ஷீயீ ரீஷீபீபீமீss ஜீணீttவீஸீவீ) எனும் உளவியல்சார் பண்பாட்டியல் மானிடவியல் நூல் மிகவும் முதன்மை பெற்றது. இந்நூலினை ஒட்டிச் சண்முகராஜா சிறிகாந்தன் (2013). எழுதிய பௌத்த மரபில் பத்தினி தெய்யோ எனும் கட்டுரையையும் குறிப்பிடுதல் வேண்டும். இதன் விரிவாக்கமாகப் பக்தவத்சலபாரதி (2015) கூடுதல் தகவல்களோடு எழுதிய 'பவுத்த மரபில் பத்தினி தெய்யோ' எனும் கட்டுரை முதன்மையான கவனத்தைப் பெறுகின்றது.

இலங்கைச் சூழலில் கண்ணகி வழிபாடு உச்சம் பெற்ற வழிபாடாக நடந்து வருவதைக் இக்கட்டுரை முன்னர்க் குறிப்பிட்டது. இக்கண்ணகி வழிபாடு பத்தினி வழிபாடு எனும் பெயரில் சிங்களவர் இடையே பெருத்த செல்வாக்கோடு திகழ்வதையும் அறிஞர்கள் எடுத்துக்காட்டி உள்ளனர் (என். சண்முகலிங்கன்.2013). இது பற்றிச் சண்முகராஜா சிறிகாந்தன் (2013) விவரிப்பது வருமாறு:

இலங்கையில் பௌத்தர்கள் மத்தியில் பத்தினி தெய்வம் மிகப் பிரபலமான தெய்வமாகும். இவ்வாறே இது கிழக்கிலங்கையிலும் முதன்மையான தெய்வமும் ஆகும். பத்தினி என்ற சொல் தனியே பௌத்த மரபிற்கு மட்டும் சொந்தமானது அன்று. சி.கணபதிப்பிள்ளை என்பவர் 1978-இல் 'பத்தினி வழிபாடு' எனும் நூலைத் தமிழில் எழுதியுள்ளார். எனினும் தமிழர்கள் மத்தியில் பொதுவாகக் 'கண்ணகை அம்மன்' என்றே அழைக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தேரவாத பௌத்த மரபில் பெண் தெய்வங்கள் பிரதான இடத்தினைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் இலங்கையில் தேரவாத பௌத்தக் கொள்கை நடைமுறையில் இருந்த போதிலும் பத்தினித் தெய்வ வழிபாடு முதன்மையடைந்துள்ளது. பௌத்த மக்கள் பத்தினியைப் பல்நிலை இயல்புடையவளாகப் போற்றுகின்றனர். வளம், ஆரோக்கியம்

ஆகியவற்றிற்கான தெய்வமாகவும், பௌத்த மதத்தினைப் பேணிப் பாதுகாப்பவளாகவும் ஒட்டுமொத்தமாக இலங்கைத் தீவின் காவல் தெய்வமாகவும் பத்தினியைச் சிங்கள பௌத்த மக்கள் போற்றி வழிபடுகின்றனர். கண்டியில் பத்தினி வழிபாட்டின் நிறுவனமயமாக்கம் என்பது ஏனையப் பகுதிகள் போன்றில்லாமல் ஒரு சிக்கல் தன்மை உடையதாகவே காணப்படுகிறது. எனினும் பத்தினி கண்டிய அரசினுடைய அரசத் தெய்வமாக இருந்து வந்துள்ளமையை வரலாற்றுக் குறிப்புகள் வழியே அறிய முடிகின்றது. குறிப்பாகப் புத்தருடைய புனிதத் தந்தத்தாது வைக்கபட்டுள்ள தலதா மாளிகையின் நான்கு புறத்திலும் விஷ்ணு, ஸ்கந்த, நாத, பத்தினியாகிய தெய்வங்கள் அமைந்துள்ளன. இந்நான்கு தெய்வங்களும் ஆண்டுதோறும் இடம்பெறும் கண்டிப் பெரஹராவில் பௌத்தப் புனிதப் பேழையுடன் ஊர்வலமாக எடுத்து வரப்படுகின்றன. எனினும் கண்டிப் பெரஹரா தொடக்கத்தில் பத்தினிக்கு எடுக்கப்பட்ட விழாவின் பௌத்தமயமாக்கமாகவே அமைந்துள்ளது. இவை அனைத்தும் பண்டைய கண்டிப் பகுதியில் பத்தினி வழிபாட்டின் தொன்மையினைக் காட்டுபவையாகவே உள்ளன. இவற்றிற்கு அப்பால் தெற்கு, மேற்கு மற்றும் சப்பிரகமுவா மாகாணத்திலும் இலங்கையின் கிழக்குக் கடற்கரையோரப் பகுதியான மட்டக்களப்பு தொடங்கிப் பானம வரையிலான பகுதிகளிலும், வன்னி பெருநிலப்பரப்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலும் பத்தினி வழிபாட்டின் தொடர்ச்சியினைக் காண முடிகின்றது. இலங்கையின் நுவரேலியாவின் நவகமுவ பகுதியில் பத்தினி காவல் தெய்வமாக வழிபடப்பட்டு வந்துள்ளாள்.

சண்முகராஜா சிறிகாந்தன் (2013) விவரித்த பௌத்த மரபில் கண்ணகி வழிபாடு பற்றிய செய்திகள் கண நாத் ஒபய சேகர ஆய்விலிருந்து பெறப்பட்டவையாகும். இப்பகுதியில் கண்டி மன்னனுடைய அரசத் தெய்வமாகப் பத்தினி தெய்வம் விளங்கியதைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். கண்டிப் பகுதியில் புத்தருடைய புனித தந்ததாது வைக்கப்பட்டுள்ள கோயிலின் நான்கு புறமும் இந்து தெய்வங்கள் காவல் தெய்வங்களாக விளங்கியதை மேற்பகுதி குறிப்பிட்டுள்ளது. இந்தத் தந்ததாது ஆண்டுதோறும் ஊர்வலமாக எடுத்து வரப்படும் விழாவில் பத்தினிக்கு முதன்மை மரியாதை தரப்பட்டது. எசல பெரஹரா எனப்படும் இந்த நிகழ்ச்சியில் பத்தினி தெய்வம் ஊர்வலத்தின் முதல் தெய்வமாக எடுத்து வரப்பெற்றது. இந்த முதன்மை மரியாதை கி.பி. 16ஆம் நூற்றாண்டில் மாற்றப்பட்டுள்ளது. 16ஆம் நூற்றாண்டில் நடந்த விழாவின் போது வருகை தந்த தாய்லாந்து தேசத்துப் பௌத்த பிக்கு, "பௌத்த தேசத்தில் இந்து தமிழ்த்

தெய்வமான கண்ணகைக்கு முதன்மை எப்படித் தரலாம்" என்ற வினாவை எழுப்பியதன் முலம் கண்ணகியின் முதன்மை பின்னுக்கு தள்ளப் பெற்றது. அது முதலே கண்ணகி வழிபாடு இரண்டாகப் பிரிந்தது. தமிழர்க்குரிய கண்ணகி வழிபாடு தனியாகவும் பௌத்த சிங்களவர்க்குரிய பத்தினி வழிபாடு தனியாகவும் பிரிந்தன. இந்தப் பின்னணியில் தமிழர் சிங்களவர் இனவாத அரசியலைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான இனவாத அரசியலின் பின்புலத்தில் தான் பேராசிரியர் கணநாத் ஒபய சேகர தமது ஆய்வை நிகழ்த்திடக் காணலாம். சிங்களவரின் பத்தினி வழிபாடு தமிழரின் கண்ணகி வழிபாட்டிலிருந்து வேறுபட்டது என்றும் பௌத்த மரபில் தோன்றியதே பத்தினி வழிபாடு என்றும் ஒபய சேகர தமது ஆய்வினை நிகழ்த்தினார். இதற்குத் துணையாக உலகளாவிய நிலையிலான பத்தினி வழிபாட்டின் தோற்றம் பற்றிய தொன்மங்களை ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார். இவ்வாறான ஆய்வுகளுள் ஒன்றே மேலே சுட்டப்பட்ட பைனெஸ் அவர்களின் ஆய்வாகும். பைனெஸ் போன்றோரின் ஆய்வைத் துணைகொள்வதன் மூலம் தமிழ் நாட்டில் பத்தினி வழிபாடே எகிப்திலிருந்துதான் வந்தது என்ற கருத்துருவை அவர் கட்டமைக்க முற்பட்டார். இதன் மூலம் கண்ணகி வழிபாடு தமிழ் மண்ணிற்குரியது இல்லை என்ற அரசியல் சார்; கருத்துரு தோன்ற வழிவகுத்தார். மேலும், சிங்களவரின் பத்தினி வழிபாடு தமிழ்க் கண்ணகி வழிபாட்டிற்கு முன்னரே தோற்றம் கொண்டது என்பதற்கான தரவுகளைத் தேட ஆரம்பித்தார். இதற்குச் சிங்கள பௌத்த மரபில் உள்ள ஏராளமான நாட்டார் வழக்காறுகளைத் துணை கொண்டார். இராவணன் காலத்திலேயே பத்தினி வழிபாடு இருந்தது என்பதும் பத்தினி கோயிலில் வழிபாடு நடத்த இராவணன் சென்றதும் அப்போது கோயில் மணியில் மோதி தலை உடைந்த நிலையில் இராவணன் மயக்கமுற்றதும் ஆன செய்தி அத்தகு நாட்டார் வழக்காறுகளில் ஒன்றாகும். கண நாத் ஒபய சேகரவின் புகழ்பெற்ற ஆய்வில் கூறப்படும் கருத்துகளுள் முதன்மையான இரண்டு கருத்துகள் சுட்டத்தக்கவை.

1. சிங்களவர் வழிபாடு செய்யும் பத்தினி தெய்வம் பௌத்த மரபிற்குரியது. ஈழத்தமிழர் கண்ணகி வழிபாடு வருவதற்கு முன்பே இலங்கையில் நிலவியது பத்தினி தெய்வ வழிபாடு.
2. கண்ணகி சார்ந்த பத்தினி வழிபாடு எகிப்திலிருந்து தென்னிந்தியப் பகுதிக்குப் பரவி இருந்தல் வேண்டும்.

இந்த இரண்டு கருத்தியலின் பின்புலத்தில் தமிழர் ஒ சிங்களவர் இனவாத அரசியல் செயற்பட்டுள்ளதை மிக நுட்பமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இக்கருத்தையே

பக்தவத்சலபாரதி (2015) தம் கட்டுரையின் இறுதிப்பகுதியில் "கணநாத் ஒபய சேகர (1984:603) கூறும் கருத்து நமக்கு அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது. பத்தினி தெய்யோவின் கதை மேற்காசிய வணிகர்களால் அன்றைய சேர நாட்டிற்கு வந்திருக்குமோ என்ற ஊகத்தை முன்வைக்கிறார். ஆனால் அதனை உறுதிப்படுத்த விரும்பவில்லை. மேலாய்வுகளினால் தெளிவு பெற வேண்டும் என்கிறார்" என்று கூறி நிறைவு செய்வார். தமிழ் மண்ணிலிருந்து தோற்றம் பெற்ற கண்ணகி வழிபாடு இலங்கை வரையிலான வழிபாட்டு நிலப்பரப்பைக் கொண்டது. இன்னும் சொல்லப் போனால் கேரளம் தொடங்கி அகண்ட தமிழகத்தின் பண்பாட்டு, சமய அடையாளமாக அது விளங்கியது. ஆயின் அது கேரளாவில் பகவதி வழிபாட்டோடு கலந்தது; ஈழத்தில் பௌத்த மரபில் கலந்தது: தமிழ்நாட்டில் முற்றுமாக வழக்கொழிந்தது. இவற்றிற்குப் பின்னே தொழிற்பட்டுள்ள மொழி அரசியலையும், இன அரசியலையும், சமய அரசியலையும் நுட்பமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பின்னுரை

கண்ணகி வழிபாடு என்பது தமிழ்நாட்டுப் புராதன தாய்வழிச் சமூக மரபில் தோற்றம் கொண்டது. தாய்த்தெய்வ வழிபாட்டு மரபுகளை உள்வாங்கி வளர்ச்சி பெற்றது. பின்னாளில் அது பத்தினி தெய்வ வழிபாடாகவும் மாற்றம் கொண்டது. இத்தொன்மத்தை இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எனும் பெயரில் காப்பியமாகப் படைத்தளித்தார். சிலப்பதிகாரம் தோற்றம் பெற்ற காலத்தில் அது தமிழ்த்தேசிய நூலாகவும் தமிழரின் அடையாளங்களுள் ஒன்றாகவும் விளங்கியது. தமிழகத்தை மொழி வழியாகத் ஒன்றிணைத்த முதற்பெரும் தமிழ்க் காப்பியமாகவும் விளங்கியது. இந்நிலை நீடித்திருந்தால் தமிழ்நாட்டின் வரலாறு மாறியிருக்க வாய்ப்பு உண்டு. ஆனால் பெருஞ்சமய உருவாக்கம், அதன் வழிச் சைவமும் வைணவமும் உச்சநிலை அடைந்தமை, வடமொழி இலக்கிய அரசியல், சமண பௌத்த மதக் காழ்ப்புணர்வு முதலானவை சிலப்பதிகாரத்தையும் கண்ணகி வழிபாட்டையும் வீழ்த்தின. இதனால் சிலப்பதிகாரம் சமணர்களால் மட்டுமே பயிலப்பெற்றுப் பரவலாக்கம் பெறாமலேயே கிடந்தது. தமிழ் மண்ணில் கண்ணகி வழிபாடு உருமாறி வழக்கொழிந்து போனது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிலப்பதிகாரம் பதிப்புரு பெற்ற பின்னர் ஒரு மறுமலர்ச்சி தோன்றியது. சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு மொழிவழித் தேசியம் மலர்வதற்கான செயற்பாடுகள் ஊக்கம் பெற்றன. தமிழின வரலாறு எழுதப்பெற்றது. தமிழரின் தேசிய நூலாகச் சிலப்பதிகாரம் அறிவிக்கப் பெற்றது.

தமிழ்நாட்டின் இயக்கங்களுக்கு அரசியல் நூலாகச் சிலப்பதிகாரம் ஆக்கம் பெற்றது. பட்டிதொட்டி எங்கும் சிலப்பதிகாரச் செய்திகள் சென்றடைந்தன. இதே வேளையில் சிலப்பதிகாரத்தின் வரலாற்றுத் தன்மை குறித்தும், அதன் காலம் குறித்தும், அதன் மூலம் குறித்தும் பல்வேறு வினாக்கள் எழுப்பப்பெற்றுச் சிலப்பதிகாரத்தின் இயங்கு தன்மை முடமாக்கப் பெற்றது.

கோடிக்கணக்கான மக்கள் வழிபடப்பெறும் கேரள கண்ணகி வழிபாட்டின் தமிழ் அடையாளம் அழிக்கப்பெற்று மலையாள பகவதியம்மன் அடையாளம் உருவானது. இதே போல் ஈழத்தில் சரிபாதி சிங்களவர்களால் வழிபடப்பெறும் கண்ணகி வழிபாடு பத்தினி வழிபாடு என்னும் பெயரைப் பெற்றதோடு அது பௌத்த மரபிற்கு உரியது என்றும் நிறுவப்பெற்றது. கண்ணகி வழிபாடு ஈழத்திற்குப் பரவும் முன்பே பத்தினி வழிபாடு சிங்களவர்களால் வழிபடப்பெற்றது என்றும் கூறப்பட்டது. மற்று, தமிழ்நாட்டில் பத்தினி வழிபாடு எகிப்திலிருந்து பரவியது என்றும் கருத்துரைக்கப் பெற்றது.

இவ்வாறாகக் கண்ணகி மரபு தமிழ் மண்ணிற்குரிய புனித அடையாளம் எனும் கருத்தியலையும் அது அகண்ட தமிழ் நிலத்தைக் கட்டமைத்த புனித மரபு என்பதையும் ஆனிவேரோடு அழிக்கும் அரசியல் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக நடந்து வருவதை அறியமுடிகிறது. எதிர்காலத்தில் கண்ணகி மரபை மீட்டெடுக்கவேண்டிய தேவையும் தமிழ்ச் சமுகத்திற்கு உள்ளது.

துணைநூல்கள்

- அரசு, வீ. 2009. சிலப்பதிகாரப் பனுவலும் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் வரலாறும். சிலப்பதிகாரம் பன்முக வாசிப்பு. சென்னை: மாற்று
- அருணாச்சலம், ப.1971. சிலப்பதிகாரச் சிந்தனை. சென்னை: பாரிநிலையம்.
- அறவாணன், க.ப. 1972. புரட்சிப்பொறிகள். சென்னை: தமிழ்க்கோட்டம்.
- கைலாசபதி, க. 1996. அடியும் முடியும்.சென்னை: பாரிநிலையம்.
- சண்முகசுந்தரம், சு. 2011. திராவிடத் தெய்வம்: கண்ணகி. சென்னை: காவ்யா.
- சண்முகலிங்கன், என். 2013, "ஈழத்தில் கண்ணகை: மரபுகளும் மாற்றங்களும்". சிலப்பதிகாரம்: கவிதையியல் பண்பாட்டியல் மொழியியல் அரசியல். புதுச்சேரி: புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.
- சிவஞானம். ம.பொ. 1977. சிலப்பதிகார யாத்திரை. சென்னை: பூங்கொடிப் பதிப்பகம்.
- 1978, சிலப்பதிகார ஆய்வுரை. சென்னை: பூங்கொடிப் பதிப்பகம்.

- 1979. சிலப்பதிகாரத் திறனாய்வு. சென்னை: பூங்கொடிப் பதிப்பகம்.
- சிறிகாந்தன், சண்முகராஜா. 2013. "பௌத்தமரபில் பத்தினி தெய்யோ" சிலப்பதிகாரம்: கவிதையியல் பண்பாட்டியல் மொழியியல் அரசியல். புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.
- சீனிவாச அய்யங்கார், பி.டி.1929 (1989). தமிழர் வரலாறு. சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
- சுப்பிரமணிய அய்யர், ஏ.வி.1959. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி. சென்னை: அமுதன் நிலையம்.
- செல்வராசு, சிலம்பு. நா. 2006. பண்டைச் சமூக உருவாக்கமும் சிலப்பதிகாரத்தின் இலக்கிய அரசியலும். தஞ்சாவூர்: அகரம்.
- … 2013. கண்ணகித் தொன்மம்: சமூக மானுடவியல் ஆய்வு. நாகர்கோவில்: காலச்சுவடு.
- பக்தவத்சல பாரதி. 2012. மானிடவியல் கோட்பாடுகள். புத்தாநத்தம்: அடையாளம்.
- … 2013. பாணர் இனவரைவியல். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
- … 2015. இலக்கிய மானிடவியல். புத்தாநத்தம்: அடையாளம்.
- பஞ்சாங்கம், க. 1993. சிலப்பதிகாரத் திறனாய்வுகள்: ஒரு பார்வை. சிவகங்கை: அன்னம்.
- பெருமாள், அ.க. & செந்தீநடராசன். 2015. கேரளத்தில் கண்ணகி வழிபாடு. அச்சுவடிவம் பெறாதது.
- ரகுநாதன், சிதம்பர.1984. இளங்கோவடிகள் யார். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
- இராகவையங்கார், மு. 1938. ஆராய்ச்சித் தொகுதி. திருச்சிராப்பள்ளி: பழனியப்பா பிரதர்ஸ்.
- வையாபுரிப்பிள்ளை. 1954(1991) காவிய காலம். சென்னை: பாரிநிலையம்
- Fynes, R.c.c.1993. Isis and pattini: The Transmission of a Religious Idea from Roman Egypt to India. JRAS, series 3.3.3 PP377-391.
- Obeyesekere, Gananath.1984.The cult of the Goddess pattini. Chicago: University of chiago press.

சங்கஇலக்கியத்தில் தாய்வழிச்சமூகக் கூறுகள்

முனைவர் **ஆ.சாஜிதா பேகம்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நவரசம் கலை அறிவியல் மகளிர் கல்லூரி, அறச்சலூர், ஈரோடு மாவட்டம்.

சங்க இலக்கிய நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் சங்ககாலப் பெண்களின் தலைமை சான்ற இருப்புநிலையை நம் புலவர்கள் பதிவுசெய்துள்ளனர். தாய்வழிச்சமூகத்தில் மேற்கொண்ட இயற்கை வழிபாட்டில் பெண் முதன்மைப்படுத்தப்பட்டதும், பெண் தெய்வ வழிபாடுகளும், அத்தெய்வங்களுக்குரிய இயல்புகளும் பெண்ணின் சிந்தனையைப் பரந்துபட்ட நோக்கமாகக் காட்டியுள்ளன. தந்தைவழித் தலைமையில் நிலவுடைமைச் சமுதாயத்தின் தோற்றம் பெற்ற காலங்களிலும், பொதுவுடைமைச் சிந்தனையோடு திகழ்ந்த பெண்களின் தன்னியல்பு தெய்வத்தை முதன்மையாக வழிபட வைத்து, அவற்றுக்கான சடங்குகளில் அவளை ஈடுபடுத்தி ஆணைச் சார்ந்து வாழும் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டதனை அறிய முடிகின்றது. தந்தைவழிச் சமூகத்தில் அகவாழ்க்கையிலும், புறவாழ்க்கையிலும் சமூகக்கட்டமைப்புக்கு ஏற்ப தனது இருப்பை நிலைப்படுத்தியும், நிறைவு செய்தும் வாழ்ந்த பெண்களின் அடையாளங்கள் தாய்வழிமரபின் எச்சநிலைக் கூறுகளாக அமைந்துள்ளன என்பதற்குச் சங்கப்பாடல்கள் சான்று பகர்கின்றன. அத்தகைய தாய்த்தலைமைக்கான அடையாளங்களை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தாய்த்தலைமைக்கான கூறுகள்

தமிழ்ச்சமூக அமைப்பில் தாய்த்தலைமைக்கான கூறுகள் எட்டுத்தொகை நூல்களில் காணக்கிடக்கின்றன.

சிறுவர்தாயே பேரிற் பெண்டே *(புறம்.270:6)*

செம்முதுபெண்டின் காதலஞ் சிறாஅன் *(புறம்.276:3)*

வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் *(புறம்.277:2)*

முளரி மருங்கின் முதியோள் சிறுவன் *(புறம்.278:2)*

என்மகள் ஒருத்தியும் பிறள்மகள் ஒருவனும் *(பாலைக்கலி:8)*

ஒலிஇருங் கதுப்பின் ஆயிழை கணவன் *(புறம்.138:8)*

என்று பெண்களின் அடையாளத்தில் ஆண்கள் சுட்டப்படுவதனை அறியமுடிகின்றது. இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விருந்தோம்பல் பண்புகள் குறித்த பாடல்கள் பெண்களின் விருந்தோம்பல் இயல்புக்குச் சான்று பகர்கின்றன.

வருவிருந்து அயரும் விருப்பினள் *(புறம்.326:12)*

வேட்டைச் சமூகத்தில் உணவுப்பங்கீடு செய்வதில் அவளுக்கிருந்த நிர்வாகத்திறனின் தொடர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. அன்றைய நாட்களில் பெண்ணை வாழ்த்தும்போது,

பேரிற் கிழத்தி ஆக *(அகம்.86:19)*

என்று சுற்றத்தார் வாழ்த்துவதன் மூலம் குடும்ப அமைப்பில் பெண்ணுக்கான இருப்பினை உணரவியலுகின்றது. விருந்து பேணுவதில் சிறப்பும், மகிழ்வும் கொண்டவள் என்பதைச் சங்ககால ஆடவர்களும் நன்குணர்ந்திருந்தனர் என்பதனை,

தங்கினர் சென்மோ புலவீர்! நன்றும்

சென்றதற் கொண்டு மனையோள் விரும்பி *(புறம்.333:7-8)*

என்ற பாடல் பகுதி மூலம் அறியலாகின்றது. இல்லறம் பேணுதலில் பெண் கொண்டிருந்த தலைமைப்பண்பினை,

மனைவி *(நற்.121:11)*

மனையோள் *(குறுந்.164:5)*

வளமனைக் கிழத்தி *(அகம்.166:10)*

இற்பொலி மகடூஉ *(புறம்.331:9)*

என்று இலக்கியங்கள் சிறப்பித்துள்ளன. பெண்களின் தலைமையில் சமூகம் அமைக்கப்பட்டிருந்ததும், ஆண்கள் பெண்களின் நுண்மாண் நுழைபுலத்திறனை உணர்ந்து அவர்தம் இயல்புகளுக்கு மதிப்பளித்தமையும் புலனாகின்றது. இதற்கு அடிப்படைக் காரணத்தை ஆய்கையில் பழங்கற்காலத்தில் பெண்ணின் தலையாய கடமையாகியிருப்பது வேட்டையாடுதலும், உணவு சேகரித்தலும், பகிர்ந்தளித்தலுமே ஆகும். இதற்கான உடல் வலிமையும், மனவலிமையும் பெண்களிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. அதனைச் சுட்டிக்காட்டும் ரோஸலிண்ட் மைல்ஸ் கருத்து வருமாறு:

> பெண்களின் கடமைகளில் உணவு சேகரிப்பது கேள்விக்கிடமின்றி பட்டியலில் முதன்மையான இடத்தை வகித்தது. இந்தப் பணி அவர்களின் குலத்தை உயிர்வாழச் செய்தது. வரலாற்றுக்கு முந்திய காலத்தில் எந்தச் சமுதாயத்திலும்

பெண்கள் தமது குழந்தைகளுடனோ அல்லது குழந்தைகள் இல்லாமலோ உணவுக்காகத் தமது வேட்டையாடும் ஆண்களைச் சார்ந்திருக்கவில்லை ***(ராதாகிருஷ்ணன்.வி., (மொ.ஆ.), உலக வரலாற்றில் பெண்கள், ப.8)***

வேட்டைச் சமூகக் காலத்திலேயே பெண்ணிடம் தன் உயிரை மட்டும் காத்துக் கொள்ள வேண்டும் என்ற சுயநலப்போக்கு இருந்திருக்கவில்லை. மாறாக, தனது வலிமையைத் திரட்டி தன் கூட்டத்தின் பசியைப் போக்கி, ஆபத்தான விலங்குகளின் மத்தியில் கூட்டத்தாரின் உயிரைக் காத்துப் பேணவேண்டும் என்ற பரந்துபட்ட மனச்சிந்தனையே அன்றைய பெண்களின் உளவியலாக அமைந்திருக்கின்றது. இயற்கைச் சூழலை எதிர்த்துப் போராடும் போராட்ட மனஉணர்வு அன்றைய பெண்களின் வீர உணர்வை அடையாளப்படுத்துகின்றன. தாய்வழிச் சமூகத்தின் மரபுசார் கூறுகளைச் சங்ககாலத்தில் காண முடிவதோடு, அதன் எச்சநிலையைச் சங்கப்பாடலின் வழியாக அறியமுடிகிறது.

சங்கப் பெண்டிரின் மறப்பண்பு

வேட்டைச்சமூகத்தில் விலங்குகளை வேட்டையாடுவதிலும், உயர்ந்த மலைகளிலும், அடர்ந்த காடுகளிலும் வாழ்ந்த காலங்களில் பெண்ணுக்கிருந்த மனவலிமையும், தீயவைகளை எதிர்த்துப் போராடும் துணிவும் இயல்பாகவே அவளிடம் அமைந்திருக்க வேண்டும். அடுத்து வந்த வேளாண் சமூகத்திலும், அரசுடைமைச் சமூகத்திலும் பெண் தனது வீரப்பண்பை நேரடியாக வெளிப்படுத்த வேண்டிய தேவை இல்லாதிருக்க வேண்டும். தந்தைவழி மரபில் வீரம் மிக்க ஆண்மக்களின் உருவாக்கத்தில் பெண்களின் இயல்பு இன்றியமையாத பங்கினைப் பெற்றுள்ளது. இத்தகைய வீரம் செறிந்த குடிப்பெண்களாகிய மறப்பண்பு குன்றாத முதுமகளை அன்றைய சமூகத்தார் 'செம்முது பெண்டு' (புறம்:276) என்று சிறப்பித்துள்ளனர். பெண்டிரின் இயல்பாகிய போர்ப்பண்பு வீரமிக்க ஆண்மக்களை உருவாக்கத்தில் நிறைந்து காணப்பட்டுள்ளது. பெண்களின் இத்தகைய வீரப்பண்புகளை புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. பெண்களின் இயல்புகளைச் சமுதாயத்திற்கு எடுத்துணர்த்தும் உயரிய நோக்கம் அன்றைய ஆண்களுக்கு இருந்துள்ளது என்பதை ஆண்பாற் புலவர்களின் பாடல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இதன் மூலம் சங்ககாலச் சமுதாயம் ஆண்களால் பெண்கள் மதிக்கப்பட்ட இணையான சமுதாயம் என்பதை அறியவியலுகிறது.

உடைமைச் சமுதாயத்தில் முதலில் ஆநிரைகளைக் காத்தல் பொருட்டும், பிறகு நிலங்கள் உடைமையாக்கப்பட்டபோது நாடு காத்தலுக்காகவும் போர்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இப்போர்ச் சமூகம் ஆண்வழி மரபிற்கு மாற்றமடைந்த காரணத்தால், பெண்களுடைய வீரப்பண்பும், போர் புரியும் துணிவும் அவள் வழியே பெறப்பட்ட ஆண்மக்களிடம் இருப்பதனை புறநானூற்று பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

சங்ககாலம் ஒரு மாறுதல் காலகட்டம். இனக்குழு வாழ்விலிருந்து நிலவுடைமைக்கு, வீரயுகச் சூழலிருந்து உடைமைச் சமுதாயத்திற்கு மாறுகின்ற காலகட்டம். அரசு உருவான காலகட்டம். தனிச்சொத்துடைமையும் ஆண்வழிச் சமுதாய அமைப்பும் உருவாக வித்திட்ட காலம் **(அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.*168)***

என்று பெ.மாதையன் கருத்துரைக்கின்றார். போர் புரிவதற்கு ஆண்மக்கள் தேவைப்பட்டாலும், களச்சாவு கண்ட ஆண்மகனுக்குப் பின், பிள்ளைகளைப் பேணுதலும் இல்லறப் பணிகளை நிர்வகிக்கும் பண்பும் பெண்ணுக்கு இயல்பாக இருந்துள்ளது. அதனால், போர்க்களத்திற்கு செல்லாதிருத்தலும், போர்க்காலங்களில் பெண்கள் கொல்லப்படாமல் காத்தலும் மரபாகியுள்ளன. இதனை,

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்" *(புறம்.9)*

என்ற பாடல் உணர்த்தி நிற்கின்றது. மறக்குடிப் பெண்ணிடம் பாலருந்திய பிள்ளைக்கும் வீரப்பண்பு உள்ளது என்பதை, பாண்டியன் நெடுஞ்செழியன் அரசு பூண்ட பருவம் குறித்து,

அவன் கண்ணி, தார் பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே; பால் விட்டு
அயினியும் இன்று அயின்றனனே; வயின் வயின்
வியந்தன்றும், இழிந்தன்றும், இலனே; *(புறம்.77:6-10)*

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. இத்தகைய வீரப்பண்பு மட்டுமல்லாது எதையும் தாங்குகின்ற பக்குவப்பட்ட மனநிலையும், தன்மானத்திற்காக உணர்ச்சிக்கு ஆட்படாத உள்ளத்தையும் கொண்டவளாகப் பெண் விளங்கியிருக்கின்றாள் என்பதை மூதின்முல்லை துறைப்பாடல்கள் விளக்குகின்றன.

கெடுக சிந்தை; கடிக இவள் துணிவே;
மூதில் மகளிராதல் தகுமே; *(புறம்.279:1-2)*

என்ற பாடலில் முதல்நாள் போரில் தன் தந்தையையும், மறுநாள் போரில் தன் கணவனையும் இழந்த பெண், ஒருத்தி மனங்கலங்காது நாடுகாத்தலுக்காக தன் குடியின்

ஒரு மகனையும் போர்க்களத்திற்கு அனுப்புகின்ற துணிவு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதனை,

ஒரு மகன் அல்லது இல்லோள்,

செருமுகம் நோக்கிச் செல்க'என விடுமே! *(புறம்.279:10-11)*

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. உயிரைக் காட்டிலும் மானம் பெரிதென எண்ணும் பண்பு குறித்து,

மீன் உண் கொக்கின் தூவி அன்ன

வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்

களிறு எறிந்து பட்டனன்'என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே *(புறம்.277:1-4)*

என்ற பாடலில் உணர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு போரை மறத்தொழிலாக முடித்து குடியைக் காப்பதில் அன்றைய சமூக ஆணுக்கும் பெண்ணுக்கும் கடமையாகியிருந்துள்ளது.

> கட்டுப்பாடற்ற பாலுறவு நிலவிய தொல்பழங்காலத்தில் உலகளாவிய நிலையில் தாய்வழிச் சமுதாயங்கள் மட்டுமே இருந்திருக்க வேண்டும். சுதந்திரமான பாலுறவு நிலவிய அந்தக் காலத்தில் ஒருவரின் தந்தையைச் சரியாக அடையாளம் காணமுடியாமல் வாழ்ந்தனர். இது பாலூட்டிகளின் இனப்பெருக்கத்தில் தாயை மட்டும் அடையாளம் காணக்கூடிய நிலையைக் காட்டுகிறது ***(தமிழர் மானிடவியல், ப.9)***

என்று பக்தவத்சல பாரதி எடுத்துரைக்கின்றார்.

ஆண்வழிச் சமுதாய மாற்றமும் பெண்களின் இருப்புநிலையும்

உடைமைச் சமுதாயமாக மாற்றம் பெறுகின்ற காலங்களில், வரையற்ற பாலுறவிலிருந்து 'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் நெறிப்படுத்தப்பட்ட பாலுறவுக் கொள்கை உருவாகியுள்ளது. இக்கோட்பாட்டின் அடிப்படையில் ஆணும், பெண்ணும் தனது சுதந்திரமான பாலுறவிலிருந்து விலகி ஒழுக்க நெறியைக் கண்டுணர வேண்டிய தேவை ஏற்படுத்தப்பட்டது. இதன் விளைவாகவே, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் இந்நால் வகைப் பண்புகளும் சமூகத்தாரால் பெண்ணுக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. பெண்களையும் ஒழுக்கநெறியை அடிப்படையாகக் கொள்ள வேண்டியே மூத்தப் பெண்டிரால் இளைய பெண்கள் கட்டுப்படுத்தப்படுவதை, களவுப்பாடல்களில் காண முடிகின்றது. களவுக்காதல் கொண்ட பெண்ணின் தந்தை, தமையன் ஆகிய ஆண்கள் அவளைக் கட்டுப்படுத்தியதாகக் கூற்றுகள் அமையவில்லை. மாறாக, இல்லத்தின் மூத்தப் பெண்டிரான நற்றாயும், செவிலியும் அவளைக் கட்டுப்படுத்தியுள்ளதை தலைவி,

தோழியின் கூற்றுக்களின்வழி அறிய முடிகின்றது. எனவே, சமூகத்தில் பெண்களின் பாலுணர்வுக் கட்டுப்பாடு பெரும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பதை உணர முடிகின்றது.

> மனிதனுடைய நடத்தைகள் அனைத்தும் பாலுணர்வில் உந்தப்படுகின்றன என்றும் உள்ளத்தின் முழுமையான ஆற்றல் லிபிடோ எனப்படும் பாலுணர்வு இயல்பூக்கம்
>
> ***(தொன்மவியல் கட்டுரைகள், ப.5)***

என்று சிக்மண்ட் பிராய்டு கூறுவதாக யாழ்.சு.சந்திரா எடுத்துக்காட்டுகின்றார்.

இத்தகைய ஒழுக்க நெறியை சமுதாயத்தின் தேவையாகவும் மானிடப் பண்பாடாகவும் ஆக்கியவர்களுள் அன்றைய பெண்கள் பெரும்பங்கு வகித்துள்ளனர் என்பதை களவுக்காலப் பாடல்களும், கூற்றுகளும் மெய்ப்பிக்கின்றன.

பெண்ணின் பாலுணர்வு நடத்தைகள் கட்டுப்படுத்தப்பட்டால் சமூகம் உயர்வடையும் என்ற சிந்தனையின் அடிப்படையில் பெண்கள் தமக்குத் தாமே இப்பண்புகளை சுயக்கட்டுப்பாடுகளாக விதித்துக் கொண்டுள்ளனர் என்பதும் புலனாகின்றது. எனவே, தந்தை வழித் தலைமையில் சமூகம் மாற்றமடைவதை காலத்தின் தேவையாகவும், தன் மூலமாக பிறக்கும் பிள்ளைப்பேறு நெறிப்படுத்தப்பட்ட பிறப்பாக அமைய உடைமைகள் காக்கப்பட வேண்டி, தந்தை அடையாளப்படுத்தப்படுதல் இன்றியமையாததாக உணரப்பட்டமையாலும் பெண்கள் இம்மாற்றத்தை ஏற்றுச் செயல்பட்டுள்ளனர்.

> தொடக்க காலத்தில் தாய்வழி உரிமையோ தாய்த் தலைமையோ நிலவிய காலம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இத்தாய்வழி உரிமை கொண்டிருந்தவர்கள் பின்னர் ஆண்வழியில் அவரவர் மக்களுக்குச் சொத்துக்களைக் கொடுக்கும் ஆர்வத்தைப் பெற்றிருக்க வேண்டும் ***(தமிழர் மானிடவியல், ப.9)***

என்று பக்தவத்சல பாரதி கருத்துரைக்கின்றார். பிறகு நிலங்கள் உடைமையாக்கப்பட்டு சொத்துரிமையும், வாரிசு வேண்டலும் கட்டாயத் தேவையாக்கப்பட்டதால், பெண்ணோடு கொள்ளும் உடல்உறவுக்கு முன் அவர்கள் இருவரையும் ஊரார் முன் அடையாளப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, மணவினைகள் மூலம் ஆணும் பெண்ணும் முறையான பாலுறவு எய்தி, நன்மக்களைப் பெற்று இன்புற்று வாழவேண்டும் என்ற நிலை உருவானது. இதனால், நிலவுடைமைச் சமுதாயத்தில் களவு மணம் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை, இற்செறித்தல், வரைவுடன்படுத்த தலைவனை தலைவி வேண்டல், நொதுமலர் வரைவை மறுத்தல், உடன்போக்கு, அறத்தொடுநிலை போன்ற பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

அன்றைய சமுதாயத்தில் ஆண்கள் பொருளீட்டும் பொருட்டு, போருக்காகவும் தனது குடும்பத்தைவிட்டுப் பிரிந்து செல்லக்கூடிய நிலையிருந்துள்ளது. இவ்வாறு நிகழும்

பிரிவுக்காலங்களில் பெண் இல்லத்தையும், தமக்குரிய நிலத்தில் வேளாண் பணியையும் பிள்ளைகளைப் பேணி வளர்க்கின்ற பொறுப்பையும் சரிவரச் செய்ய வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. எனவேதான், பெண்ணின் கடமையைப் புரிந்து கொண்ட சமூகம் அவளை 'இல்லாள்' (கலி131:22) என்று சிறப்பித்துள்ளனர்.

> இல்லாள்' என்பது குடும்பத் தலைவியைச் சுட்டும். எதிராக 'இல்லான்' என்பது இன்மையையே சுட்டும். இதில் பெண்ணின் பெருமை விளங்கும் ***(நமது சமூகம், ப.334)***

என்று சோ.இலக்குமி ரதன் பாரதி குறிப்பிட்டுள்ளார். ஆணுக்கான சமூகப்பொறுப்பாக ஆநிரை காத்தலும், நாடு காத்தலும் விளங்கியதால் அவன் வீரன், மறவன் என்ற சொற்களால் குறிக்கப்பட்டுள்ளான். இதற்குரிய பெண்பாற் சொற்கள் வழக்கில் இல்லை என்பது சமுதாயத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவரவர்க்கு என்றாகிய கடமையும் பொறுப்புக்களும் இருந்துள்ளன என்பது புலனாகின்றது. அன்றைய பெண்கள் சமூகச் சூழலுக்கேற்ப வாழ்வியலை அமைத்துக் கொள்ளத் தலைப்பட்டவர்கள் என்பதை உணரமுடிகின்றது. இதனை, தம் முன்னோர்கள் கூடி வாழ்ந்த முறையிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்தாலும், பண்டைய குழுக்களில் நிகழ்ந்த பாலுறவு முறையிலிருந்து, மாற்றம் பெற்றாலும் நிலவுடைமைச் சமுதாயத்தில் தந்தைவழி மரபாக மாற்றமடைகின்ற போதும், தமது குழுக்களை விட்டு வேறு குழுக்களில் மணமுறை அமைதல் தவிர்க்கப்பட்டிருந்தது என்பதைச் செவிலிக்கான கூற்றில்,

> மகள் நெஞ்சு வலிப்பினும்,
>
> இருபால் குடிப்பொருள் இயல்பின் கண்ணும் *(தொல்.பொருள்.களவி.24)*

என்று உரைக்கப்பட்டுள்ளது. இந்நூற்பாவில் தலைவி தலைவனின் குடிப்பெருமையை உணர்தல் எனும் நிலையானது தந்தைவழிச் சமூகமாக தொல்காப்பியர் காலத்திலேயே மாற்றம் பெற்றுள்ளதனை அறியமுடிகின்றது. ஆண் வழிமரபு மாற்றம் பெற்ற சமூகத்தில் ஆண்கள் நெறி பிறண்டதற்கான நிலைகள் ஏற்பட்டிருக்க வேண்டும். அத்தகைய சூழல்களில் அவர்களைக் கட்டுப்படுத்தி நெறிபடுத்த பெண்ணே பெரும் ஆயுதமாக செயல்பட்டிருக்கின்றாள். ஒரு நாட்டில் வாழும் மக்களின் வாழ்வும் தாழ்வும் நிலத்தைப் பொறுத்து அன்று. அந்நிலத்தில் வாழுகின்ற ஆடவரைப் பொறுத்தே அமையும் என்று ஔவையார் அன்றைய ஆண்களை இடித்துரைத்துப் பாடிய பாட்டின் மூலம் புலனாகிறது.

> நாடா கொன்றோ காடா கொன்றோ;
>
> அவலா கொன்றோ மிசையா கொன்றோ;
>
> எவ்வழி நல்லவர் ஆடவர்
>
> அவ்வழி நல்லை வாழிய நிலனே! *(புறம்.187)*

என்று கூறியிருப்பதன்வழி அன்றைய சமுதாயத்தில் ஆண்களைச் செயலாற்றச் செய்கின்ற நுண்ணறிவும் திறனும் பெண்ணுக்கு இருந்துள்ளதனை அறிய முடிகின்றது. பெண்ணுடைய அறிவையும் ஆற்றலையும் உணர்ந்து கொண்டு அவளிடம் நட்பு பாராட்டிய மன்னர்களும் அன்றைய காலத்தில் இருந்துள்ளனர். போரில் ஈடுபடுதலை விரும்புவது மறக்குடி மகளிரின் பண்பாக இருப்பினும், தேவையற்ற போர்களால் விளையும் உயிர்ச்சேதங்களும், பொருட்சேதங்களும் தவிர்க்கப்பட வேண்டியதனை உணர்ந்த தெளிந்த சிந்தனை அன்றைய பெண்ணுக்கு இருந்துள்ளது. இதனை மன்னன் அதியன் பொருட்டு தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையின் செயலாற்றல் மூலம் உணர முடிகின்றது.

உண்டாயின் பதம் கொடுத்து,

இல்லாயின் உடன் உண்ணும்

இல்லோர் ஒக்கல் தலைவன்,

அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே *(புறம்.95:6-9)*

என்ற பாடலின் மூலம் ஆண்வழி மரபிலும் அரசர்களிடத்தும் நெருங்கிச் செல்லுகின்ற துணிவும் அவளது இருப்புநிலை அரசுடைமைச் சமுதாயத்திலும் உயர்வாக மதிக்கப்பட்டுள்ளதனையும் அறிய முடிகின்றது.

சங்ககாலத் தமிழரின் வழிபடு தெய்வங்கள்

பழந்தமிழர்கள் தமது வாழ்வியல் சூழலுக்கும், கடமைகளைப் பேணவும் தமது மனப்பக்குவம், அறிவுநிலை, இவற்றின் அடிப்படையில் இயற்கையைக் கடவுளாக எண்ணி நம்பிக்கை கொண்டுள்ளனர். மனிதனைப் பாதுகாக்கும் புறஆற்றலை தெய்வமாக எண்ணி அக்கால மக்கள் வழிபட்டிருக்க வேண்டும். இதனை,

வழிபடு தெய்வம் நின்புறம் காப்ப (தொல்.1367)

என்ற நூற்பாவால் உணரவியலுகின்றது. எனவே மக்களுள் அவரவர் வாழ்வியல் சூழலுக்கும், திணை நிலைகளுக்கும் அடிப்படையான படிமங்களையும், குறியீடுகளையும் கொண்டு தெய்வத்திற்கான வடிவங்களைத் தோற்றுவித்துள்ளனர். இதன்வழி, முல்லை நிலத் தெய்வமாக திருமாலும், குறிஞ்சி நிலக் கடவுளாக முருகவேளும், மருதத் திணைக்கு வேந்தனாகிய இந்திரனும், நெய்தல் திணைக்கு வருணனும், பாலைக்குக் கொற்றவையும் தெய்வவடிவங்களைக் கொண்டுள்ளன.

> முல்லைத் திருமாலும், குறிஞ்சி முருகனும், மருத வேந்தனும், நெய்தல் வருணனும் (பாலைக் கொற்றவையும்) திணைத் தெய்வங்கள் ஆகும். இத்தெய்வங்கள் நிலத்திற்கேற்ற படைப்புகளே; அவ்வந்நிலப்பொருள்கள் தோற்றிய உருவங்களே என்று அறிய வேண்டும் ***(தமிழ்க்காதல், ப.138)***

என்று வ.சுப.மாணிக்கனார் மொழிகின்றார். ஆண்களுக்கும், பெண்களுக்கும் கிளர்ந்தெழும் விலங்கின உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, நடத்தைகளை நல்வழிப்படுத்தும் துணையாகவே தெய்வ வழிபாடுகளைக் கொண்டுள்ளனர். இத்தகைய தெய்வங்களும், தெய்வங்களை வழிபடும் நிலைகளும் அன்றைய கால ஆண்களைக் காட்டிலும், பெண்களின் மீது அதிகளவில் ஆளுமை செய்துள்ளன. ஆணும் பெண்ணும் இணைந்தே வழிபாட்டு முறைகளைக் கையாண்டுள்ளனர். ஆண் தெய்வங்கள் மட்டுமல்லாது பெண் தெய்வங்களையும் அன்றைய சமூகத்தினர் வழிபட்டனர். இதற்கு அடிப்படை, சங்ககாலத்திற்கு முற்பட்டு வாழ்ந்த மக்களிடம் இருந்த தாய்வழிச் சமூகத்தின் எச்சம் சங்க நாட்களின் பெண் தெய்வ வழிபாட்டு மூலங்களாக்கப்பட்டிருக்க வேண்டும். இது குறித்து, க.கைலாசபதி எடுத்துரைக்கும் கருத்து சுட்டிக்காட்டத்தக்கது.

> பெண் தெய்வவழிபாடு தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் அது தோன்றிய சமுதாயத்திலே தாய்வழிமுறை நிலவியதே என்பது ஆராய்ச்சியாளர் காட்டும் உண்மையாகும் ***(பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.3)***

தாய்வழிச் சமூகத்தில், தலைமைச் சிறப்பும், ஆளுமைப் பண்பும் கொண்ட பெண்ணின் உயர்வு சமூகக் கட்டொருமைபாட்டை வழிநடத்தியிருக்க வேண்டும். அந்த மூலங்களே பெண் தெய்வங்களின் தோற்றமாக்கப்பட்டுள்ளன. கணவனோடு உடனுறைத் தெய்வங்களாகவும், ஆண் துணையின்றி தனித்திருக்கும் பெண் தெய்வங்களாகவும் அன்றைய சமூகத்தினர் பாகுபடுத்தியுள்ளனர்.

மணமான பெண் தெய்வங்கள்

மணமான பெண் தெய்வங்கள் அன்பும், அருளும் கொண்டவர்களாக கணவனுக்கு எதிரான நிலைகளில் பொறுமையிழந்து ஆவேசங் கொண்டதாக சங்க இலக்கியப்பாடல்களில் சுட்டப்படவில்லை. அன்றைய மக்கள் தாம் உற்ற துன்பத்தை உணர்ந்து, அதனை நீக்கும் ஆற்றல்மிக்க தெய்வங்களாக முருகவேளையும் வள்ளியையும் வணங்கியுள்ளனர். தனது வாழ்க்கையில் நிகழும் நிகழ்வுகளை இத்தெய்வங்களின் மீது ஏற்றிக் கூறி, மனித உணர்வுகளை வடிவப்படுத்தியுள்ளனர். முருகனும் வள்ளியும் குறித்து,

> குறிஞ்சிக் குன்றவர் மறம் கெழு வள்ளிதமர்
> வித்தகத் தும்பை விளைத்தலான், வென் வேலாற்கு
> ஒத்தன்று, தண் பரங்குன்று *(பரி.9:67-69)*

என்ற அடிகளில் குறிஞ்சி நிலப் பெண்களாகிய கொடிச்சியர்களின் வீரம், பெருமிதம் போன்ற பண்புகள், அந்நிலத்தின் பெண் தெய்வமாகிய வள்ளிக்கும் ஏற்றிக் கூறியிருப்பதும், அக்கொடிச்சியரின் வீரமானது, வள்ளியின் வெற்றிக்குக் குறியீடாக்கப்பட்டிருப்பதனை அறியவிலுகின்றது.

> குறிஞ்சிவாழ் மக்களின் இயற்கை விளைபொருளான வள்ளி குறிஞ்சி வாழ் மக்களின் பெண் தெய்வமானது ***(தமிழ்ச் செவ்வியல் படைப்புகள், ப.187)***

என்று பெ.மாதையன் தெரிவித்துள்ளார். இவ்வாறே வள்ளி எனும் பெண் தெய்வம் தோற்றுவிக்கப்பட்டதனை உணர முடிகின்றது.

ஆக்கல், அழித்தல், காத்தலாகிய முத்தொழில் புரியும் சிவபெருமானுக்கு அழித்தல் தொழில் புரிய உமையம்மை உடன்படமாட்டாள் என்பதும், அவள் அருளே வடிவானவள் என்பதும் அன்றைய மக்களின் நம்பிக்கையாயிருந்தது. இதனை,

> கொலை உழுவைத் தோல் அசைஇ, கொன்றைத்தார் சுவற்புரற,
>
> தலை அங்கை கொண்டு, நீ காபாலம் ஆடுங்கால்,
>
> முலை அணிந்த முறுவலாள் முன் பாணி தருவாளோ? *(கலி.1:11-13)*

என்று கலித்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலில் உமையம்மையின் சிறப்பு உரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தாய்மைப்பண்போடு கூடிய தெய்வமாகவும், பொறுமையும், அன்பும், அருளும் கொண்டவளாக பெண்கள் திகழ வேண்டும் என்று எடுத்துரைக்கப்படுவதனை அறிய முடிகின்றது.

அன்பும், அருளும், பொறுமையும் வீரப்பண்புகளும் போல மனிதனின் உள்ளத்தில் கிளர்ந்தெழும் காமஉணர்வு காமனும் இரதியுமாகிய தெய்வ உருக்கொண்டது. ஆணும், பெண்ணும் காதலுணர்வோடு கூடிக்களித்திடவும், அத்தகைய காதலர்களின் எழிலான தோற்றத்தை இக்காமக் கடவுளர்களாகிய காமன் என்ற மன்மதனும், அவரது துணையாகிய இரதிதேவியும் ஒப்புமையாக்கப்பட்டுள்ளனர். இதனை,

> இரதி காமன், இவள் இவன்' எனா அ (பரி.19:48)

எனும் பாடலடி காட்டும். இதில் காமனின் மனைவியாகிய இரதியைப் பற்றிய குறிப்பு உள்ளது. காமக் கடவுளை பெண்கள் வழிபட்டது குறித்து,

> காதலுற்ற கன்னியர், தம் கருத்து நிறைவேறும் வண்ணம் காமனை வேண்டிக் கொள்ளும் வழக்கமும் சமுதாயத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. காதல் விளைவிக்கும் தேவனைக் 'காமன்' என்றும் 'காமவேள்' என்றும் தமிழர் அழைத்தனர் ***(தமிழ் இன்பம், ப.61)***

என ரா.பி.சேதுப்பிள்ளை மொழிகின்றார். இவற்றின் மூலம் அக உணர்வாகிய காமத்திற்கும், ஆண், பெண் புறத்தோற்ற வர்ணனைக்கும் அழகுடைத் தெய்வத்தை அக்காலத்தார் வேண்டியுள்ளனர். மனிதகுல உருவாக்கத்திற்கு அடிப்படையாகிய காம உணர்வினை வடிவப்படுத்த மன்மதனும், இரதியுமாக உருவாக்கம் செய்துள்ளனர்.

இக்கடவுளரின் பெயர்கள் பரிபாடலிலும், கலித்தொகையில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதனை அறியமுடிகின்றது.

முல்லை நிலத்தில் காடுறைத் தெய்வமாகிய திருமாலையும், அவர்தம் துணைவியாகிய திருமகளையும் அன்றைய மக்கள் வழிபட்டுள்ளனர். கணவனின் மனத்தில் நீங்கா இடம் பெறும் நிலையை மனைவி தனது அன்பினாலும் காதலாலும் அடைய வேண்டும் என்ற நிலைப்பாட்டை பெண்ணுக்குணர்த்தும் வண்ணமாக திருமகள் பொருந்திய மார்பனாக திருமால் காட்சியளிப்பதனை பாடல்கள்வழி அறியலாகிறது.

பருதி வலவ! பொரு திறல் மல்ல!
திருவின் கணவ! பெருவிறல் மள்ள *(பரி.3:89-90)*

என்ற அடிகளில் வெற்றியையும், வீரத்தையும் கொண்ட கணவனாகிய திருமாலின் பெருமைக்கு, அவரது மனைவியாகிய திருமகளும் காரணமாகியிருப்பதை அறிய முடிகிறது. இவ்வாறு உடனுறைத் தெய்வங்கள் அனைத்தும், அன்பு, அருள்தன்மை, தாய்மைப்பண்பு, வீரம், பெருமிதம் போன்ற பண்புகளைக் கொண்டவர்களாகக் கூறப்படுவதன் மூலம் பெண்களும் இத்தகைய பண்புகளைக் கைக்கொண்டு வாழவேண்டும் என்றும் கணவன்மார்களுக்கு சேவை புரிந்து அடங்கி வாழ்தலே பெருமை தரும் என்றும் மறைமுகமாக வலியுறுத்தியிருப்பதை சங்ககாலத்திலேயே காண முடிகின்றது.

மணமாகாத பெண் தெய்வங்கள்

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் தெய்வங்களுக்கான வடிவங்களும், பண்பு நலன்களும் அறியப்படாத நிலையில், தம்மை வழிநடத்திப் பாதுகாக்கும் தெய்வமாக 'அணங்கு' எனும் பெண் தெய்வம் மக்களால் வழிபடப்பட்டுள்ளது. இத்தெய்வத்தின் துணைக்கடவுளாகிய ஆண் கடவுள் பற்றிய குறிப்புகள் பாடல்களில் தரப்படவில்லை. மாறாக, அச்சுறுத்தும் பெண் தெய்வமாகவே சங்கப்பாடல்கள் சுட்டுகின்றன. தொடக்கநிலையில் இயற்கையின் சீற்றங்களே மனிதனை தெய்வ வழிபாட்டு நிலைக்குத் தூண்டப்பட்டன. அத்தகைய கட்டுக்கடங்காத சீற்றத்தைப் பெண்ணாக வடிவப்படுத்தி 'அணங்கு' எனும் அச்சுறுத்தும் தெய்வமாக்கி இருக்க வேண்டும்.

> கற்புடைய பத்தினிப் பெண்கள் திருமணமாகா நிலையில் பேராற்றல் கொண்டவர்கள், அவர்கள் சீற்றமடைந்தால் கட்டுக்கடங்கா ஆற்றலை வெளிப்படுத்துபவர்கள்; அழிக்கும் ஆற்றல் படைத்தவர்கள். பழந்தமிழர் வாழ்வில் இவர்களின் ஆற்றல் 'அணங்கு' என்ற வகையிலும் வெளிப்பட்டது ***(தமிழர் மானிடவியல், ப.237)***

எனப் பக்தவத்சல பாரதி பகர்கின்றார். இயற்கை படைப்புகளுள் பெண் தெய்வமாக உறைந்திருக்கின்றாள் என அன்றைய மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை,

தெண் திரைப்
பெருங் கடல் பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ (நற்.155:5-6)

என்ற பாடல் வரிகளில் கடலில் பெண் தெய்வம் உறைந்துள்ளதாக அன்றைய மக்களின் நம்பிக்கை புலனாகின்றது.

ஆண்களின் போர்க்கள வெற்றிக்குக் காரணமாகப் பெண் தெய்வத்தையே கருதியுள்ளனர். தொல்காப்பியத்தில் பெண் தெய்வமாகிய கொற்றவையை,

மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே (தொல்.புறத்.62)

என்ற நூற்பாச் சுட்டிக்காட்டுகின்றது. அக்கொற்றவைத் தெய்வம்,

ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை – மீளி
அரண்முருங்க ஆகோள் கருதி னடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும் (புறப்பொருள்.வெட்சிப்படலம்:19)

என்ற புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல பேய்கள் மிகுந்த படையினையுடைய, வெற்றித்திருவாகிய இறைவி எனச் சிறப்பிக்கப்படுகின்றமையை அறியவியலுகிறது. இவற்றால் மணமாகாத பெண் தெய்வங்கள் மூலம் எதிர்மறையான உணர்வுகள் பெண்களுக்கு மட்டும் இருப்பதாகவும், தனித்து வாழும் பெண்களின் நிறைவடையாத மனநிலையைக் காட்டுவதாக அன்றைய மக்கள் கருதியிருக்க வேண்டும்.

இயற்கையைத் தெய்வமாக வழிபட்ட காலத்தில் தமிழ்ச்சமூகத்தில் தாய்வழித்தலைமை நிலவியிருந்ததனைப் பாடல்கள் அடையாளம் காட்டுகின்றன. அடுத்து வந்த காலகட்டங்களில் தெய்வங்களுள் பாலினப் பாகுபாடு ஏற்படுத்தி, இயல்புகளைச் சமூக நடைமுறைகளுக்கு ஏற்றபடியாகப் புகுத்தியிருப்பதனைப் பாடல்கள் மெய்ப்பிக்கின்றன. இதன் வழி ஆண் தெய்வங்களின் துணைக்கரங்களாகப் பெண் தெய்வங்கள் விளங்கியதால் ஆண் ஆதிக்கம் உருப்பெற்றதன் தோற்றநிலை தெளிவாக அறியலாகிறது. தாய்வழிச் சமுதாயம் தந்தைவழித் தலைமை பெற்றதற்குத் தெய்வ வழிபாடு அடிப்படையாக இருப்பதனை முருகன்-வள்ளி, சிவன்-உமையம்மை, திருமால்-திருமகள், அணங்கு, கொற்றவை போன்ற கடவுளர்களின் பாடல்கள் சான்று பகர்கின்றன.

உடைமைச் சமுதாயத்தில் வாரிசுரிமை அடிப்படையில் சொத்துக்களைப் பெறவும், அரசு அமைக்கவும் சமூகம் தாய்வழித் தலைமையை விடுத்துத் தந்தைவழி மரபுரிமையை, தந்தையர்களை அடையாளங்காணும் பொருட்டு அமைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இத்தகைய ஆண்வழிச் சமூத்திலும் பெண் தன் இயல்புகள் குன்றாமல் தன் கடமைகளை ஆற்றியிருப்பதிலிருந்து உணரமுடிகின்றது.

தாய்வழிச் சமுதாயத்தில் பெண்ணின் தலைமைப்பண்பு மக்களைக் காக்கின்றதாகவும், தீமைகளை அழிக்கும் சக்தியாகவும் இருந்திருக்க வேண்டும் என்பதனைப் பெண்தெய்வ வழிபாட்டின் மூலம் அறியமுடிகின்றது. தொடக்க காலங்களில் பெண் தலைமையில் சமூகம் கொண்டிருந்த நம்பிக்கையும், மதிப்பும் புலனாகின்றது. எனவே, சங்ககாலத்திற்கு முற்பட்டு வாழ்ந்த மக்களிடம் இருந்த தாய்வழிச் சமூகத்தின் மரபுசார்ந்த இயல்புகள் சங்க நாட்களில் பெண் தெய்வ வழிபாட்டுக்கு மூலங்களாக்கப்பட்டிருக்க வேண்டும். காலப்போக்கில் பொதுவழிபாட்டிலிருந்து விலக்கப்பட்டு தனக்கான தன்குடும்பநலன் வழிபாடாக மாற்றம் பெற்றிருப்பதன் மூலம் பெண்ணின் இருப்புநிலை சமநிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கு மாறியதனை உணரமுடிகின்றது.

அகவாழ்க்கையில் மட்டுமல்லாது புறவாழ்க்கையிலும் கல்விப்புலமை, தன் கடமையறிந்து செயலாற்றும் தன்மை, இடித்துரைக்கும் பாங்கு போன்ற பண்புகளை ஔவை முதலான பெண்பாற் புலவர்களின் வாயிலாக அறிய முடிகின்றது. நாடாளும் மன்னனாக இருப்பினும் அவனை நெறிப்படுத்தும் திறன் பெண்ணுக்கு இருந்துள்ளது. மண்ணைக் காக்க ஆண்மகனைப் பெற்றுத் தருவதனைத் தன் கடமையாகக் கொண்டிருப்பினும், தந்தை, நாடாளும் மன்னன், கொல்லன், ஆண்மகன் ஆகியோரின் கடமைகளையும் துணிவுடன் எடுத்துரைப்பதன் மூலம் தாய்வழி மரபின் மறப்பண்பு வெளிப்படுகின்றது. எனவே, சங்ககாலம் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை உள்ளடக்கியதாக இருப்பினும் அவற்றில் பெண்டிரின் பங்களிப்புத் தலைமை சான்றதாகவே அமைந்திருப்பதனைச் சங்கப்பாடல்கள் மெய்ப்பிக்கின்றன. காலந்தோறும் பெண்களிடம் இத்தகைய தலைமைப்பண்புகள் தாய்வழிச்சமூகத்தின் மரபணுக்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதனை மறுக்கவியலாது.

துணைநூற்பட்டியல்

1) இலக்குமி ரதன் பாரதி சோ., நமது சமூகம், பழநியப்பா பிரதர்ஸ், சென்னை, 1979.
2) கைலாசபதி.க., பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1999.
3) சந்திரா சு.யாழ்., தொன்மவியல் கட்டுரைகள், அறிவுப்பதிப்பகம், சென்னை, 2009 (முதல் பதிப்பு).
4) சேதுப்பிள்ளை ரா.பி., தமிழ் இன்பம், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2010 (முதற்பதிப்பு).
5) பக்தவத்சலபாரதி, தமிழர் மானிடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், 2008 (இரண்டாம் பதிப்பு).

6) பக்தவத்சலபாரதி, தமிழர் மானிடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், 2008 (இரண்டாம் பதிப்பு).

7) மாணிக்கம் வ.சுப., தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2005 (இரண்டாம் பதிப்பு).

8) மாதையன் பெ., அகத்திணைக் கோட்பாடும் சங்கஅகக்கவிதை மரபும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009 (முதல்பதிப்பு).

9) மாதையன் பெ., தமிழ்ச்செவ்வியல் படைப்புகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011 (இரண்டாம் அச்சு).

ரோஸலிண்ட் மைல்ஸ்., ராதாகிருஷ்ணன் வி., (மொ.பெ.), உலக வரலாற்றில் பெண்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007 (மூன்றாம் அச்சு).

மகளிர் வர் ணனைவழி மிதவை மகளிரின் சமூகநிலை

இ.ஜெனிபா மேரி

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழாய்வுத்துறை

பெரியர் ஈ.வெ.ரா கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620 023

தமிழ்நாடு, இந்தியா.

பெண்களின் தோற்றப் பொலிவினையும் உறுப்பு நலனையும் உவமை கூறிப் புனைந்துரைப்பது மரபு. காதலர் இன்பத்துக்கு ஏதுவாகும் கூற்றுக்களில் நலம்புனைந்துரைத்தல் சிறந்ததொன்று தலைவியினுடைய கண், முகம், இடை, அடி முதலிய உறுப்புகளின் அழகைத் தலைவன் பாராட்டிக் கூறுவான். சங்க இலக்கியத்தில் இத்தகைய பாடல்கள் பல காணக்கிடைக்கின்றன. இவைதவிர அரசமகளிர் பற்றிய வருணனைப் பகுதிகளும் மிதவை மகளிர் பற்றிய வருணனைப் பகுதிகளும் இடம் பெறுகின்றன.

ஏவல் மகளிர் வருணனைகள் இடம்பெற்றிருந்தாலும் அவை மிக அரிதாகவே (பொருநர் ஆற்றுப்படை, முல்லைப்பாட்டு) இடம்பெறுகின்றன. மேற்குறித்த வர்ணனைகளின் வழி மிதவை மகளிர் பற்றிய சமூக நிலையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மிதவை மகளிர்

சங்க காலச் சமூகத்தில், கலையை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு, நிலையான வாழிடமுமின்றி, தமக்கான சமூக நிலைத்திறனுமின்றி வாழ்ந்த பாணர் முதலானோரை மிதவை மாந்தர் என்று அழைக்கலாம்.

அத்தகைய குலத்தைச் சார்ந்த பெண்கள் பாடினியர், விறலியர், ஆடுகளமகளிர் அகவன் மகளிர் என்று அழைக்கப்பட்டனர். பாணர் குலத்தில் பாடல்களைப் பாடிய பெண்பாலார் பாடினியர் என்றும், உணர்ச்சிகளை ஆடல் வழி அழகாகப் புலப்படுத்திய பெண்கள் விறலியர் என்றும், விழாக் களங்களில் ஆடிய மகளிர் ஆடுகள மகளிர் என்றும், அகவிக் கட்டுரைத்த மகளிர் அகவன் மகளிர் என்றும் அழைக்கப்பெற்றனர். பாடினியர், விறலியர் போன்றோர் பெரிதும் கலைஞர் கூட்டத்துடன் இயங்கியவராகவும், சில வேளைகளில் தனியே இயங்கியவராகவும் இலக்கியங்களில் சித்திரிக்கப் பட்டுள்ளனர். மேலும் பாட்டி, மதங்கி, பாடல் மகடூஉ, பாடுமகள், கிணைமகள், பாணிச்சி என்னும்

பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இக்கலை மகளிரையே மிதவை மகளிர் என்று இக்கட்டுரை குறிப்பிடுகிறது.

அறிந்த ஒன்றைக் கொண்டு அறியாத ஒன்றை விளக்குவதே உவமை. இதன் அடிப்படையில் இலக்கியங்கள் உடல் உறுப்புகளுக்கு மலர்களையும் அணிகலன்களையும் உவமையாகக் கூறியுள்ளன.

கூந்தல்

மகளிர் தம் கூந்தலைப் பலவாறாக அழகு செய்தனர். ஓதி என்று கூறும் ஒருவித தலைக்கட்டு வாழைப்பபூவின் வடிவில் அமைந்திருந்தது. (நற்:225) தழைத்து அடர்ந்த கூந்தலைக் கொன்றை, மை ஆற்றின் அறல் என்பவற்றிற்கு உவமையாகவும் கூறியுள்ளனர் (குறுந்:209,286).

முகம்

முகத்திற்கு மலர்ந்த தாமரை, குவளை மலர்களை ஒப்பிட்டுக் கூறுவர் (பரி.8:13; கலி.31, 64, 73).

கண்

பெண்களின் கண்களுக்கு உவமைகளாக நீலம், நெய்தல், குவளை, கருவிளை, கழுநீர், தாமரை, நறவம், பித்திகம், ஆகிய மலர்களும் அவற்றுள் நீலம், குவளை, நெய்தல், தாமரை ஆகிய மலர்கள் மையூட்டப்பட்ட அழகிய கண்களுக்கும், கருவிளையும் பித்தகமும் நீர் நிறைந்த கண்களுக்கும், குவளை, நெய்தல், நீலம் ஆகிய மலர்கள் பசலை அடைந்த கண்களுக்கும், நெய்தல் மலரின் கூம்பு உறங்கும் கண்களுக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன (நற்.111,317,632; பரி.2:53; 7:64; அகம்.269,294,295; புறம்.144).

வாய், பல்

பெண்களின் இதழ்களின் சிவப்பு நிறத்திற்குச் செவ்வாம்பல் மலரும், முருக்க மலரும் (பரி.8:16; அகம்:3) பற்களின் வெண்ணிறத்திற்கும், கூர்மையான அமைப்பிற்கும் முல்லை முகையும், மௌவல் முகையும் கூறப்படுகின்றன (கலி:22, அகம்:21).

மார்பு

மகளிரின் மார்பகங்களுக்குக் கோங்க முகையையும், தாமரை முகையையும் உவமைகளாகக் கூறுவர் (கலி:117, சிறுபாண்:72).

கை

கைக்கும், கை விரல்களுக்கும் காந்தள் முகையையும், காந்தள், நறவம், கோடல் ஆகிய மலர்களையும் காட்டுவர் (புறம்:144; சிறுபாண்:67; முல்லைப்.95; கலி.84; பரி.18:33; பட்டின.153)

அடி

தலைவியின் பாதங்கள் தாமரை மலரின் இதழ் போன்று மென்மையாக இருப்பதாகத் தலைவனுக்குத் தோன்றுகிறது (கலி.13)

உடலின் நலமும் உறுப்புகளின் மணமும்

தலைவியின் மேனி நலத்திற்குத் தாமரையும் ஆம்பலும் கூறப்படுகின்றன. வேனிற் காலத்தில் ஆம்பல் மலரினும் தண்ணியளாகவும் குளிர் காலத்தில் தாமரையின் வெம்மை போலவும் இருக்கின்றாள். (குறுந்.84, 376) முல்லை, வேங்கை போன்ற மலர்களின் நாற்றம் போன்று கூந்தலும் (அகம்.208,365), காந்தள், குளவி, குவளை போன்ற மலர்களின் நாற்றம் போன்று நுதலும் (அகம்.338; குறுந்.59) மணக்கின்றன.

குறிஞ்சி மலரின் நிறம் போன்று, தலைவியின் மேனி நிறம் அமைந்திருந்தது (நற்.301). பசலை ஏற்பட்ட போது பீரமலர், கொன்றை மலர் பொன்றும் இருந்தது (நற்.326; அகம்.398). மாமை நிறத்திற்குத் தாமரைப் பூவின் கோங்கினையும், சுணங்கிற்கு வேங்கை, ஞாழல் போன்ற மலர்களையும் உவமையாகக் காட்டுவர் (அகம்.319; நற்.191). மகளிரின் மென்மைத் தன்மைக்கு அனிச்சப்புபூவையும் கூறுவர் (குறள்.1111).

தொய்யில்

மகளிர் மணச்சாந்தினால் மார்பிலும் தோளிலும் அழகுறப் பூங்கொடி வடிவில் தொய்யில் எழுதினர் (கலி:18-3, 24:15, 64:8, 76:15; அகம்.389:6; நற்.225:7; குறுந்.276:4).

மேற்குறித்த உவமைகளின் வழி அரச மகளிர் திணைமகளிர், மிதவைமகளிர் ஆகியோரின் தோற்றப் பொலிவானது விளக்கப்படுகின்றது.

அரசமகளிர் பற்றிய வருணனை

சேரமாதேவி வான்மகளிர் தம்மிற்கூடிப் பிணங்குதல் கொள்ளும் அளவிற்கு அழகுடையவள். வண்டு மொய்க்கும் கூந்தலும், வளைந்த குழையும், ஆறிய கற்பும், அடக்கம் பொருந்திய மென்மையும், இன்மொழியே பகரும் இனிய முறுவலும், அமுதம் நிரம்பிய சிவந்த வாயும், குளிர்ந்த கண்களும், மூங்கிலை நிகர்க்கும் பெரிய தோளும், அசைகின்ற மாலையும், பரந்த தேமலும் உடையவள். மேலும் இளமுகை போன்ற மார்பினையும், வரிகளையுடைய அல்குலினையும், அசைந்த நடையினையும், ஒளி

பொருந்திய நெற்றியினையும், செவ்விய அணிகளையும், ஓவியத்தில் எழுதியது போன்ற வேலைப்பாடமைந்த நல்ல மனையின் கண்ணே இருக்கும் பாவை போன்ற நல்ல அழகு நலத்தையும் உடையவள் என்று பதிற்றுப்பத்து(14:13-15, 16:10-13; 21:33-37; 52:17-18; 55:1; 61:3-4; 65:6-10; 70:14-15; 81:27-31; 89:16-20; 90:48-50) குறிப்பிடுகிறது.

கருங்கூந்தலையும், முல்லைமுகை போன்ற சிரிப்பையும் உடையவர் என்று பாரிமகளிரும் (புறம்.117,120), கற்பின் மடமொழி எனத் திருமுடிக்காரியின் மனைவியும் கபிலரால் புகழப்படுகின்றனர். பேகனின் மனைவி செவ்வரி படர்ந்த குளிர்ந்த கண்ணையும், அழகிய மாமை நிறத்தையும் உடையவள் என்றும் (புறம்.147) பாண்டியனின் மனைவி அருவி தாழ்ந்த பெரிய மலைபோல ஆரம் பொலியும் மார்பினையும், தெய்வத்தன்மை அமைந்த கற்பினையும் அழகிய அணிகலன்களையும் அணிந்தவள் என்றும் (புறம்.198) போற்றப் பெறுகின்றனர்.

ஒளிபொருந்திய கூந்தலையும், நெற்றியையும், மயில் போன்ற சாயலையும் கொண்டு சீறூர்த் தலைவியர் மனைக்கு விளக்காக விளங்கினர் என்றும், கரிய கண்களையும், கூரிய பற்களையும் பருத்த தோள்களையும் சுணங்கு படர்ந்த மார்பினையும் நல்ல பொற்கொல்லர் செய்த பொன்னாலாகிய மேகலையையும் மாலையையும் அணிந்து அழகிய மாமை நிறத்துடன் முதுகுடி மன்னரின் பெண்கள் காணப்பட்டனர் என்றும் வருணிக்கப்படுகின்றனர்.

பூவேலை செய்யப்பட்ட ஆடையை உடுத்தி அணிகலன்களை அணிந்து அழகிய உந்தியையும், கற்பையும் உடையவள் அவியனின் மனைவி என்று புறநானூறும், தளிர் போன்ற மேனியையும், பரந்த சுணங்கையும், மூங்கில் போன்ற தோளையும், தாமரை முகை போன்ற மார்பினையும், நுடங்கும் இடையையும் உடையவள் கோப்பெருந்தேவி என்று நெடுநல்வாடையும் கூறுகின்றன.

திணைமகளிர் பற்றிய வருணனை

தலைவியானவள் கரிய பலவாகிய கூந்தலையும் திருந்திய அணிகலன்களையும் ஒளிமிக்க நெற்றியையும், தாமரை போன்ற மையுண்ட கண்களையும் முளை போன்ற ஒளிமிக்க பற்களையும், பவளம் போன்ற வாயினையும், மிக்க அழகினையுடைய மூங்கில் போன்ற தோளினையும் கொண்டவள். அரும்பிய முலையள், கொடியையும் மின்னலையும் போன்ற இடையினைக் கொண்டவள். நாயினது நாவைப் போன்ற சிறிய அடிகளை உடையவள். அழகிய மயில் போல அசைந்து நடக்கும் இயல்பினள். மென்பிணியவிழ்ந்த தண்கமழ் காந்தள் போல நாறும் நுதலையும் தளிரை யொத்த மேனியையும் கொண்டவள்.

வரையரை மகளிரைப் போன்ற சாயலைப் பெற்றவள் என்று தலைவியின் தோற்றப்பொலிவு வருணிக்கப் படுகின்றது.

பழையர் மகளிர், தழையுடை அணிதலால் பொலிவுற்ற பக்கங்கள் உயர்ந்து விளங்கும் அல்குலினை உடையவர் (அகம்.201) எனவும் கள்விலை மகளிர், வரிகள் விளங்கும் பணைத்த தோள்களையும் தேமல் விளங்கும் வயிற்றினையும் உடையவர் (அகம்.245) எனவும் நுளைமகள், பெருந்தோளையும் மதிமுகத்தையும் வேல் நோக்கையும் உடையவள் (சிறுபா.156-158) எனவும் பட்டினமகளிர், மணிகள் கோத்த வடங்களை அல்குலில் அணிந்தும் மயில் போலக் கால்களில் பொற்சிலம்பு ஒலிக்கவும் கைகளில் குறிய வளையல்கள் அணிந்தவராகவும் காணப்பட்டனர் (பெரும்.328-336) எனவும் உழவப் பெண்கள், மூங்கில் போன்ற தோளையும் பிடியினது கையை ஒத்த பின்னல் கிடக்கும் முதுகினையும் தொடிக் கையினையும் மயில் போன்ற சாயலையும் உடையவர் (சிறுபா.191-192; புறம்.395) எனவும் இடையர் மகள், அறல் போன்ற கூந்லையும், குழை அசையும் காதையும் மூங்கில் போன்ற தோளையும் நல்ல மாமை நிறத்தையும் உடையவள் (பெரும்:160-162) எனவும் மதுரை நகர மகளிர், சங்கு வளையல்கள் இறுகின முன்கையையும் மூங்கில் போன்ற தோளையும் மெத்தென்ற சாயலையும் முத்துப்போன்ற பல்லையும் மகரக்குழைக்கு ஏற்ற குளிர்ந்த கண்களையும் மடப்பத்தையும் உடையவர் (நெடுநல்:36-40) எனவும் திணை மகளிர் வர்ணிக்கப் பெறுகின்றனர்.

ஏவல் மகளிர்

ஏவல் மகளிர் முகில் போன்ற கருமையான கூந்தலுடன், இழையணிந்தும் இனிய முறுவல் பூப்பவராயும் மேனிலை மாடத்து உறைவாராயும் (பொருநர்.84-85) காணப்பட்டனர். போர்க்களப் பாசறையில் உள்ளவர், கூந்தல் கிடக்கின்ற சிறிய முதுகுடன், ஒளியுடைய வாளைக் கச்சோடு சேர்த்துக்கட்டியவர்களாய்க் காணப்பட்டனர் (முல்லை.45-47).

மிதவை மகளிர் பற்றிய வருணனை

புறநானூறும், பதிற்றுப்பத்தும், ஆற்றுப்படைகளும் மிதவை மகளிர் பற்றிய வருணனைகளை அதிகமாகத் தருகின்றன. ஐங்.47; பதிற்.49:1-3; 51:19-21; 54:3-6; கலி.79:4; புறம்.64, 70, 89, 105, 111, 133, 135, 139, 280; பொருநர்.25-47; சிறுபாண்.13-40 ஆகிய நூற்கருத்துக்களின் அடிப்படையில் மிதவை மகளிர் பற்றிய வர்ணனை பின்வருமாறு அமைகின்றது.

ஆற்றின் அறல் போன்ற கூந்தலையும், வாழைப்பூ போன்ற பனிச்சையையும், பிறை போன்ற நுதலையும் வில் போன்ற புருவத்தையும், குளிர்ந்த கண்களையும்,

இலவிதழ் போன்ற இன்மொழி பேசும் வாயையும், நுங்கின் இனிய நீரினை ஒத்த ஊறலையும், முத்துக்கள் போன்ற பற்களையும் கத்திரிகையின் குழச்சை ஒத்த அழகிய மகரக்குழை கிடந்து அசையும் காதையும், நாணத்தால் கவிழ்ந்த கழுத்தையும், அசைகின்ற மூங்கிலை ஒத்துப் பருத்த தோளையும் மெல்லிய மயிரையுடைய முன் கையையும் காந்தள் போன்ற மெல் விரலையும், கிளியின் வாயை ஒத்த உகிரையும், பிறர்க்கு வருத்தமெனத் தோன்றும் மார்பையும் நீரின் கண் சுழி போன்ற இலக்கணம் நிறைந்த கொப்புழையும் உண்டென உணரா வருந்தும் நுண்ணிடையையும், நிரலாக வண்டுகள் இருந்தாற் போன்று மணிகள் கோக்கப்பட்ட மேகலை அணிந்த அல்குலையும், நெருங்கித் திரண்ட தொடைகளையும், கணைக்காலுக்குப் பொருந்த அமைந்த நாயின் நாக்கை ஒத்த சிற்றடியையும் மயில் போன்ற சாயலையும் உடையவர் என மிதவை மகளிர் கேசம் முதல் பாதம் வரை வருணிக்கப்படுகின்றனர்.

ஒப்பீடு

அரசமகளிரின் அழகோடு வானுறைமகளிர் தங்கள் அழகை ஒப்பிட்டுத் தமக்குள் கூடிப்பிணங்குதல் கொள்ளும் அளவில், உயர்குடிப்பிறப்பின் பண்புகளோடு அறக்கற்பும் புகழும் சார்த்திய நிலையில் அரசமகளிர் பற்றிய வருணனை அமைகின்றது.

தலைவன் தலைவியின் மீது கொண்ட அன்பினையும், அன்பின் வழிவந்த காமத்தையும் வெளிப்படுத்தும் வகையிலும், இல்வாழ்விற்கான பண்புகளோடும் கற்பு நெறிகளோடும் திணைமகளிர் பாராட்டப்படுகின்றனர்.

தொல்காப்பியர் பெண்மைக்கான பண்புகளாக உயிரினும் மேலான நாணத்தையும் நாணத்தினும் மேலான சிறந்த கற்பையும் அச்சம், மடம் ஆகியவற்றையும் கற்பும் காமமும் நல்ல ஒழுக்கமும் பெண்மைத் தன்மை பொருந்திய பொறுமையையும் நிறையுடைமையையும் விருந்து போற்றும் மனநலமும் சுற்றத்தினரை ஓம்பலும் பிறவும் ஆகிய பண்புகளையும் குறிப்பிடுகின்றார்.

அரசமகளிர், திணைமகளிர் ஆகியோரது வர்ணனைகள் தொல்காப்பியர் கூட்டும் பண்புகளோடு பிணைக்கப் பெற்றுள்ளமையை உணரமுடிகின்றது. ஆனால் மிதவைமகளிர் பற்றி வருணனைகள் காமம் சார்ந்தே பெரிதும் கூறப்பட்டுள்ளன. எனவே அக்கால மக்களின் பார்வை மிதவை மகளிரைப் பொறுத்தவரை வேறுபட்டே இருந்தமை புலனாகின்றது.

அரசியல் ஆதிக்கம் மற்றும் பொருளாதார அடிப்படையில் ஏற்பட்ட மாற்றத்தால் வீரயுகத்தின் பெண்குலக் கலைஞர்கள் நிலவுடைமைக் காலத்தில் பரத்தையர்களாக மாறினார்கள் எனும் கார்த்திகேசு சிவத்தம்பியின் கூற்று எண்ணுதற்குரியது.

சங்க இலக்கியங்களில் மிதவை மகளிராக வலம் வரும் பாடினியர், விறலியர், ஆடுகள மகளிர் போன்றோர் இசையையும் கூத்தையுமே தம் வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டிருந்ததால் அக்கால இல்வாழ் மகளிரைப் போன்ற வாழ்க்கைமுறை இவர்களுக்கு வாய்க்கவில்லை. நிலவுடைமையோடு ஆணாதிக்கமும் வளர்ச்சி பெறத் தொடங்கிய அக்காலத்தில் இக்கலை மகளிர் பிற மகளிரைக் காட்டிலும் உரிமையோடு உலவி வந்தாலும் ஆணாதிக்கச் சமூகத்தின் விளைவுகளுக்கு அவர்களும் ஆட்பட வேண்டியிருந்தது. இது அவர்களது வாழ்வையே புரட்டிப்போடுமாறு அமைந்துவிட்டது எனலாம்.

பார்வை நூல்கள்

- தாணம்மாள் இல., சங்க இலக்கியத்தில் மலர்கள் வானதி பதிப்பகம், சென்னை, டிசம்பர் 1981 (முதற்பதிப்பு).
- பாலசுப்பிரமணியன் சி., சங்க கால மகளிர் நறுமலர்ப் பதிப்பகம், பாரிநிலையம், சென்னை, டிசம்பர் 1983 (முதற்பதிப்பு).
- புலியூர்க் கேசிகன், தொல்காப்பியம், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, சூன் 2010 (முதற்பதிப்பு).
- மாயாண்டி இரா., சங்க இலக்கியத்தில் கற்பனை, எழிலகம், சென்னை, 1980 (முதற்பதிப்பு).

பழந்தமிழ் நூல்களின் முகப்பு அட்டைகள்

முனைவர் **ந. இராஜேந்திரன்**,
தமிழ் உதவிப்பேராசிரியர், மொழித்துறை,
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோவை - 28.

பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் விளைவாக ஏற்பட்ட சமூக மாற்றங்களின் பின்னணியில் உருவான அச்சுச் சாதன வெளிப்பாட்டு வடிவங்களுள் ஒன்று 'புத்தகம்' தமிழ்ச் சமுகப் பண்பாட்டு வரலாறு குறித்த முழு விவாதத்திற்கு ஆவணமாகத் திகழ்பவை இவை. இந்த அச்சேறிய நூல்களின்வழி அறிவுத்தளத்தைப் பொதுவெளியில் பரப்புவதற்கு முயன்ற ஆளுமைகளுள் குறிப்பிடத்தகுந்தவர் உ.வே.சாமிநாதையர் (ப.சரவணன், சுவாமிநாதம், 2015). இவரைப்போன்றே ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் போன்ற சிலர் ஏட்டுச்சுவடிகளில் தவழ்ந்த பழந்தமிழ் நூல்களைக் காகிதப்பிரதிக்கு அரியனை ஏற்றி உயிர்கொடுத்து ஆவணப்படுத்தினர்.

அவ்வாறு ஆவணப்படுத்திய பழந்தமிழ் நூல்கள் இன்று மீண்டும் விளிம்புநிலையில் உயிருக்குப் போராடுகின்றன. இவ்வாறு விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட பழந்தமிழ் நூல்களைத் தேடிக்கொணா;ந்து சாகாவரம் பெற்ற கணினியில் பதிவேற்றம் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால்தான் இனிவரும் தலைமுறையினர் தமழ்மொழியின் சிறப்புப் பற்றியும் தமிழின் தொன்மை பற்றியும் எளிதில் அறிந்துகொள்ள முடியும்.

அவ்வாறான நூல்களின் முகப்பு அட்டைகள் கீழே அடைவுபடுத்திக் கொடுக்கப்பெற்றுள்ளது. இம்முகப்பு அட்டைகள் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மையநூலகம், கோவிலூர் மடாலய நூலகம், மதுரைத் தமிழ்ச்சங்க நூலகம், மதுரை சாந்தி முருகேசன் தனிநபர் நூலகம், பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி சிதம்ர அடிகள் நூலகம் முதலிய பல்வேறு நூலகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. (அனைத்து நூலகத்தாருக்கும், நூலகருக்கும் நன்றி).

சேந்தன்திவாகரம்
மூலபாடம்
தாண்டவராயமுதலியார்
குருநாதசுவாமிகளால்
அருணகிரிமுதலியார்

திருவள்ளுவநாயனார்
திருக்குறண்மூலமும்,
பரிமேலழகருரையும்.
ஆறுமுகநாவலரவர்களால்


பெரியபுராணம்
Madras:
1893.
Registered Copy-right.

இலக்கணவிளக்கம்
மூலமும் உரையும்.

பத்துப்பாட்டுமூலமும்
நச்சினார்க்கினியருரையும்.
1889.
[Copyright Registered.]

A TAMIL
DICTIONARY OF PROPER NAMES.
சிறப்புப்பெயரகராதி.
1903.
Registered Copy Right.

திருநெல்வேலித்தலபுராணம்
முத்தமிழாகரஅச்சுக்கூடத்திற்


அருவதைப்பரணி
ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்
ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்
அ-இராமசுவாமிகளால்
பரிசோதித்து
சென்னை:
மிமோரியல்அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

சிவஞானபோதச்
சிற்றுரைவிளக்கம்.
1918

HAND BOOK
OF
SANITARY SCIENCE
BY
PANDIT S. M. NATESA SASTRI, B. A., M. F. L. S.
For the use of Students
சுகசந்தர்சனதீபிகை
இது
மாணாக்கர்கள் சுகாதாரமுறைகளை
எளிதில் அறிந்துகொள்ளும்படி
பண்டித ச. ம. நடேசாஸ்திரியாரால்
பலநூல்களை ஆராய்ந்து எழுதப்பெற்றது.
"செந்தமிழ்ப்" பிரசுரம்—கள
மதுரைத்
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு
1905
[விலை அணா-12.]

கணபதிதுணை.
திருச்சிற்றம்பலம்.
புவனேந்திரகாவியம்.
இது
இராமகாதபுரம் வமிஸ்தானவித்துவானும்,
முதுகுளத்தூர் கர்னம் தேவப்பலமை மகா-ள-ள-ஸ்ரீ
நல்லவீரப்பபிள்ளையவர்கள்
பௌத்திரரும், மகா-ள-ள-ஸ்ரீ
இராமசாமிபிள்ளையவர்கள்
பத்திரரூமான மதுரகவி மகா-ள-ள-ஸ்ரீ
சுப்பையாபிள்ளையவர்கள்
இயற்றி,
இராமகாதபுரம் வமிஸ்தான மஹாவித்வான் துவாத்திரிம்
சதவதானி ஸ்ரீமத்-
சரவணப்பெருமாள்க்கவிராயர் அவர்களாற்
பரிசோதித்து,
ஸ்ரீமான் கோப்பாயர் முனிஸ்ரீ மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான்
M. B. முத்துராமலிங்க சேதுபதி
மதுரைத் தமிழ்ச்சங்க அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1908.

கடவுள் துணை
செந்தமிழ்
மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை
"எனைத்தாறு நல்லவை கேட்க வனைத்தாறு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.
[சுக்ரு-கூ.] விசோதிகிருது ஆனி பங்குனி மீ [பகுதி-டு
உள்ளுறை.
Professor Julien Vinson.
பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.
மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.
1912.

பெத்தாச்சி செட்டியார்
புலவராற்றுப்படை.
அமிர்தம், சுந்தரநாத பிள்ளை
ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ்.
1916.
விலை அணா 4.

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY
KARAIKUDI

பரிபாடல் மூலமும்
ஆசிரியர் பரிமேலழகரியற்றிய உரையும்.
சென்னை,
வே. சாமிநாதையரால்
பரிசோதித்து,
தாம் நூதனமாக எழுதிய
பலவகையான குறிப்புக்களுடன்
சென்னை:
கமர்ஷியல் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றன.
விலை ரூபா. 2.8.0.
1918.
Copyright Registered.

ஸ்ரீ
ஸ்ரீமத் கம்பராமாயணம்
கவிச்சக்ரவர்த்தியாகிய
கம்பராட்டாழ்வா ரருளிச்செய்தது
முதலாவது
பால காண்டம்.
இது
அ. சுந்தரநாதபிள்ளை அவர்களால்
பரிசோதித்து,
சிதம்பர முதலியாரவர்களது
சென்னை:
ஸ்ரீ வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1911.

கணபதிதுணை.
மகாபாரதம்.
நல்லாப்பிள்ளையவர்களியற்றியது.
இது
அமிர்தம்பிள்ளை குமாரராகிய
அ. சுந்தரநாதபிள்ளை அவர்களால்
பரிசோதித்து.
சிதம்பர முதலியாரவர்களது
1911.
Registered Copyright.


புண்ணிய சாங்கோபாங்க முயற்சி.
அலெக்ஸிஸ் காரேஸ் என்னும்
முதற் புத்தகம்.
1884.

ஞானவாசிட்ட
பிறைசை-அருணாசலகவாமிகள்
ஆ. எதிராஜமுதலியாரால்
Revised & Enlarged.

கவிசேஷ விரித்துரை.
[All rights reserved.]

அநந்த விஞ்ஞேய பாகீரதி
P. A.
1917.
[அணா 10.

சூடாமணி நிகண்டு.
மூலமுமுரையும்,
ஆறுமுகநாவலரவர்கள்
1908.

பிரமாசாது பூதியும்
சிவானந்தசாரமும்
1912.


பிரபோத சந்திரோதய வசநம்
1911
[Copyright Registered.]
[விலை ரூபா 1]

சரசாங்கி நாடகம்
1897.

கட்டளைக்கொத்து.
PRINTED BY
No. 84, Anchavappan Street,
Madras.
1904.
Registered Copy Right.

நாலடியார்.
வேதகிரிமுதலியார் அவர்கள்
1919.

பிள்ளைத்தமிழ்.
பொற்றிக்கலிவெண்பா.
திருவூசல்.
ஆ. வேலாயுதபிள்ளை
சொக்கலிங்கச்செட்டியாரால்
1912.